விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 02 புதன்கிழமை (17.06.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 180

குருவாரம்
25வது ஆண்டு பீடாரோகணம்
தவத்திரு கணேசானந்த
மகாதேவசுவாமிகள்



ஆச்சிரம மண்டபம்
21.06.2015
ஞாயிறு
கிளிநொச்சி
மகாதேவ ஆச்சிரமம்
(C-1279)

# வாக்குறுதிகளை அரசு நிறைவேற்ற தவறிவிட்டது



## கூட்டமைப்பு குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் ஆகிய இருவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அவர்கள் எம்மை ஏமாற்றிவிட்டார்கள். எனவே குறித்த விடயம் தொடர்பில் எதிர்வரும் 23-ம் திகதி நாடாளுமன்றம் கூடும் வேளையில் அவர்களுடன் பேசி ஒரு முடிவை எடுக்க உள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளும்ன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## வருட இறுதியில் ஒபாமா வருகிறார்



(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இந்தவருட இறுதியில்இலங்கை வருவார் என்று 24ஆம் பக்கம் பார்க்க....

## விமானப்படைக்கு புதிய தளபதி !



(கொழும்பு)

விமானப்படையின் புதிய தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள எயார் மார்ஷல் ககன் புலத்சிங்கள, போர் இடம்பெற்ற 24ஆம் பக்கம் பார்க்க....

## நீதிமன்றத் தாக்குதல் மற்றொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்ற கட்டிடத் தொகுதி மீது தாக்குதல் மேற்கொண்டார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட வரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

நீதிமன்ற கட்டிடத்தின் மீது கடந்த மே மாதம் 20 ஆம் திகதி தாக்குதல் மேற்கொண்டமை மற்றும் வளாகத்தில் நின்றிருந்த வாகனங்களை அடித்து சேதமாக்கியமை தொடர்பாக வீடியோ ஆதாரங்களை திரட்டிய கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த விசேட குற்றத்தடுப் 23ஆம் பக்கம் பார்க்க....

## சந்திரிகாவை களமிறக்க சுதந்திரக்கட்சியினர் திட்டம்!



(கொழும்பு)


பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பிரதமர் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பெயரிடுவதற்கு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் பிரதமர் வேட்பாளராக போட்டியிட மஹிந்த ராஜபக்ஷவுக்கு சந்தர்ப்பம் கிடைக்காத பட்சத்தில், அவர் வேறு கூட்டணியின் ஊடாக தேர்தலில் களமிறங்கினால் அவருக்கு போட்டியாக களமிறங்க கூடிய ஒருவர் சந்திரிகா குமாரதுங்க என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களில் அதிகமானோர் அடங்கிய குழுவினரின் கலந்துரையாடலின் போது இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிறுவனரான பண்டாரநாயக்கவின் இரத்த உறவான சந்திரிகா சுதந்திர 23ஆம் பக்கம் பார்க்க....

## நயினைத் தாய்க்கு இன்று கொடி



(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை இரவு முத்துச் சப்பறமும், 27 ஆம் திகதி பகல் விசேட கருட சர்ப்ப 24ஆம் பக்கம் பார்க்க....

## பெண்ணின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் வீட்டுக்கிணறு ஒன்றிலிருந்து பெண்ணொருவரின் சடலத்தை கிளிநொச்சிப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்டவர் அம்பாள் குளத்தைச் 24ஆம் பக்கம் பார்க்க....

## 15 பேர் நேற்றிரவு பொலிஸாரால் கைது

(கரணவாய்)

பொது இடத்தில் மது அருந்தினர் என்ற குற்றச்சாட்டில் 15 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று இரவு 8.00 மணிக்கு 23ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த - மைத்திரியை இணைக்கும் முயற்சி தீவிரம்





(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும், தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் இணைக்கும் முயற்சியில் சுதந்திரக் கட்சி ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கூடிய 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்நெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தேர்தல் சட்டம் சிறிய கட்சிகளுக்கு ஆபத்து

நாடாளுமன்ற தேர்தல் முறையை மாற்றும 20ஆவது சட்டத் திருத்தம் சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகளை ஒழித்திவிடும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறுகிறது. இன்னும் சில ஆண்டுகளில். இலங்கையில் சிறிய மற்றும் சிறுபான்மை கட்சிகளே இல்லாத சூழலை உருவாக்குவதே பெரும்பான்மை இன மக்களின் இரு பெரும கட்சிகளின் நோக்கம் என அக்கட்சியின் பொதுச் செயலர் ஹஸன் அலி தெரிவித்தார்.

அமைச்சரவை அங்கீகரித்துள்ள அந்த சட்டத் திருத்தம் முன்னெடுக்கப்படுமாயின் இன்னும் சில ஆண்டுகளில் அனைத்து சிறிய கட்சிகள்பெரும்பான்மை கட்சிகளுடன் சங்கமிக்கும் நிலையே ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார். (எ-11)

## டயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்

வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=

தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088

**108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள் (336)

## அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை.**
**வட்டாரம்:-07**
**ஆதன இலக்கம்:114 (புதியபதிவு)**
**சங்கரப்பிள்ளை வீதி**

வட்டாரம் 07 சங்கரப்பிள்ளை வீதி, ஆதன இலக்கம் 114 (புதியபதிவு) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று ஆனைக்கோட்டை இறை **பிரதேச செயலகம் சண்டிலிப்பாய், பிரதேச சபை மானிப்பாய் (வலி தென்மேற்கு) கிராம சேவையாளர் பிரிவு ஜே/133, "சொக்கன் தோட்டமும் வத்தை வளவும்")** என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 02 குளி 04 கொண்ட இவ்வாதனமானது தற்போது ஜேர்மனியில் வதியும் பாலச்சந்திரன் கைம்பெண் ஜெகதீஸ்வரி ஆகிய இவரால் தத்துவக்காரர் கூளாவடி மேற்கு லேன் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காசிபதி றமணன் மூலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சுப்பிரமணியம் கிருபாகரன் என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.எம்.தியாகராஜா முகதாவில் நிறைவேறிய 16068 ஆம் இலக்க 29.03.2015 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். **"சொக்கன் தோட்டமும் வத்தை வளவும்"** நிலப்பரப்பு 02 குளி 04 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் சுப்பிரமணியம் கிருபாகரன் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

**தவிசாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.** (774)

# கூட்டணி அரசாங்கமே நாட்டுக்கு தேவை

(கொழும்பு)

நாட்டுக்கு எதிர்கால அவசியமாக இருப்பது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி அரசாங்கம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி தெரிவிப்பு

தம்பதெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் ஒன்றிணைவோடு எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெற்று கூட்டணி அரச்ாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும்.

நாட்டின் உருமாற்றத்தையே தற்போது மேற்கொள்ள வேண்டும். அதற்காக ஐக்கிய தேசிய கட்சியா, மக்கள் விடுதலை முன்னணியா என்பது முக்கியமில்லை. நாட்டு மக்களின் அவசியத்திற்காக நாட்டின் எதிர் காலத்தை பாதுகாப்பதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## மேசன்மார்கள் தேவை

**யாழ்/மொறிஸ் கட்டிடத் தொழில் நிபுணர்:-**
மாபிள், கம்பி கட்டுதல், மேசன் ஆகியோர் தேவை. தகுந்த உயர் சம்பளமும் நிரந்தர வேலையும் தொடர்ச்சியாக வழங்கப்படும்.
**உடன் தொடர்பு கொள்ளவும் 0776057480**
**யாழ்/மொறிஸ் கட்டிடத் தொழில் நிபுணர்:-**
எப் பிரதேசத்திலும் சகலவிதமான கட்டிட வேலைகள் அனுபவ மிக்க பொறியியல் ஆட்களைக் கொண்டு மிக நேர்த்தியாகவும், குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
(சட்றிங் அடிக்க 01SQUR -Rs-5500/=)
**0776057480**
வீட்டுக்குரிய அலங்கார சோபா செற்றிகள் உத்தரவாதத்துடன் கம்பனி மூலம் பெற்றுத் தரப்படும். -
**தொடர்பு கொள்க:-0773222900** (750)

## பற்சிகிச்சை நிலைய கட்டிட வேலைக்கான கூறுவிலை கோரல்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் அமையும் மேற்படி கட்டிட வேலைகளை பொறுப்பேற்றுக் கொண்ட பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் அதன் வேலைகளுக்கான கூறுவிலை விண்ணப்பங்களை அலுவலகத்தில் வழங்கி வருகின்றோம். கூறுவிலை விண்ணப்பங்களை பூர்த்தி செய்து 22.06.2015 பி.ப 2.00 மணிக்கு முன்னர் **தலைவர் பாடசாலை அபிவிருத்திக்குழு, கொக்குவில் இந்துக் கல்லூரி** என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும். அன்று 2.00 மணிக்கே கூறுவிலைகள் திறக்கப்படுமென்பதால் உரியவர்கள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**பா.அ.குழு**
**கொக்குவில் இந்துக் கல்லூரி**

**திரு.க.கண்ணதாசன்**
**செயலாளர்** (சி-1296)

## காணி விற்பனை

மட்டுவில் தெற்கு, பருத்தித்துறை வீதியில், துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:-0778730129**

**WESTERN UNION MONEY TRANSFER** உலகெங்குமுள் உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392 (சி-1293)

Sri Lankan – German Development Cooperation

Ministry of Skills Development and Vocational Training

german cooperation DEUTSCHE ZUSAMMENARBEIT

In cooperation with Schweizerische Eidgenossenschaft, Confédération suisse, Confederazione Svizzera, Confederaziun svizra. Swiss Confederation. Federal Department of Justice and Police FDJP, State Secretariat for Migration SEM

Vocational Training in the North and East of Sri Lanka (VTN)

# Vacancies for English teachers

The German International Cooperation (GIZ) supports vocational training in Sri Lanka. In order to improve training capacities at the National Vocational Qualification (NVQ) levels 1-4 and enable candidates from the region to obtain the required entrance qualification for further training, existing vocational training providers in the Northern and Eastern Province are promoted. To fulfil the requirements of the private sector and to permit the trainees to be further educated, English is an essential requirement. Therefore the VTN Project invites qualified candidates to apply as,

## ENGLISH TEACHERS for the VOCATIONAL TRAINING SECTOR

English teachers are needed for all districts of the Northern and Eastern Provinces. Suitable applicants will get the possibility to receive a

Sri Lanka. To apply, the following requirements are demanded:

- Your English knowledge must be very good in speaking, reading and writing. You should have full operational command in English, and should be able to handle complex detailed argumentation.
- You must have experience or a background in teaching. You have practical experience in teaching groups in e.g. schools or universities or you have studied teaching.
- Women are given priority.

The required qualifications are:

- Bachelor's Degree (English / English Literature) CELTA or equivalent preferred. OR,
- ESOL (English for Speakers of other Languages) Trinity College London OR,
- Any other Diploma in English/ English Teaching, equivalent to the above OR,
- Very Good User in English - 7 according to scale International English Language Testing System (IELTS) OR,
- Retired, trained English teachers of Government schools or Teachers of registered schools of the Ministry of Education

If you fulfil the requirements, send us an envelope with the following documents all in English:

1. Application including the description of your English teaching experience. Please mention also where you live and whether you plan to move.
2. Curriculum Vitae
3. Copies of all relevant certificates.

*Please send your application to:*

Dr.Siddhika Senarathne,
Director-Planning Research & Development
VTA, Nipunathapiyasa,
354/2, ElvitigalaMw, Colombo 05.

**The deadline for the applications is June 28th**
Suitable applicants will be invited for a job interview.


National Apprentice and Industrial Training Authority | Vocational Training Authority | KFW | giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

(சி-1297)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் படம்-68

இடம்: நாவாந்துறை.




**இனங்களால் வேறுபட்டாலும் தாய்மை என்பது ஒன்றே!**

குறிப்பு: அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16
தபால் முகவரி: ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:
றெக்ஸ்மன்,நாவாந்துறை.

## நயினை பாமாலை



நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உங்கள் வலம்புரியில் நயினாதீவு நாகபூஷணி அம்மன் பாமாலை வெளிவரும்.

உங்கள் கவிதைகளை அனுப்பி வையுங்கள்.

**இல.3,2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.**

# ஹெரோயின் விற்ற கான்ஸ்டபிள் கைது

## தாயும் மகனும் அதிரடிப்படையிடம் அகப்பட்டனர்

(கொழும்பு)

**ஹெரோயின் போதைப் பொருட்களை விற்பனை செய்ததாக கூறப்படும் மேல்மாகாண வடக்கு விசேட குற்றப்பிரிவின் பொலிஸ் கான்ஸ்டபிள், விசேட அதிரடிப்படை பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் அந்தக் கான்ஸ்டபிளுடன் அவருடைய தாய் மற்றும் மகனையும் கைதுசெய்துள்ளதாக விசேட அதிரடிப்படை பொலிஸ் அறிவித்துள்ளது.**

புலனாய்வு தகவ ல்களின் அடிப்படையில் ஆட்டோவில் 201 ஹெரோயின் பக்கற்றுக்களை கொண்டு சென்றுகொண்டிருந்த போதே வத்தளையில் வைத்து கைது செய்துள்ளதாக விசேட அதிரடிப்படை அறிவித்துள்ளது.

அவ ருக்கு போதைப் பொருள் கிடைத்தமை தொடர்பில் தேடிபார்த்தபோது பேலியகொடை பொலிஸாரினால் அந்த கான்ஸ்டபிளுக்கு போதைப்பொருள் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. அந்த போதைப் பொருட்க ளுக்கான பண த்தை கான்ஸ்டபிளின் தாய் மற்றும் மகன் பெற்றுக் கொள்வதற்காக வருகைதந்தபோதே கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் வத்தளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். (இ-5)

# ஆளும்கட்சியா எதிர்க்கட்சியா ?

## குழப்பத்தில் எஸ்.பி.திஸாநாயக்க

(கொழும்பு)

நாட்டில் தற்போது பாரிய அளவிலான குழப்ப நிலை தோன்றியுள்ளதாக அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உடுனுவர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவி க்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தல் ஒன்று வருவதாக கூறுகின்றார்கள்.எனினும் காணவில்லை. நாட்டில் மிகவும் குழப்பமான நிலைமை ஒன்றே நிலவுகின்றது.

நான் ஆளும் கட்சியா? அல்லது எதிர்க்கட்சியா? என்று எனக்கு தெரியவில்லை. எனினும் நான் எதிர்க்கட்சி என்று கூறுவதற்கே விரும்புகின்றேன்.

தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சு பதவி பெற்றுள்ளேன். தற்போது பாரிய சிக்கலுடனே நாடு செல்கின்றது.எனினும் இவை அனைத்திற்கும் மத்தியில் எதிர்காலத்தில் நாட்டை சரியான ஒரு பாதையில் கொண்டு செல்ல கூடிய திறன் எங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு காணப்படுகின்றதென எங்களுக்கு நம்பிக்கையுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஜனாதிபதி தப்பித்தார்

சூடான் ஜனாதிபதி உமர் அல் பஷீர், தென்னாபிரிக்காவில் இருந்து, நேற்று முன்தினம் விமானத்தில் நாட்டிற்கு தப்பிச் சென்றுள் ளார்.

சூடானில், டார்பர் நகரில், அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில், 3 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இதையடுத்து, போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பாக, நெதர்லாந்தில் உள்ள, சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பஷீர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்நிலையில், ஆபிரிக்க யூனியன் கூட்டத் தில், கலந்து கொள்ள ஜோஹன் ஸ்பர்க் சென்ற பஷீரை, கைது செய்யுமாறு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், தென்னாபிரிக்காவுக்கு உத்தரவிட்டது.

இது தொடர்பாக, பிரிடோரியா நீதிமன்றில், விவாதம் நடந்து கொண்டிருந்த போது பஷீர், தனி விமானத்தில், சூடானுக்கு தப்பிச் சென்று விட்டார் எனத் தெரியவருகிறது. (இ)

# ராசி பலன்

17.06.2015
(ஆனி 02, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
பிரதமை முன்னிரவு 7.53 மணிவரை
மிருகசீரிடம் காலை 6.32 மணிவரை
இராகுகாலம் 11.53-1.23 மணிவரை
சுபநேரம் 4.23-5.53 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | புதன் | சூரி செவ் சந் |
| | இன்றைய கிரக நிலை | | குரு சுக் |
| | | | |
| | | சனி | ராகு |

**மேடம்:** சவால்களை சமாளிக்கும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

**இடபம்:** தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வியாபார விருத்தியுண்டு, விவாதங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்:** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சயன சுகக் குறைவான நாள், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழிபோடும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**கன்னி:** விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.

**துலாம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், வெளியூர்ப் பயணங்களால் ஆதாய முண்டு.

**விருச்சிகம்:** எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் அமைதிகாண வேண்டிய நாள்.

**தனுசு:** சுற்றத்தார் வரவால் சுகம் காணும் நாள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், பயணங்களால் பலனுண்டு, பால்ய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்:** கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக்கொள்வீர்கள், பிரியமானசிலரின் சந்திப்பு இடம் பெறலாம், தேகநலன் சீராகும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**கும்பம்:** நட்பு வட்டம் விரிவடையும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மீனம்:** தொலைபேசி வழியில் உற்சாகம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 220**

## பொறாமையிலிருந்து விடுதலை!

...**பா**ருங்கள், நீங்கள் சடங்கு களைச் செய்வதாகத் தீர்மானித்தால், அதை மிகுந்த சிரத்தையுடன் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் ஒரு ஆழமான தொடர்பு இருக்கும் உணர்வுடன் செய்யுங்கள். இவ்வாறு செய்தீர்களானால், அதைப் பற்றிப் பேசமாட்டீர்கள்.

சடங்குகளின் வழியைப் பின்பற்றுவதாக தீர்மானித்தால், பொறுப்பும் சிரத்தையும் பிரதானமாக இருத்தல் வேண்டும். அதனால் மிகுந்த சிரத்தையுடன் செய்யுங்கள். இங்கு சடங்கு முறை வழிபாட்டிற்கு நூற்றுக்கணக்கான வழிமுறைகள் இருக்கின்றன. அதில் எதைப்பின்பற்றுவது என்று குழம்பிக் கொண்டிருக்க வேண்டாம். வெறுமனே ஏதாவது ஒரு வழியைப் பின்பற்றுவதென திர்மானித்து அதை பொறுப்புடன் செய்யவும். பொறுப்புணர்வுதான் பலனளிக்கிறதே தவிர, சடங்குகளே அல்ல.

மேலும் இன்னொரு விஷயம்.. உடனடி விளைவை எதிர்பார்க்காதீர்கள். இன்று ஒவ்வொருவரும் உடனடி தேநீர், உடனடி காபி போல உடனடி விளைவை விரும்புகின்றார்கள். நம்மில் பலரும், மற்றவர்களுடைய பிரார்த்தனைகளுக்குச் சீக்கிரமாக பதில் கிடைத்து விடவதாகவும், நாமும் நமது வழிபாட்டு முறையை அவர்களது வழிபாட்டு முறையைப் போல மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் எண்ணுகின்றோம். இவையெல்லாம் அபத்தமானது. வழிபாட்டில் கூடவா இவ்வளவு ஒப்பிடுதல்? நீங்கள் செய்யும் எதையும் பொறுப்புடனும் விசுவாசத்துடனும் செய்துவிட்டு, மற்றவற்றை அப்படியே விட்டுவிடுங்கள் தானாகவே நடக்க வேண்டியது நடக்கும்மேலும் சடங்குகளை பின்பற்றும் பொழுது அவற்றின் பின்னாலுள்ள அறிவியலைப் புரிந்து கொண்டு செய்ய முயற்சி செய்தால், உங்கள் மனமும் சடங்குகளிலேயே சிக்கிக் கொண்டு விடாமல், சரியான விதத்தில் இசை



வுடன் இருக்கும். எந்தஒரு மதத்தின் அல்லது சடங்கின் இறுதி நோக்கமும் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இசைந்திருப்பதேயாகும். இது சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் புரிந்து கொள்ளப்படல் வேண்டும். சடங்குகள் கடவுளர்க்கு லஞ்சம் கொடுப்பதற்கான வர்த்தக பரிவர்த்தனை அல்ல. அவை நீங்கள் உங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக உருவாக்கும் வங்கி இருப்புக்களும் அல்ல. அவை யார் அதிகமாகச் செய்கிறார்கள் என்பதைப் பார்ப்பதற்கான மாற்றவருடனான ஓட்டப்பந்தயமும் அல்ல. அதனால் ஒப்பிடுதலை நிறுத்திவிட்டு நீங்கள் செய்வதில் உள்ள தீவிரத்தை உணர்ந்து கொள்ள ஆரம்பியுங்கள். எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது... மூன்று பேர் சேர்ந்து ஒரு தொழில் தொடங்கினர். அவர்கள் தொழி லில் கடவுளையும் ஒரு பங்குதாரராகச் சேர்ந்துக் பொள்வது என்று தீர்மானித்தனர். அவர்களுக்கு வரும் லாபத்தில் ஒரு சத விகிதத்தை கடவுளுக்குக்கொடுத்து விடுவ தாகவம் முடிவு செய்தனர். அவர்கள் தொழிலை ஆரம்பித்து எதிர்பாராத விதமாக அதிக லாபம் அடைந்தனர். பிறகு தான் பிரச்சினை வந்தது... கடவுளுக்கு எப்படி இவ்வளவு கொடுப்பது? ஒவ்வொருவரும் ஆலோசனை கூறினர். முதலாமவன் சொன்னான் சரிநாம் ஒரு வட்டம் வரைந்து எல்லப் பணத்தையும் மேலே எறிவோம் வட்டத்திற்கு உள்ளே விழுவது கடவுளுக்கென்றும் வெளியே விழுவது நமக்கென்றும் வைத்துக்கொள்வோம். இரண்டாமவன் சொன்னான் அப்படி வேண்டாம் நான் ஒரு சிறந்த யோசனை சொல்கிறேன். நாம் ஒரு பெரிய வட்டம் வரைந்து எல்லாப் பணத்தையும் மேலே எறிவோம். உள்ளே விழுவது நமக்கென்றும் வெளியே விழுவ்து கடவுளுக்கு என்றும் வைத்துக்கொள்வோம். மூன்றாமவன் சென்னான் பாருங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். எப்படியும் கடவுள் நமக்கு மேலே தானே இருக்கின்றான் எல்லாப் பணத்தையும் மேலே எறிவோம். அவருக்க வேண்டி யதை அவர் எடுத்துக் கொள்ளட்டும். கீழே விழுவதை நாம் எடுத்துக் கொள்வோம். (பலத்த


(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

## 138 வருடங்கள் தாமதமாக கிடைத்த 'தபால் கடிதம்': வியப்பில் மூழ்கிய மூதாட்டி

பிரான்ஸ் நாட்டில் 138 வருடங்களுக்கு முன் தபால் மூலம் அனுப்பப்பட்ட கடிதத்தை சில தினங்களுக்கு முன் கிடைக்கப்பெற்ற மூதாட்டி ஒருவர் அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்துள்ளார். பிரான்ஸ் நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள Trelon என்ற நகரில் Therese Pailla என்ற 80 வயது மூதாட்டி வசித்து வருகிறார்.



இவருக்கு சில தினங்களுக்கு முன்னர் தபால் துறையினரிடமிருந்து கடிதம் ஒன்று வந்துள்ளது. Sains-du-Nord என்ற நகரிலிருந்து வந்துள்ள அந்த கடிதத்தை பிரித்து பார்த்த மூதாட்டி அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்துள்ளார்.

மூதாட்டியின் பாட்டனாரால் எழுதப்பட்ட அந்த கடிதமானது கடந்த 1877 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி அனுப்பப்பட்டது. அதாவது, சுமார் 138 வருடங்கள் அந்த கடிதம் தாமதமாக அந்த மூதாட்டிக்கு கிடைத்துள்ளது.

இதில் இன்னொரு ஆச்சர்யமான விடயம் என்னவென்றால், Sains-du-Nord நகருக்கும் மூதாட்டி குடியிருந்த Trelon நகருக்கும் இடைப்பட்ட தூரமானது வெறும் 10 கிலோ மீற்றர்தான்.

10 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நபருக்கு 138 வருடங்கள் தாமதமாக வந்த கடிதத்தை பிரித்து படித்து பார்த்ததில், அவரது பாட்டனார் தனது நூற்பாலைக்கு நூல்கண்டுகள் தேவை என குறிப்பிட்டு எழுதியிருந்தார்.

இத்தனை வருடங்கள் தாமதமாக கிடைத்துள்ள அந்த கடிதம் தொடர்பாக La Poste தபால் துறை அதிகாரிகளிடம் அந்த மூதாட்டி விளக்கம் கேட்டுள்ளார்.

இதற்கு பதிலளித்த அதிகாரிகள், சில நேரங்களில் கடிதங்கள் வைக்கப்படும் இருப்பு லொக்கர்கள் துருப்பிடித்து சேதம் அடைந்தால், அந்த கடிதங்கள் கவனிக்கப்படாமல் விடப்பட வாய்ப்புள்ளது.

சில நேரங்களில் கடிதத்தை தவறுதலான இடத்தில் வைக்கப்பட்டால், அவற்றை கண்டிபிடிக்க வருடக்கணக்கில் ஆகலாம் என கூறிய அதிகாரிகள் இந்த விவகாரம் குறித்து விசாரணை செய்ய உள்ளதாக மூதாட்டியிடம் கூறியுள்ளனர்.

இருப்பினும், இந்த தாமதத்திற்கு தபால் துறை காரணமா அல்லது காணாமல் போன கடிதத்தை மீண்டும் கண்டுபிடித்து தபால்மூலம் அனுப்பியுள்ளனரோ என்பது தெரியவில்லை.

இது குறித்து மூதாட்டி பேசுகையில், ஒரு கடிதமானது ஒரு மாதம் அல்லது ஒரு வருடம்கூட தாமதமாக கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிந்துள்ளேன். ஆனால், ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தாமதமாக கடிதம் கிடைக்கப் பெற்றது மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது என கூறியுள்ளார்.

# சமைப்போம் சுவைப்போம்

## உள்ளிக் குழம்பு

**தே.பொருட்கள்:**



பூண்டு - 20 பல்

வெங்காயம்-1

தக்காளி-2

மிளகாய் தூள் -1 தேக்கரண்டி

புளி- லெமன் அளவு

மஞ்சள்தூள் -1/4 தேக்கரண்டி

கடுகு, கறிவேப்பிலை, உப்பு, எண்ணெய்-தே.அளவு

**செய்முறை**

பூண்டு வெங்காயம் தக்காளியை பிரஷர் குக்கரில் வேகவைத்து மசித்துக் கொள்ளவும் வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, கறிவேப்பிலை தாளி த்துபுளியைக் கரைத்து ஊற்றவும். பின் மஞ்சள்தூள்,மிளகாய்த்தூள், உப்புபோட்டு மசித்த பூண்டுக் கலவையையும் போட்டு நன்கு கொதித்து சுருண்டு வந்தவுடன் இறக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் சந்தைக்கட்டடத்தின் கடைகளுக்கான வைப்புப்பண மீள்கேள்வி அறிவித்தல்

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் ஒட்டுசுட்டான், ஒலுமடு உப அலுவலக எல்லைக்குட்பட்ட நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மக்களிடமிருந்து 2015 ஜீலை பத்தாம் திகதி தொடக்கம் முதலாம் வருடம் (31.12.2015 வரை) மாதம் ரூபா 1,750.00 (ரூபா ஆயிரத்து எழுநூற்றி ஐம்பது மட்டும்) வீதம் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு ஏதுவாக கடைகளுக்கான திறப்புப்பண கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 18.06.2015 -01.07.2015 வரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 02.07.2015 முற்பகல் 10.00 மணி வரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 02.07.2015 பிற்பகல் 02.30 மணி

கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 02.07.2015 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 02.07.2015 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

1.கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் ஒட்டுசுட்டான், ஒலுமடு உப அலுவலக எல்லைக்குள் நிரந்தரமாக வதியும் இடத்தின் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப்பிரதியுடன் நேரடியாக புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

2.கேள்விப்பத்திரங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணங்கள், மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3.உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.

4.ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

5.கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

6.கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்வி கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரமுண்டு.

7.வாடகை வருடாவருடம் சபையால் நிர்ணயிக்கப்படும் கால ஒழுங்கில் வாடகையின் அடிப்படையில் 10% அதிகரிக்கப்படும்.

8.கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடத்த அனுமதிக்கப்படமாட்டார்.இருந்தும் அவரது வாரிசு நடத்த அனுமதிக்கப்படுவார்.(உதாரணம் :- மகன், மகள்)

9.சபையின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.

10.நிராகரிக்கப்பட்ட கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.

11.தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

12.வாடகைப்பணம் மாதாந்தம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்.தவறின் 10% தண்டமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் இரு மாதங்கள் தொடர்ந்து கட்டத்தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.

13.சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாகச் சபைக்கெதிராகவோ/ செயலாளருக்கு எதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.

14.கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT.NBT) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|
| 1 | கடை இலக்கம் 01 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 2 | கடை இலக்கம் 02 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 3 | கடை இலக்கம் 03 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 4 | கடை இலக்கம் 04 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 5 | கடை இலக்கம் 08 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 6 | கடை இலக்கம் 10 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 7 | கடை இலக்கம் 11 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |

**திரு.கு.மிதிலைநாதன்,**
**செயலாளர்,**
**பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**

**புதுக்குடியிருப்பு**
**பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**

(அ-12295)

# கூட்டணி அரசுதான் நாட்டுக்குத் தேவை

(கொழும்பு)

**நாட்டுக்கு எதிர்கால அவசியமாக இருப்பது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி அரசாங்கம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

தம்பதெனிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் ஒன்றிணைவோடு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று கூட்டணி அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும்.நாட்டின் உருமாற்றத்தையே தற்போது மேற்கொள்ள வேணடும். அதற்காக ஐக்கிய தேசிய கட்சியா, மக்கள் விடுதலை முன்னணியா என்பது முக்கியமில்லை. நாட்டு மக்களின் அவசியத்திற்காக நாட்டின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்காக அனைவரும ஒன்றிணைய வேண்டும்என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)


## யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

**இன்று எட்டாம் நாள்**



பொற்பதம் பணிந்தே உன்புகழ்பாடி வணங்கியே
போற்றியே துதிக்கின்றோம் கலட்டிக் கணபதியே!
கற்பக தருவாய் நின்று கைதொழுவார்க்கருளும்
சிற்பர விநாயகனே சிங்கார வேலனின் அண்ணனே!
நற்பதந் தந்திடுவாய் ஞான கணபதியே ஆனைமுகனே
நால்வேதப் பொருளாய் நிற்கும் ஓங்கார முதல்வனே!
பற்பலரும் போற்றிடும் பானை வயிற்றோனே சுமுகனே
வீரகத்தி விநாயகனே விக்னேஸ்வரனே சரணம்! சரணம்!!

நாச்சிமார் கோவிலடி
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

சுஜீவா வைத்தியசாலை
(தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுர்வேத வைத்தியசாலை)

(C-1281)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 19 1/2 செவ் 4 இல்
உயரம்: 178cm
தகைமை/தொழில்: MSC/ அரச தொழில் டென்மாரக்
தொ.இ: B/4614

பிறப்பு: 1984 RC
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: CIMA/ USA PR
தொ.இ: B/4615

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 20 உயரம்: 5'4"
தகைமை/தொழில் A/L/ அரச தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/4616

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 45 உயரம்: 5'3"
தகைமை/தொழில்: computer science/ அரச தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்
தொ.இ: B/4617

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1965 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 50 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/4628

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 69 சூரிசெவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSC, PGDE/ அரச தொழில்
தொ.இ: G/4632

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 55 உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSC/ தனயார் தொழில்
தொ.இ: G/4633

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 23 1/2 செவ் இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSC, SLAS/ அரச தொழில்
தொ.இ: G/4636

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

யாழ்.வண் வடமேற்கு ஆனைக்கோட்டை கண்ணகைபுரம் திருவருள் மிகு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்றையதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 29ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 30ஆம்திகதி தேர்த்திருவிழாவும் ஜுலை முதலாம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது என ஆலயபரிபாலனசபையினர்அறிவித்துள்ளனர். (இ-4)

## போட்டிப் பரீட்சை

யாழ்.வண் வடமேற்கு ஆனைக்கோட்டை கண்ணகைஅம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தினை முன்னிட்டு இந்து இளைஞர் மன்றத்தினரால் நடத்தப்படுகின்ற சைவசமய அறிவுப்போட்டிப் பரீட்சை இம்முறையும் நடத்தப்படவுள்ளது. மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை இன்று முதல் மேற்படி ஆலயத்திலும் 075 071 5614, 077 138 1441, 077 1713726 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்வதன்மூலமும்பெற்றுக்கொள்ள முடியும் என இந்து இளை ஞர் மன்றம் அறிவித்துள்ளது. (இ-4)

### புங்குடுதீவு மாணவி படுகொலை

# மேலும் சான்றுகள், சாட்சியங்கள் இருப்பின் உடனடியாக நீதிமன்றுக்கு தெரியப்படுத்தவும்

## சட்டத்தரணி தவராஜா கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**புங்குடுதீவு மாணவி கொலைச் சம்பவம் தொடர்பில் வேறு ஏதும் சான்றுகள், சாட்சியங்கள், தகவல்கள் இருந்தால் அதனை உடனடியாக ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு தெரியப்படுத்துமாறு சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.**

குறித்த வழக்கில் மேலும் சாட்சியங்கள், ஆதாரங்கள், சான்றுகளை வலுப்படுத்துவதன் மூலம் குற்றவாளிகளுக்கு விரைவில் தண்டனை பெற்றுக் கொடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு பாடசாலை மாணவியொருவர் கூட்டு வன்புணர்விற்குட்படுத்தப்பட்டு கடந்த மாதம் 13 ஆம் திகதியன்று படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இக்கொலைக்கு காரணமானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 9 பேர் கைது செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வருகின்றது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதவான் செல்வநாயகம் லெனின் குமார் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டு 7 பேரின் சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

வழக்கின் முடிவில் மன்றுக்கு வெளியே ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புங்குடுதீவுமாணவியின் கொலைச் சந்தேக நபர்களை பயங்கரவாத குற்றத்தடுப்பு சட்டத்தின் கீழ் விசாரணை செய்ய ஊர்காவற்றுறை நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இவ்வழக்கு தொடர்பில் தற்போது உள்ளவற்றை விட மேலதிக தகவல்கள், சாட்சியங்கள் கிடைக்கப் பெற்றால் வழக்கினை மேலும் வலுப்படுத்த முடியும்.

ஆகவே வழக்கு தொடர்பில் தற்போது கிடைக்காத தகவல்கள் கிடைக்கப் பெற்றால் அதனை ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு தெரியப்படுத்துமாறு சட்டத்தரணி மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-4).

## விளக்கமறியல்

(கரணவாய்)

கடந்த 1988 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஹெரோயின் போதை வஸ்து வழக்கு ஒன்று தொடர்பாக தேடப்பட்டு வந்த பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட வேளை அப்பெண்ணை இன்று வரை விளக்கமறியலில் வைத்து நீர்கொழும்பு மேல்நீதிமன்றில் ஆஜர் படுத்துமாறு நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி பெண் பருத்தித்துறை கடல் மார்க்கமாக ஹெரோயின் போதைப்பொருளை கடத்த முற்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பிரஸ்தாபப் பெண் ஆவாரஞ் சந்தி பொலிகண்டி பருத்தித்துறையைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-60)




### உயர்தர மாணவர்களின்

## கல்விக்கு இடையூறு விளைவிக்கும் செயற்பாடுகளுக்கெதிராக நடவடிக்கை

(கரணவாய்)

இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் ஒலிபெருக்கிகளினால் உயர்தர மாணவர்களின் கல்விக்கு இடையூறு விளைவிக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பருத்தித்துறை நீதிமன்ற நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில் கோவில் உற்சவங்களில் இரவிரவாக பாட்டுக்கச்சேரிகள், இசை நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதனால் க.பொ.த உயர்தர மாணவர்களின் கல்விக்கு இடையூறு விளைவிப்பதாக பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க அவ்வாறான இரவு நேர, அதிகாலை நேர இசை நிகழ்ச்சிகளை குறித்த நேரத்தின் பின் நடத்துவதற்கு பரீட்சைகள் முடிவடையும் வரையில் தடைசெய்வதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

கல்வியை மூலவளமாகக் கொண்ட வடமராட்சிப் பிரதேசத்தில் கல்விக்கு இடையூறு விளைவிப்போர் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (இ-3-60)

## சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த கிராம அமைப்புக்கள் ஒத்துழைக்க வேண்டும்

## பொலிஸார் கோரிக்கை

(கரணவாய்)

நெல்லியடி பிரதேசத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இடம்பெற்றுவரும் சட்டவிரோதமான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களும் கிராம மட்ட அமைப்புக்களும் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நெல்லியடி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.ஐ.கே. திசாநாயக்கா தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இளைஞர்களின் அடாவடித்தனங்கள், மதுப்பிரியர்களின் அட்டகாசங்கள், வேகக் கட்டுப்பாட்டை மீறி வாகனம் செலுத்தி சாகசம் புரிவோர் பொது இடங்களில் மது அருந்துவோர் ஆகியோரின் செயற்பாடுகள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட வேண்டும்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும்போது உடனுக்குடன் பொலிஸாருக்கு அறிவிக்கவேண்டும்.

மேலும் மாதாந்தம் நடைபெறும் சிவில் பாதுகாப்புக்குழுக்கூட்டத்தில் இது பற்றிய முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம்.

இதன்மூலம் சமூகத்தில் இடம்பெறும் சமூக விரோதச் செயல்களை முற்றாக ஒழிக்க வழிசமைப்பதாக அமையும்.

அத்துடன் 077 710 2007 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு இவ்வாறான சம்பவங்களை உடனுக்குடன் தெரியப்படுத்தினால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவ மேலும் உறுதிபடத் தெரிவித்தார். (இ-3-60)

## மோசடிநபருக்கு விளக்கமறியல்

(கரணவாய்)

மதுபானக்கடை ஒன்று நடத்துவதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுத் தருவதாகக் கூறி 83 இலட்சம் ரூபாவை மோசடி செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட அளுத்கமவைச் சேர்ந்த நபரொருவரை கொழும்பு குற்றப்புலனாய்வுத் துறையினர் நேற்று முன்தினம் கைது செய்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்செய்த வேளை அவரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட பிரஸ்தாப நபர் 63 இலட்சம் ரூபாவை கையில் பெற்றுக் கொண்டதாகவும் மிகுதியை பாணந்துறை எச்.என்.பி வங்கியில் வைப்பிலிட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3-60)

### பெற்றோல் குண்டு விவகாரம்

## யாழ்.பல்கலை.மாணவனின் பிணைமனு விசாரணைக் கோரிக்கை மன்றால் ஏற்பு

(யாழ்ப்பாணம்)

பெற்றோல் குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டில் மல்லாகம் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த யாழ். பல்கலைக்கழக மாணவனின் பிணை மனு விசாரணை கோரிக்கையை யாழ்.மேல் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மாணவன் மற்றும் பத்துப் பேர் சுன்னாகம பகுதியில் இரண்டு பெற்றோல் குண்டுகளை உடைமையில் வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த 2015.04.26 அன்று கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் அனைவரும் மறுநாள் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். தொடர்ந்து அவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் குறித்த மாணவனை பிணையில் விடுதலை செய்யக்கோரி சட்டத்தரணி ஊடாக நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டு சமர்ப்பணம் முன்வைக்கப்பட்டிருந்தது.

குறித்த வழக்கில் அபாயகரமான ஆயுதங்கள் கட்டளை சட்டத்தின் கீழ் இரண்டு பெற்றோல் குண்டுகள் வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டி சுன்னாகம் பொலிஸாரினால் மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட முதல் அறிக்கையின் பிரகாரம் பிணை விண்ணப்பம் சந்தேக நபரான பல்கலை. மாணவனின் சட்டத்தரணியால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட இரண்டு பெற்றோல் குண்டுகள், பலகைத் துண்டு, கொட்டன், கைக்கோடரித்துண்டு ஆகியவை தடய பொருட்களாக மல்லாகம் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டுள்ளதோடு மாணவனின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டும் உள்ளது.

இருப்பினும் மன்று மாணவனின் பிணை மனு விசாரணைக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு எதிர் மனுதாரர்களுக்கு அழைப்புக் கட்டளை பிறப்பிகின்றது என யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் கட்டளை பிறப்பித்துள்ளார். குறித்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு அடுத்த மாதம் 30 ஆம் திகதி [illegible] வுள்ளது. (இ-4-9)

## பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு தொழிற்பயிற்சிகள், தொழில்வாய்ப்புக்கள்




யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு இந்தியாவின் சேவா நிறுவனத்தால் சுயதொழில் பயிற்சிகள் மற்றும் தொழில்வாய்ப்புக்கள் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் பெண் தலைமைத்துவம் மற்றும் சுயதொழில் முயற்சி தொடர்பான கருத்தரங்கு யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இக்கருத்தரங்கில் இத்திட்டம் தொடர்பான அறிமுகமும் விளக்கங்களும் வழங்கப்பட்டன. தற்போது இந்த திட்டம் கிழக்கு மாகாணத்தில் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

வடமாகாணத்தில் முதற்கட்டமாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதில் யாழ்ப்பாணத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள மகளிர் அமைப்புக்களின் ஊடாக 40 பெண்களை தெரிவு செய்து அவர்களுக்குரிய சுயதொழில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.


இவர்கள் ஊடாக 40 குழுக்களை உருவாக்கி சுயதொழில்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை செயற்படுத்துவதும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் சுயதொழில் முயற்சிக்கு வலுவூட்டுவதும் இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டம் தொடர்ச்சியாக வட மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளர்ச்சியாளர்களின் ரொக்கெட் தாக்குதலில் சிக்கி சிரியாவில் 20பேர் உயிரிழப்பு

(அலப்போ)

சிரியாவின் இரண்டாவது மிகப்பெரிய நகரமான அலப்போவில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கிளர்ச்சியாளர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு நடத்திய தாக்குதலில் 20 பேர் பலியாகியுள்ளதாக அந்நாட்டு தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.



சிரியாவில் உள்ள மனித உரிமைகள் அமைப்பு இந்த ரொக்கெட் தாக்குதலில் 2 குழந்தைகள் உட்பட 13 பேர் பலியாகியிருப்பதாகவும், இது மேலும் உயரக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில் 100இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

கிழக்கு அலப்போ நகரில் வெறும் 4 மணி நேரத்திற்குள் 250இற்கும் மேற்பட்ட ரொக்கெட்கள் வீசப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த பயங்கர தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் வீடியோ காட்சிகளை தொலைக்காட்சியில் பார்ப்பவர்கள அதிர்ச்சியில் உறைந்துள்ளனர்.(இ-5)

## ஆட்கடத்தல் பாதிப்பு அவலம் மியன்மார் தமிழர்கள் தவிப்பு

மியன்மாரில் பல்வேறு துயரங்களுக்கு ஆளாகும் ரோஹின்ஜியர்களுக்கு இணையாக, தமிழர்களும் பாதிக்கப்படுவதாக கனடா நாட்டுப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மியன்மாரில் ரோஹின்ஜிய முஸ்லிம்களுக்கு எதிரான போக்கு இருந்து வரும் நிலையில், அங்கிருக்கும் தமிழர்களும் ஆட்கடத்தல் உள்ளிட்ட துயரங்களுக்கு ஆளாகி வருவதாகவும், ஆனால் இது குறித்து செய்திகள் வெளிவராமல் இருப்பதாகவும் அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

மியன்மாரின் தமோ மற்றும் தத்தோன் மாவட்டங்களில் வாழும் முஸ்லிம், இந்து மற்றும் கிறிஸ்தவ மக்கள் பாரம்பரிய விவசாயத்தை தொழிலாக செய்கின்றனர். இவர்களுள் பலர் முகவர்களிடம் சிக்கி மலேசியாவுக்கு அடிமைகளாக கடத்தப்படுகின்றனர்.

ஆட்கடத்தலில் ஈடுபடும் கும்பல், இவர்களுக்கு மலேசியாவில் வேலை வாங்கித் தருவதாக பொய்யான வாக்குறுதிகளை அளித்து அடிமைகளாக்கும் வேலைகளில் தொடர்ந்து ஈடுபடுவதாக “தி ஸ்டார் பேப்பர்” என்ற கனடாவைச் சேர்ந்த பத்திரிகை அதிர்ச்சி செய்தியை குறிப்பிட்டுள்ளது.

‘ஆட்கடத்தல் கும்பலால் அனுப்பப்படும் இவர்கள் அனைவருமே, ரோஹின்ஜிய மற்றும் வங்கதேச அகதிகள் பயணிக்கும் செல்லத்தகாத படகுகளில் கடல் மார்க்கமாக மலேசியா மற்றும் தாய்லாந்து வழியாக உணவு, தண்ணீர் போன்ற அத்தியாவசிய தேவைகள் எதுவும் இன்றி ஆபத்தான பயணத்தை மேற்கொள்ள வற்புறுத்தப்படுகின்றனர்.

மியன்மாரில் தவிக்கும் ரோஹின்ஜியர்களுக்கு இணையாக முஸ்லிம் மற்றும் இந்து தமிழர்களும் இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

இவர்கள் பலர் தங்களது சொத்துக்களை விற்று, முகவர்களிடம் பணத்தை அளித்து பின்னர் அடிமைகளாக வாழும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். மலேசிய நகரங்களான பெனாங், கேதா, பெர்லிஸ் போன்ற பகுதிகளில் தொடர்பு இல்லாத வேலைகளில் கொத்தடிமைகளாக இருக்கின்றனர்” என்று அந்த பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (இ)

அமெரிக்க ஆளில்லா விமான தாக்குதல்

## அரேபிய தீபகற்பத்தின் அல்-கொய்தா தலைவரான நாசர் அல்-உஹைஷி பலி

(சனா)

கடந்த வெள்ளியன்று ஏமன் நாட்டில் அமெரிக்க ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் அல்-கொய்தா இயக்கத்தின் அரேபிய தீபகற்ப தலைவரான நாசர் அல்-உஹைஷி பலியானதாக அல்-கொய்தா இயக்கம் உறுதிப்படுத்தியுள்ளது.



உஹைஷி பலியானதை அல்-கொய்தா இயக்கம் நேற்று உறுதி செய்துள்ளது. எனினும் இது குறித்து கருத்து தெரிவிக்க பென்டகன் மறுத்துவிட்டது. அல்-கொய்தா இயக்கத்தின் இரண்டாம் நிலை தலைவராக விளங்கிய உஹைஷி, ஒசாமா பின்லேடனின் தனிச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

2011 ஆம் ஆண்டு ஒசாமா கொல்லப்பட்ட பின், அந்த அமைப்பின் முக்கிய தலைவர் தற்போது கொல்லப்பட்டுள்ளதாக அல் - கொய்தா தம்மிடம் கூறியதாக ஏமன் டைம்ஸ் பெண் செய்தியாளர் அமல்-அல்-யாரிசி தெரிவித்தார்.

உஹைஷியின் தலைக்கு அமெரிக்க அரசு 10 மில்லியன் டொலர் சன்மானம் நிர்ணயம் செய்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கடும்மழை வெள்ளத்தால் 2இலட்சம் மக்கள் பாதிப்பு

*9000 ஹெக்டேயர் பயிர்கள் நாசம்*

கடும் மழையை தொடர்ந்து அசாமில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் 2 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 9000 ஹெக்டேயர் பயிர்கள் நாசமடைந்து விட்டதாக தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் அசாமில் பெய்த கடும் மழையை அடுத்து பிரம்மபுத்ரா மற்றும் ஜியா பாரலி ஆறுகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதில் அம்மாநிலத்தை சேர்ந்த 11 மாவட்டங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. முக்கியமாக கோல்பாரா மாவட்டம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இம மாவட்டத்தில்மட்டும்7 பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டு ஆயிரத்து 700 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மொத்தமாக மாநிலம் முழுவதும் 10 பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

நிவாரண பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும், சூழ்நிலை கையை மீறி சென்றுவிடவில்லை எனவும் அசாம் அரசு தெரிவித்துள்ளது. (இ-5)

## அமெரிக்காவுக்கு போட்டியாக சீனா

ஒலியை விட 10 மடங்கு வேகத்தில் சீறிப்பாயும் ‘ஹைபர்சானிக் கிளைட்’(Hypersonic glide) வாகனத்தை சீனா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.

தென் சீன கடற்பரப்பில் உள்ள ஜப்பான், வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளின் கடற்பரப்பில் தன் ஆதிக்கத்தை செலுத்தி வரும் சீனாவின் நடவடிக்கையை எதிர்த்து வரும் அமெரிக்கா இந்த பிரச்சினையில் பிலிப்பைன்ஸ் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு ஆதரவாக களமிறங்கியுள்ளது.

இதற்கிடையே, அண்மையில் அமெரிக்க விமானம் ஒன்று தென் சீனக் கடலில் பறந்தபோது, ‘இது எங்கள் பகுதி, இங்கே பறப்பதற்கு உங்களுக்கு அனுமதி கிடையாது, உடனடியாக இங்கிருந்து சென்று விடுங்கள்” என சீனா எச்சரித்துள்ளது.

இந்த விவகாரம் சூடு பிடிப்பதற்குள், தன் அடுத்த நகர்வை ஆரம்பித்துள்ள சீனா, போர்க்கப்பல் அல்லது போர் விமானத்தில் இருந்து பாலிஸ்டிக் ஏவுகணை மூலம் செலுத்தப்படும் ஹைபர்சானிக் கிளைட் வாகனத்தை வெற்றிகரமாக சோதனை செய்து பார்த்துள்ளது.

ஏவுகணை மூலம் செலுத்தப்படும் இந்த ஹைபர்சானிக் கிளைட் வாகனம், குறிப்பிட்ட தூரத்தை கடந்ததும், ஏவுகணையில் இருந்து பிரிந்து, ஒலியை விட 10 மடங்கு வேகத்தில் பயணம் செய்து குறிப்பிட்ட இலக்கை அழிக்கக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதாவது மணிக்கு 12,231 கி.மீற்றர் வேகத்தில் பயணிக்கும் இதன்மூலம் அணுகுண்டுகளையும் வீச முடியும்.

ஹைபர்சானிக் கிளைட் வாகனத்தை ரோடாரில் கண்டறிய முடியாது என்பதால், இதனை தடுக்கவோ, அழிக்கவோ முடியாது என பாதுகாப்புத் துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவை அடுத்து சீனாவிடம் மட்டுமே ஹைபர்சானிக் கிளைட் வாகனம் உள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மனித வெடிகுண்டு தாக்குதலில் 23பேர் பலி

(என்டஜமீனா)

நைஜீரியா அருகே உள்ள சாட் நாட்டின் தலைநகர் என்டஜமீனாவில், தற்கொலை படையினர் இரு வேறு இடங்களில் நேற்று நடத்திய தாக்குதலில், 23 பேர் உயிரிழந்தனர்.



நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இரு பொலிஸ் நிலையங்களில் நடந்த இந்த தாக்குதலில், தற்கொலைப் படையை சேர்ந்த நான்கு பேர் இறந்தனர்.

சாட் தலைநகரில் முதன் முதலாக நடைபெற்ற இந்த தாக்குதலை, போகோஹராம் பயங்கரவாதிகள் நிகழ்த்தியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சாட், நைஜீரிய இராணுவத்திற்கு உதவுவதை கண்டித்து, இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. (இ-5)

## காங்கிரஸ் கட்சியின் ரகசியங்களை வெளியிடுவேன் -மோடி எச்சரிக்கை

காங்கிரஸ் ஆட்சியாளர்களின் ரகசியங்களை வெளியிடுவேன் என ஐ.பி.எல். முன்னாள் தலைவர லலித மோடி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக, தனது கருத்துக்களை டுவிட்டரில் பதிவு செய்துள்ள லலித் மோடி, செய்தியாளர்களை சந்தித்து ஐ.பி.எல். முறைகேடு தொடர்பான தகவல்களை வெளியிடவுள்ளதாக கூறியுள்ளார்.

இந்த செய்தியாளர்கள் சந்திப்பை, முன்னாள் அமைச்சர்கள், சிதம்பரம், சல்மான் குர்ஷித், சசி தரூர் மற்றும் பிரதமர் அலுவலக அதிகாரிகள் பார்க்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


தனது செய்தியாளர் சந்திப்பிற்கு பிறகு பலர் பதவி விலக நேரிடும் என்றும் லலித் எச்சரித்துள்ளார்.

இதனிடையே, ஐ.பி.எல் முறைகேடு தொடர்பாக லலித் மோடி மீது, 16 வழக்குகளில் அமலாக்கத்துறை விரைவில்நோட்டீஸ் அனுப்ப உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்திக்கடலில் தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளை நிறுத்துங்கள்

## வடக்குமாகாண சபை உறுப்பினரிடம் முல்லை. கரையோரக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை



வெட்டுவாய்க்கால் நந்திக்கடலில் சட்ட விரோதமான முறையில் மேற்கொள்ளப் படும் தடைசெய்யப்பட்ட தொழில் முறை களை நிறுத்தி தமது மக்களின் வாழ்வா தாரத்தை காப்பாற்றுங்கள் என்ற கோரி க்கையொன்று வடமாகாணசபை உறுப்பி னர் து.ரவிகரனிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட வலைகளைக் கொண்டு நந்திக்கடலின் வளத்தை சூறையாடுவதால் நாளாந்த வருமானத்தை வீச்சுத்தொழில் மூலம் நம்பியிருக்கும் பல்லாயிரக்கணக் கான மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப் படுவதாக முல்லை.கரையோரக்கிராம ங்களை சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த 12ஆம் திகதி மாலை வடமாகா ணசபை உறுப்பினர் து.ரவிகரன் இல்லத்தில் கள்ளப்பாடு, சிலாவத்தை, மணற்குடியிருப்பு, வண்ணாங்குளம்,செல்வபுரம் ஆகிய கரை யோர கிராமங்களைச்சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் சிலர் சந்திப்பொன்றை நிகழ்த் தியிருந்தனர்.

தொடர்ந்துவரும் சட்டவிரோதிகளின் முறையற்ற மீன்பிடி முறைகளால் ஆண்டாண்டு காலம் வீச்சுத்தொழிலையே நம்பியிருக்கும் தம்மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருவதென அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

தடைசெய்யப்பட்ட வலைகளும் கிபிர்கூடு என்று சொல்லப்படும் கூடுகளும் பயன்படு த்தப்பட்டு வெட்டுவாய்க்கால் நந்திக்கடலின் வளம் சூறையாடப்பட்டுவருதலை தடுத்து நிறுத்த வேண்டும். அதன்மூலம் நாளாந்த வருமானத்தைக்கொண்டு தம் வாழ்க்கையை முன்னெடுக்கும் பல்லாயிரக் கணக்கான வீச்சுத்தொழிலாளிகள் மீதான நெருக்கடிகள் களையப்படவேண்டும் என்ற கோரிக்கை களை அவர்கள் முன்வைத்திருந்தனர்.

இவ்வாண்டு முழுவதும் தொழில் செய்ய க்கூடிய வகையில் இறால்குஞ்சுகள் பெருகி யிருப்பதாகவும் நாளாந்தம் இரண்டாயிரம் மூவாயிரம் அளவில் அனைவரும் உழைத்த நிலையில் தற்போது உள்ளூரிலும் வெளியூ ரிலும் உள்ள சிலர் சட்டவிரோத தொழிலை முன்னெடுப்பதால் வீச்சுத்தொழில் பாதிக்க ப்பட்டுவருகிறது. போதியளவு வருமானத் தினை பெறத்தவறும் வீச்சுத்தொழிலாளி களின் நாளாந்த வாழ்க்கையும் கேள்விக் குள்ளாகிறது என தெரிவித்தனர்.

மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்த வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கூறுகையில்,

நன்னீர் மீன்பிடியானது வடமாகாண சபையின் கட்டுப்பாட்டுக்குள் வருகின்றது. சட்டவிரோதத்தொழில் செய்பவர்களை நிறுத்தும் நடவடிக்கையை மாகாண மீன்பிடி நன்னீர் மீன்பிடி அமைச்சு முல்லைத்தீவு கடற்றொழில் திணைக்களத்துடன் இணை ந்து செய்யும்.

எதிர்வரும் மாகாணசபை அமர்விலும் மீன்பிடி நன்னீர்பிடி மீன்பிடி அமைச்சின் ஆலோசனைக்கூட்டத்திலும் இது விடயங் களை சமர்ப்பித்து உரிய நடவடிக்கைகளை துரிதமாக எடுப்பதற்கு ஆவன செய்வேன் என்றும் அதுவரை பொறுமை காக்கவேண் டும் என்றும் பதிலளித்திருந்தார். (2)

## அக்கராயன்-ஜெயபுரம் பிரதான வீதி செப்பனிடும் பணி நிறைவு




(கிளிநொச்சி-1)

அக்கராயன் அம்பலப்பெருமாள் சந் தியில் இருந்து ஜெயபுரம் செல்லும் அக்கரா யன்-ஜெயபுரம் பிரதான வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் மக்கள் போக் குவரத்து செய்யமுடியாத நிலைமையும் காணப்பட்டது.

இதனை அடுத்து கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் 20 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் அவசரமாக பள்ள ங்களை நிரப்புவதற்காக போடப்பட்ட கிரவல் மண் தற்போதுபரப்பப்பட்டு வேலைகள் நிறைவுபெற்றுள்ளன.

நிரந்தரமாக இவ் வீதியை புனரமைப்பு செய்வதற்கு பெருந்தொகை நிதி தேவை ப்படுவதாகவும் அதற்காக நிதி உரிய திணை க்களத்திற்கு கிடைக்கவில்லையெனவும் அறிய முடிகின்றது. இதன்காரணமாக வழங்கப்பட்ட சிறியளவு நிதியுதவியுடன் குறித்த வீதி செப் பனிடப்பட்டுள்ளது. (2-277)




முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட பெண்தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துத்துவதற்காக வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க வட்டு இந்து வாலிபர் சங்க பயனாளிகள் சுமார் 25பேருக்கு யாழ். மாவட்ட றோட்டரி கழகத்தினால் சங்க உறுப்பினர்கள் முன்னிலையில் அண்மையில் முள்ளியவளை வித்தியானந்த கல்லூரியில் வைத்து தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.




## தியாகிகள் தினம்

(வவுனியா)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 25ஆவது தியாகிகள் தினம் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 9மணிக்கு வவு னியா நகரசபை கலாசார மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

இதன்போது ஈகைச்சுடர் ஏற்றல், அஞ்சலி நடனம், விவரணக் காணொலி, தலைமையுரை, தியாகிகள் தின உரை கள், தியாகிகள்தினப் போட்டிகளுக் கான பரிசு வழங்கல் என்பன இடம் பெறவுள்ளன.

## அங்குரார்ப்பண நிகழ்வு

ஓம் கிரியா பாபாஜி யோக ஆரண் யத்தின்கனகராயன்குளக் கிளை அங்குரா ர்ப்பண விழா எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற வுள்ளது.

அத்துடன் உலக யோகா தினம் எதிர் வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண் டாடப்படவுள்ளது. அத்துடன் உலக யோகா தினம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்படவுள்ளது. (2)

# கள்ளப்பாடு இந்து மயானத்தை சுற்றி மதில் அமைக்கப்படவுள்ளது



(கிளிநொச்சி)

வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து 5இலட்சம் ரூபாவை கள்ளப்பாடு இந்து மயானத்தின ஆரம்பப்பணிக்கு வழங்கியுள்ளார்.

இதனையடுத்து பொதுமக்கள் ஒன்று கூடி 10அடிஉயர மதில் கட்டி மயானத்தை வளப்படுத்துவது என முடிவெடுத்தனர்.

இதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கள்ளப்பாடு கிராம மாதர் சங்க, கடல் தொழி லாளர் சங்க, கிராம அபிவிருத்தி சங்க, வன்னி குறோஸ் சுகாதார நிறுவன உறுப் பினர்கள் என அனைத்து கிராம மக்களும் இணைந்து வைத்திய கலாநிதி சி.சிவமோ கனுடன் ஆரம்பித்து வைத்தனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா



வரலாற்று சிறப்பு மிக்க வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா நேற்று முன்தினம் இடம் பெற்றது.

வருடாவருடம் சிறப்பாக இடம்பெற்று வரும் பொங்கல் விழாவில் காலையில் இருந்தே பக்த அடியார்கள் கோவிலை நோக்கி சென்றிருந்ததுடன் பல பாகங்களில் இருந்தும் மக்கள் வருகை தந்திருந்தனர்.

இந் நிலையில் காவடி, பறவைக்காவடி, பாற்செம்பு எடுத்து பக்தர்கள் தமது நேர்த்திக் கடனை நிறைவு செய்திருந்ததுடன் நூற்றுக் கணக்கான பக்தர்கள் ஆலயத்தில் பொங்கல் பொங்கி வழிபாடுகளிலும் ஈடுபட்டிருந் தனர்.

இதேவேளை பண்டமெடுக்கும் நிகழ் வுகள் இடம்பெற்று ஆலயத்தில விசேட பொங் கல் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.(2-250)

# மாற்றுத்திறனாளிகளுக்கான புனர்வாழ்வளிக்கும் திட்டங்கள்



சமூக சேவைகள் அமைச்சின் மாற்றுத் திறனாளிகளை சமூக மட்டத்தில் வைத்து புனர்வாழ்வளிக்கும் சி.பி.ஆர் வேலைத் திட்டத்தின் கீழ் முழு நாள் செயலமர்வு கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.


மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மேலதிக அரசாங்க அதிபர் சி.சத் தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு,மத்திய அரசின் சமூக சேவைகள் அமைச்சின் பணிப்பாளர் திருமதி. அனுசாகோகுல பெர்னாண்டோ, சீ.பி.ஆர் திட்ட தேசிய இணைப்பாளர் எம்.ஆர்.சாந்த குமார, உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண் டனர். மாற்றுத் திறனாளிகள் தொண்டர்கள், மாற்றுத்திறனாளிகளுக் கான மாவட்ட மட்ட சுயஉதவிக் குழுவின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சமூக சேவைகள் திணைக்களத்தின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பாக இதில் மீளாய்வு செய்யப்பட்டது. (2-254)




# கற்பகதரு சங்கங்கள் கிராமங்களில் அமைப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னை பயிர்ச் செய்கை சபையினால் கற்பகதரு (கப்புறுக்க) சங்கங்கள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக அமைக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் பன்னங்கண்டி, இரத்தினபுரம், கிளிநகர், திருநகர் தெற்கு, வட க்கு, ஜெயந் திநகர், பெரிய பரந்தன், உரு த்திர புரம் வடக்கு, மேற்கு, சிவநகர் ஆகிய கிராமங்களில் சங்கங்களின் தெரிவுகள் நடைபெற்றுள்ளன.

மேற்படி சங்கம் அமைக்கும் கூட்டம் நேற்று முற்பகல் 10மணிக்கு சிவநகர் பொது மண்ட பத்தில் இடம்பெற்று சங்க அங்கத்தவர்கள் தெரிவும் நடத்தப்பட் டது.

முதல் கட்டமாக வீட்டுத்தோட்டப்பயனாளிகள் ஒவ்வொரு வ ருக்கும் தலா 5 தென்னங்கன்றுகள் வீதம் ஆயிரம் தென்னங்கன்றுகள் ஜுலை மாதம் முதலாம் வார த்தில் வழங்கப்படவு ள்ளன.

அத்துடன் தென் னை பயிர்ச்செய்கை சபையினால் புதுந டுகை, மீள்நடுகை மற்றும் மானியங்களும் வழங்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர், கிராமத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிவநகர் கற்பகதரு சங்கத்தின் தலைவராக சி.சாந்தமலர், செயலாளராக ம.தர்சினி, பொருளாளராக கோ.தயாளினி மற்றும் ஆறு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (2-254)

# அதிசய சிவப்பு வெளவால் கடித்து சிறுமி காயம்



வவுனியா கனகராயன் குளம் மன்ன குளத்தில் உலாவிய அதிசய சிவப்பு வெளவால் கடித்து சிறுமி ஒருவர் காயமடைந்தார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. (2-250)

# தொழில் தேடுபவர்கள் பதிவு மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட பகுதிகளில் வாழும் தொழில் வாய்ப்புக்கள் அற்றோரின் விபரங்கள் தொடர்பான பதிவுகள் நாளை வியாழக்கிழமை மேற் கொள்ளப்படவுள்ளன.

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவின் கீழ்வாழும் தொழில் வாய்ப்பற்று தொழில் தேடிக்கொண்டிருப்போரின் சரியான தொகையினை கண்டறிந்து அவர்களது சுயவிப ரங்களைப் பெற்று அவர்களுக்கு பொருத்த மான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவின் அனைத்து கிராம அலுவலகர் பிரிவுகளிலும் நாளை வியா ழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை தொழில் தோடுவோரின் பதிவுகள் மேற்கொள்ளப்பட வுள்ளதால் அனைத்து தொழில் தேடிக் கொண்டிருப்போரும் தங்கள் தங்களது கிராம அலுவலகர் பிரிவுகளிலும் பதிவுகளை பதிவு செய்து தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ளுமாறு தெல்லிப்பழை பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ-3)

# காக்கைதீவு பசளை தயாரிப்பு நிலையத்தை தனியாருக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது

யாழ்.மாநகரசபையின் கீழ் இயங்கும் காக்கைதீவு பசளை தயாரிப்பு நிலையத்தினை இந்த வருடத்திற்கான கேள்விக்கோரலின் மூலம் தனியாருக்கு வழங்குவதற்காக திட்ட மிடப்பட்டுள்ளதாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக் கையில்,

மட்டுப்படுத்தப்பட்ட மாநகரசபையின் வளங்களைக்கொண்டு காக்கைதீவு பசளை தயாரிப்பு நிலையமானது இயங்கி வருகின்றது.

சேகரிக்கும் குப்பைகளின் அளவு அதிகமாகவும் தயாரிக்கப்படும் பசளையின் அளவு குறைவாகவும் இருப்பதால் குப்பைகள் தேங்கும் நிலை காணப்படுகிறது.

மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் தினந் தோறும் 60 லோட் குப்பைகள் (90 தொன்) சேகரிக்கப்படுகின்றன. இதில் 75 வீதம் உக்கக்கூடிய கழிவுகளாகும். இவற்றில் 25 வீதம் மட்டுமே பசளையாக்கப்படுகின்றது.

உக்கக்கூடிய கழிவுகள் அனைத்தையும் பயன்படுத்துவதன்மூலம் கழிவுத்தேக்கத் தினை கட்டுப்படுத்த முடியும். கழிவுகள் எஞ்சுமாயின் அவற்றை வயல்களுக்கு பசளையாக் கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

தற்போது 3 மாதங்களுக்கு 2 தொன் பசளை தயாரிக்கப்படுகிறது. ஒரு கிலோ கிராம் பசளை 10 ரூபாவுக்கு விற்கப்படுகிறது.

இதனை தனியாருக்கு வழங்குவதால் பசளை உற்பத்தி வீதத்தினை அதிகரிப்பதன் மூலம் சூழல் மாசடைதல் தவிர்க்கப்படும்.

அத்துடன் பகிரங்க கேள்வி கோரலின் அடிப்படையில் வருடாந்தம் ஒரு தொகையை தனியாரிடம் இருந்து மாநகரசபை வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பெண்ணின் கையைப் பிடித்தவருக்கு வெள்ளிக்கிழமைவரை விளக்கமறியல்

தனது பிறந்த தினத்திற்கு ஆடை தைப் பதற்கென தையற்கடை ஒன்றிற்கு சென்ற பெண் ஒருவரின் கையைப் பிடித்து இழுத் தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் ளார்.

புலோலி பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சம்பந்தப்பட்ட நபருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக் கல் செய்துள்ளனர்.

மேற்படி வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா இவ்வுத்தரவைப் பிறப் பித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்வதை தடுப்பதற்கு இத்தகைய நபர்களை விளக்க மறியலில் வைக்க வேண்டுமென்ற பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைவாகவே இவ்வுத் தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-3-60)

# நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் மஹோற்சவத்தை முன்னிட்டு பேருந்து சேவை

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு மஹோற்சவ காலங்களில் அதிகாலை 4 மணியில் இருந்து இ.போ.ச. பேருந்துச் சேவைகள் இடம்பெறுமென இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய செயலாற்றல் முகாமையாளர் கே.கேதீசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு பக்தர்களில் நலன் கருதி இ.போ.ச பேருந்து சேவைகள் பயணிகளின் வருகையின் அடிப்படையில் தொடர்ச்சியாக இடம்பெறும்.

கொடியேற்றம் சப்பறம், தேர், தீர்த்தம் போன்ற விசேட தினங்களில் அதிகாலை 4 மணிக்கும் ஏனைய தினங்களில் சற்று தாமதமாகவும் பேருந்துச் சேவை இடம்பெறும். பேருந்து கட்டணமாக 72 ரூபாய் அறவிடப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அலமுப் பாட்டியும் அழைப்பு மணியும்



**கோ**குல் சற்று தூரத்தில் நின்றபடி அலமுப் பாட்டியின் வீட்டைக் கவனித்தான்.

பாட்டியின் வீட்டுக் கதவு மூடி இருந்தது. இதுதான் சரியான நேரம் என்று மெதுவாகக் கதவு அருகே சென்றான்.

சுற்றிலும் பார்த்துவிட்டு வீட்டு அழைப்பு மணியை அழுத்திவிட்டு, ஓடிச்சென்று ஒரு மரத்தின் பின்னால் பதுங்கினான். அங்கே இருந்தபடியே கவனித்தான்.

சற்று நேரத்தில் அலமுப் பாட்டி வந்து கதவைத் திறந்தார். வாசலில் யாரையும் காணாததால், இடப்புறமும் வலப்புறமும் திரும்பிப் பார்த்துவிட்டு உள்ளே சென்று விட்டார். அதைப் பார்த்த கோகுல் தனக்குள் சிரித்துக்கொண்டான்.

விடுமுறை நாட்களிலோ அல்லது பள்ளிவிட்டு வந்த பிறகோ, கோகுல் அக்கம் பக்கத்து வீடுகளில் அடிக்கடி செய்யும் குறும்பு இது. யார் வீட்டு அழைப்பு மணியையாவது அழுத்துவான்.

அவர்கள் கதவைத் திறக்கும் முன் ஒளிந்துகொள்வான். கதவைத் திறப்பவர்கள் யாரையும் காணாமல் ஏமாறுவதில் கோகுலுக்குக் குதூகலம்.

அலமுப் பாட்டிக்கு 70 வயதுக்கு மேலே இருக்கும். அவருக்கு ஒரு கால் சரியில்லை.

சில வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட விபத்தினால், சற்றே சாய்ந்து சாய்ந்துதான் நடப்பார். கைத்தடியுடன் சாலையில் அவர் நடந்து செல்லும்போது பார்க்கப் பாவமாக இருக்கும்.

கோகுல் பலமுறை நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு பாட்டியைக் கிண்டல் செய்திருக்கிறான். இப்படி வீட்டு அழைப்பு மணியை அழுத்துவதுகூட நண்பன் மகேஷ் சொல்லிக் கொடுத்ததுதான்.

சில தினங்களுக்குப் பிறகு...

வழக்கம்போல அலமுப் பாட்டியின் வீட்டை நோட்டம் விட்டான் கோகுல். கதவு மூடியிருந்தது. வேகமாகச் சென்று அழைப்பு மணியை அழுத்திவிட்டு, மரத்தின் பின்னால் மறைந்துகொண்டான். சற்று நேரத்தில் அலமுப் பாட்டி கதவைத் திறந்து வெளியே வந்து பார்த்துவிட்டு, உள்ளே சென்றுவிட்டார்.

இன்றும் தன்னைப் பாட்டி பார்க்கவில்லை என்று நினைத்தான். ஆனால், கோகுல் அழைப்பு மணியை அழுத்த வரும்போதே, பாட்டி ஜன்னல் அருகில் நின்று பார்த்துவிட்டார்.

அரை மணி நேரம் கழிந்தது. கோகுல்! கோகுல்! என்று அழைத்துக்கொண்டே அவனது வீட்டுக்குள் வந்தார் அலமுப் பாட்டி.

பாட்டியின் குரலைக் கேட்டதும் மனம் பக்பக் என்று அடித்துக்கொண்டது.

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கத்தானே செய்யும்?

அவன் ஓடிச்சென்று படுக்கை அறையில் ஒளிந்துகொண்டான்.

பாட்டியுடன் அம்மா பேசுவது கேட்டது.

வாங்கம்மா! என்ன விடயம்?

கோகுல் என் வீட்டுக்கு வந்து இருந்தான்போல, காலிங்பெல்லை அடிச்சான்.

நான் கதவைத் திறக்கிறதுக்குள்ளே வந்துட்டான்.

அதுதான் அவனைப் பார்க்க வந்தேன் என்றார் பாட்டி.

கோகுல்... கோகுல் என்று அம்மா அழைத்தார்.

அதற்கு மேலும் ஒளிய முடியாமல் வெளியே வந்தான் கோகுல்.

பாட்டி வீட்டுக்குப் போனியாமே எதுக்கு? என்று அம்மா கேட்டார்.

திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல, பதில் சொல்லத் தெரியாமல் விழித்தபடி நின்றான் கோகுல்.

அப்போது அலமுப் பாட்டி, முன்னாடி எல்லாம் நான் கோகுலுக்கு அடிக்கடி சாக்லேட் வாங்கித் தருவேன். அந்த உரிமையில் இப்போதும் சாக்லேட் கேட்க வந்திருப்பான். அது தானே கோகுல்? இதோ வாங்கி வந்திருக்கேன் என்று சிரித்தபடியே தன் கையிலிருந்த சாக்லேட் ஒன்றை கோகுலிடம் கொடுத்தார்.

கோகுல் தயங்கித் தயங்கி வாங்கிக்கொண்டான்.

தான் செய்த தவறை அம்மாவிடம் சொல்லாதது மட்டுமின்றி சாக்லேட் வாங்கி வந்த பாட்டியைத் தலை நிமிர்ந்து பார்த்தான்.

உன்னை மாதிரி பசங்க இந்தப் பாட்டியை நினைவில் வைத்து வீட்டுக்கு வர்றது ரொம்ப சந்தோஷம்.

இனிமே நான் வந்து கதவைத் திறக்கும் வரை காத்திருக்கணும். அப்போதுதான் சாக்லேட் தரமுடியும் என்று சிரித்தபடியே சொல்லி விட்டுச் சென்றார்.

இப்போது எல்லாம் கோகுல் விடுமுறை நாட்களில் தன் நண்பர்களுடன் அலமுப் பாட்டி வீட்டின் அழைப்புமணியை அழுத்துகிறான்.

ஆனால்.ஓடி ஒளிவது இல்லை.

பாட்டியுடன் வீட்டு வேலைகளில் சின்னச் சின்ன உதவிகள் செய்கிறான்.

பாட்டியும் அவர்களுக்குக் கைநிறைய இனிப்புகளை வழங்கி அனுப்பி வைக்கிறார்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆

## 06.2015 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1579 - சேர் பிரான்சிஸ் டிறேக் "நோவா அல்பியன்" (கலிபோர்னியா) என்ற நாட்டை இங்கிலாந்துக்காக உரிமை கோரினார்.
- 1631 - மொகலாய மன்னன் ஷாஜகானின் மனைவி மும்தாஜ் மஹால் தனது 14 ஆவது மகப்பேறின போது காலமானாள்.
- 1839 - ஹவாய் பேரரசில் கத்தோலிக்கர் தமது சமயத்தை வழிபடுவதற்கு அனுமதிக்கப்பட்டது.
- 1885 - விடுதலைச் சிலை நியூயோர்க் துறைமுகத்தை வந்தடைந்தது.
- 1911 - செங்கோட்டை வாஞ்சிநாதன் திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் துரையை சுட்டுக் கொன்று தன்னையும் சுட்டுக் கொண்டான்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பாரிசை ஜேர்மனி கைப்பற்றியதை அடுத்து நட்பு நாடுகளின் படைகள் பிரான்சை விட்டு விலகத் தொடங்கின.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியப் படைகள் லிபியாவில் கப்பூசோ துறைமுகத்தை இத்தாலியர்களிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1940 - எஸ்தோனியா, லாத்வியா மற்றும் லித்துவேனியா ஆகிய பால்ட்டிக் நாடுகளை சோவியத் ஒன்றியம் கைப்பற்றியது.
- 1944 - ஐஸ்லாந்து டென்மார்க்கிடம் இருந்து விடுதலை அடைந்து குடியரசாகியது.
- 1944 - பிரெஞ்சுப் படைகள் எல்பா தீவை ஜேர்மனியிடம் இருந்து விடுவித்தனர்.
- 1954 - குவாத்தமாலாவில் இராணுவப் புரட்சி இடம் பெற்றது.
- 1987 - மாலைநேர கடல் குருவியினத்தின் கடைசிக் குருவி இறந்ததில் அவ்வினம் முற்றாக அழிந்தது.

**பிறப்புகள்**

- 1703 - ஜோன் வெஸ்லி, மெதடிஸ்தத்தை ஆரம்பித்தவர் (இ. 1791)
- 1942 - மொகம்மது எல்பரதேய், பன்னாட்டு அணுசக்தி அமைப்பின் தலைமை இயக்குனர். நோபல் பரிசு பெற்றவர்

**இறப்புகள**

- **1858 - ராணி லட்சுமிபாய் (ஜான்சிராணி), இந்திய விடுதலைப் போராட்ட வீராங்கனை (பி. 1835)**
- 1911 - வாஞ்சிநாதன், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1886)
- 2001 - டொனால்ட் கிராம், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1919)

### ஜான்சி ராணி லட்சுமிபாய்



மணிகர்ணிகா எனும் இயற்பெயருடன் 1835 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி பிறந்தார். இவர் 1857 இல் இந்தியக் கிளர்ச்சியில் பிரித்தானியரின் ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்தவர்களில் முன்னோடியாகக் கணிக்கப்படுகின்றார்.

1842 இல் ஜான்சி மகாராஜா கங்காதரராவ் நிவல்கரைத் திருமணம் செய்தார். 1853 நவம்பர் 21 இல் ராஜா மறைந்ததன் பின் இவரே ஜான்சியை ஆட்சி செய்தார். பல தடவைகள் ஆங்கிலேயர்கள் ஜான்சியை முற்றுகையிட்டபோதும் அவர்களால் ஜான்சியைக் கைப்பற்ற முடியவில்லை. எனினும் 1858 ஏப்ரல் 4 ஆம் திகதி கடும் எதிர்ப்புக்கு மத்தியில் ஆங்கிலேயர் ஜான்சிக் கோட்டையைக் கைப்பற்றினர். இதன்போது மகனுடன் கோட்டை மதிலிலிருந்து பாய்ந்து தப்பித்த ராணி குவாலியரின் கோட்டை ஒன்றை கைப்பற்றிக் கொண்டார்.

1858 ஆம் ஆண்டு ஜூன் 17 ஆம் திகதி வெள்ளையரை எதிர்த்துப் போரிட்ட ஜான்சி ராணி வீர மரணமடைந்தார். இவர் அனைத்துப் புரட்சித் தலைவர்களிலும் மிகவும் ஆபத்தானவர் எனவும் வீரம், விவேகம், விடாமுயற்சி என்பவற்றுக்கு குறிப்பிடத்தக்கவர் எனவும் ஆங்கிலேயர்களால் புகழப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

'தமிழ்நாட்டில் ரஜினிக்கு 30 ஆயிரம் ரசிகர் மன்றங்கள்!

வெளிநாடுகளிலும் ரசிகர்கள் குவிகிறார்கள்

தமிழ்நாட்டில் ரஜினிகாந்துக்கு 30 ஆயிரம் ரசிகர் மன்றங்கள் உள்ளன. ஜப்பான் போன்ற வெளிநாடுகளிலும் ரசிகர்கள் பெருகி வருகிறார்கள்.

இந்த தகவலை அகில இந்திய ரஜினிகாந்த் ரசிகர் மன்ற தலைவர் சத்யநாராயணா வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"தமிழ்நாட்டில் மட்டும் அங்கீகாரம் பெற்ற ரஜினி மன்றங்கள் 25 ஆயிரம். இப்போது அங்கீகாரம் பெறாத மன்றங்களையும் சேர்த்து 30 ஆயிரம் மன்றங்கள் உள்ளன. பதிவை நிறுத்திய பிறகும், ரஜினி மேல் அன்பு கொண்டவர்கள் மன்றங்களை தொடங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

மற்ற மாநிலங்களுக்கு நாங்கள் பதிவு எண் கொடுக்கவில்லை என்றாலும் இந்தியாவில் தமிழர்கள் பரவலாக இருக்கும் அத்தனை இடங்களிலும் ரஜினி மன்றங்கள் தொடங்கிய வண்ணமாக த்தான் இருக்கிறார்கள்.

வெளிநாட்டுத் தமிழர்கள் தங்கள் பகுதிகளில் மன்றங்கள் அமைக்க விரும்பி எங்களிடம் கேட்டு வருகிறார்கள். சமீபத்தில் அந்தமானில் இருந்தும் இப்படி கேட்டார்கள்.

**ஜப்பானில்**

ஜப்பானில் 'முத்து' திரையிடப்பட்ட பிறகு அங்கு அவருக்கு கிடைத்துள்ள ரசிகர்கள் - ரசிகைகள் ஏராளம். சினிமா மூலம் ரஜினி சாருக்கு கிடைத்த மிகப்பெரிய சொத்துக்கள் இவர்கள்.



நாம் போற்றி வணங்க வேண்டிய இடத்தில் இருப்பவர்கள் 'மாதா பிதா குரு தெய்வம்' என்று சொல்வார்கள். என்னைப் பொறுத்த வரையில் இந்த வரிசையில் 'மாதா பிதா குரு தெய்வத்துக்கு அடுத்த இடத்தில் ரஜினி சாரை வைத்திருக்கிறேன். அவர் மூலம் கிடைத்த இந்த பொறுப்பை எனக்குக் கிடைத்த பெரிய பாக்யமாக உணருகிறேன்.'

இவ்வாறு சத்யநாராயணா கூறினார்.

**இணைய தளம்**

ரஜினிகாந்த் பற்றிய விவரங்கள் அடங்கிய இணைய தளங்கள், நிறைய உள்ளன. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ரஜினி ரசிகர்கள் ஒன்று சேர்ந்து, www.rajinifans.com என்ற இணைய தளத்தை அமைத்துள்ளனர். ரஜினியின் வாழ்க்கைக் குறிப்பு, அவர் நடித்த படங்கள், சாதனைகள், பெற்ற விருதுகள் முதலான விவரங்கள் இதில் உள்ளன.

இந்த இணைய தளத்தின் புள்ளி விவர பகுதியை கவனிக்கும் சென்னை யைச் சேர்ந்த டி.வி.ஈ.ராஜேஷ் கூறியதாவது:-


'2002- ஆம் ஆண்டில், பாபா படம் வெளியான பிறகு, இந்த இணைய தளம் தொடங்கப்பட்டது. சிங்கப்பூரைச் சேர்ந்த ஷாஜஹான் முயற்சியால் இது உருவாயிற்று. ராம்கி, நடராஜன், சீனிவாசன், டி.வி.சுந்தர் ஆகியோருக்கு முக்கிய பொறுப்பு உண்டு.

உலகம் முழுவதும் சுமார் 10 ஆயிரம் பேர், இந்த இணைய தளத்தின் உறுப்பினர்கள் ஆகியிருக்கிறோம். ரஜினியை பற்றிய தகவல்களை அவ்வப்போது பரிமாறிக்கொள்வோம். தினமும் ஏராளமான பேர் இந்த இணைய தளத்தைப் பார்க்கிறார்கள்.

ரஜினி மீது பற்று கொண்ட ரசிகர்கள், எவ்வித எதிர்பார்ப்புமின்றி உருவாக்கிய இணையதளம் இது.

இணையதளத்தை உருவாக்கியதுடன் மட்டுமின்றி, சுனாமி ஏற்பட்டபோது, நிதி திரட்டி வழங்கினோம். ரத்த தானமும் செய்து வருகிறோம்.' இவ்வாறு ராஜேஷ் கூறினார்.

(தொடரும்)





# கருவாச்சி காவியம்

**வைரமுத்து–166**



புளிச்சதண்ணிச் சொம்ப வலது கையில் வாங்கி வைச்சிக்கட்டு, " அந்தா போறா பாரு லவுக்க போட்டு... அவ யாரு தாயி" ன்னு கேட்டா கெழவி.

" திம்சு "

" இல்ல ஆத்தா. அவ பேரு பேயம்மா. இந்த ஊர்ல அவளுக்கு என்னா சோலி?"

" ரெண்டாந்தாரமா வாக்க ப்பட்டு வந்திருக்கா."

" ரெண்டாந் தாரமாவா?"

" ஆமா. பிள்ளையில்லாத ஒரு பொரிய வீட்டுக்கு வாரிசு குடுக்க வந்திருக்கா.!"

" வாரிசா? கூமுட்டை எப்படி குஞ்சு பொரிக்கும்?"

" என்னாத்தா சொல்ற?"

" ஆமாதாயி கர்ப்பப்பை இல்லாதவா எப்படி பிள்ள பெறமுடியும்?"

" கர்ப்பப்பை இல்லையா? நெசமாவா?"

" பொய்யா சொல்றேன். அவளுக்கு கருக்கலைச்சவ நானு: கர்ப்பபை எரிஞ்சு போச்சுன்னு சொன்னவ நானு. நான் கும்புடுற முனு சாமி மேல சத்தியம்"

" நெஞ்சப் புடிச்சு நின்னு போன கருவாச்சி கெழவியக் கையப் புடிச்சு இழுத்து வீட்டுக்குள்ள கூட்டிட்டுப் போனா."

கெழவிஉள்ள போனதும்-

அடைக்குது கருவாச்சிக் கதவு:

அரவமில்லாக் கமுக்கமாத் தொறக்குது

திம்சோட கடந்த காலக் கதவு.

திம்சு கதைய மருத்துவிச்சி சொல்லச் சொல்ல ' திக்கு திக்கு' னு நெஞ்சடைச்சுக் ' குப்பு.குப்பு ' ன்னு வேர்த்துப் போச்சு கருவாச்சிக்கு.

' யாத்தே இப்படி ஒரு பொம்பளையா? இவளும் ஒரு பொம்பளையா? ரெண்டு கையிலயும் மார்ல அடிச்சு மல்லாந்து விழுந்து போனா கருவாச்சி.

புத்தி தெளிஞ்சு எந்திரிச்சுப் பொறுமையா யோசிச்சா. பந்தல்ல தொங்குறது புடலங்காயில்ல பச்சப் பாம்புன்னு தொரிஞ்சு போச்சு அவளுக்கு: பொம்பள வேசம் போட்டு எமராசா புகுந்திருச்சு சடையத்தேவன் வீட்டுக்குள்ளன்ன புரிஞ்சு போச்சு.

இதுவரைக்கும் இவ என்னென்னா கூத்து நடத்தியிருக்கா? என்னா நடக்குது என்னியச் 'சுத்தி? நெனைக்க நெனைக்க பொறி பறக்குது புத்திக்குள்ள.

ஆமா இந்த அஞ்சாறு மாசமாவே அழகுசிங்கம் பயசரிவர வாரதில்லையே! புத்துல பாம்பு மாதிரி எப்ப வாச்சும் தலையகாமிச்சுட்டு பொசுக் பொசுக்குன்னு ஓடி ஒளிஞ்சு போறானே... எங்க போறான்.. எங்க வாரான்? இவ மருந்து மாயம் வச்சிருப்பாளோ மகனுககு? ஒண்ணும் புடிபடல.

அப்பப்ப வெள்ளையுஞ் சொள்ளையுமா வாரான். உள்பையில கைவிட்டு ஒண்ணு ரெண்டு தாரான். இந்தாடா ராசர சாப்பிடுன்னா எட்டி மிதிச்சுட்டு போறான்.

" அய்யா தங்கம்...புலி வாயில குடியிருக்கிற மாதிரி எதிரிகளோட இருக்கிறமடா. ஒன்னிய அடிச்சா கேக்க ஆளில்லடா மகனே! ஆளத் தேடிச் சீரத்தேடு. தாய்வழி சொந்தத்துல பொண்ணக் கட்டு. மொதலக்கம்பட்டி மொறைப் பொண்ணு செந்துருக்கம் கட்னா மாமனத்தான் கட்டுவேன்னு கட்னசீல அவுக் காமக் கண்ணொழுக நிக்கிறாளாம். அவளக்கட்டிக்க. ஆள்கட்டு உள்ள வம்சமடா. ஒம்மேல எல விழுந்தாலும் தல விழுகுமடா.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28 ஆயிரத்து 200 கோடி 6மாதங்களில் அரசு கடன்

## பந்துல பட்டியல்



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் கடந்த 6 மாதங்களில் மாத்திரம் 28 ஆயிரத்து 200 கோடி கடன் வாங்கியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஆனாலும் கடந்த வருடம் முழுதும் 26 ஆயிரம் கோடி கடனே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதில 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் 5.125 வீத வட்டிக்கே பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் தற்போதைய அரசாங்கம் 6.125 வீத வட்டிக்கு 650 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொண்டுள்ளது.

கடந்த வருடத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகையை பயன்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்ததாகவும், இதனால் கடந்த வருடத்தை நாட்டின் அபிவிருத்தியில் தன்னிறைவடையாத வருடமாக கருத வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆனாலும் தற்போதைய அரசாங்கம் இவ்வளவு கடன் பெற்றுக் கொண்டும் கூட நிலையான டொலர் பெறுமதியை கொண்டு செல்லமுடியாத நிலையிலுள்ளது எனவும், இதனால் டொலருக்கு வழங்கப்படும் ரூபா பெறுமதி 137ஆகிவிட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

இதனால் ஏற்றுமதி பொருட்களின் விலை பாரியளவில் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கேற்றாற்போல் உள்நாட்டு பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டு நாடு பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன சுட்டிக் காட்டியுள்ளார். (இ-5)

# சம்பூர் காணி குறித்த தடையுத்தரவு நீடிப்பு

(கொழும்பு)

**சம்பூர் காணி தொடர்பான இடைக்காலத் தடையுத்தரவு நீடிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த வழக்கு அடுத்த மாதம் 10ஆம் திகதிவரை உயர் நீதிமன்றத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கானது, நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த போதும், விசாரணைகளினறி எதிர்வரும் 10 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.**

சம்பூர் மக்கள் சுமார் 9 ஆண்டுகளாக தங்களது சொந்தக் மண்ணில் குடியேறமுடியாமல் தவித்து வரும் நிலையில், கடந்த அரசாங்கம் சம்பூர் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள காணியொன்றை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு தொழிற்சாலை அமைப்பதற்காக வழங்கியிருந்தது.

இத்தீர்மானத்தை தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரத்து செய்திருந்தார். ஜனாதிபதியின் இந்த தீர்மானத்திற்கு எதிராகவே உயர்நீதிமன்றம் இடைக் காலத் தடை உத்தரவை பிறப்பிததிருந்தது.

குறித்த தனியார் நிறுவனமான ஸ்ரீலங்கா கேட்வே இன்டஸ்ட்ரீஸ் தாக்கல் செய்திருந்த மனுவை ஆராய்ந்த போதே நீதிமன்றம் கடந்த மாதம் இந்த தடை உத்தரவைப் பிறப்பித்திருந்தது.


இந்த வழக்கு விசாரணையின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் சமுகமளித்திருந்ததுடன், குறித்த தனியார் நிறுவனம் சார்பில் அதன் பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தனர்.

தொழிற்சாலை அமைக்கும் பணிகளுக்காக சுமார் 4 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக பணம் செலவிடப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புதிய வர்த்தமானி அறிவித்தல் காரணமாக தமக்கு பெரும் நட்டம் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2012 ஆம் ஆண்டு தங்களுக்கு இந்த காணியில் தொழிற்சாலை அமைப்பதற்கான அனுமதியை வழங்கியதாக மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய ஜனாதிபதி, சட்டத்துக்கு முரணான வகையில் குறித்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளதாகவும், அந்த அறிவித்தலை இரத்து செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் உயர்நீதிமன்றத்திடம் கடந்த மாதம் வாதிட்டிருந்தனர்.

இதேவேளை சம்பூர் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள காணிகளை மக்களின் மீள்குடியேற்றத்திற்காக கையளிப்பதாக அரசு அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை




Botanical Name:Myristica Fragrans
Family:Myristicaceae
Engl: Nut meg
Sinh:Sadikka

## சாதிக்காய்

நடுத்தரமாக வளரக்கூடிய பசுமையான மரமாகும்.8-13 மீற்றர் வரை வளரும். பல கிளைகளைக் கொண்ட மரமாகும். இலைகள் தனியிலை, ஒன்றுவிட்ட இலையமைப்பைக் கொண்டது. 10-15 செ.மீ. நீளமான நீள்கோளவடிவ இலைகள். ஒழுங்கான, ஒருபாலான பூக்கள் மஞ்சள் நிறமானவை. கோளவடிவ பழங்கள்.பூக்கள் பெரும்பாலும் வருடம் முழுவதும் காணப்படும்.

முற்றிய சாதிக்காயை உடைத்தால், உள்ளே பழுப்பு நிறமான சதைப்பற்றினுள் நடுமையத்தில் கோழிமுட்டை வடிவத்தில் கருநிறமான ஒரு விதைக்கனியம் இருக்கும். அதன் விதையின் மேல் மூடியிருக்கும் தசைபோன்ற பொருளை நீக்கிவிட்டால் உள்ளே பழுப்பு நிறமான உறுதியான தோல் மூடப்பட்ட ஒரு வட்டவடிவ வழுவழுப்பான விதை இருக்கும். இந்தத் தோல் ஒரு மில்லி மீற்றர் கனத்தில் பலமுள்ளதாக இருக்கும். இதை உடைத்தால்தான் உள்ளே சதைப்பற்றுள்ள மரக்கட்டை போன்ற சாதிக்காய் காணப்படும்.

இது தற்போது குளிரான பிரதேசங்களில் பயிரிடப்படுகிறது. எனினும் உலர் சரக்காக சாதிக்காயை உணவுகளுக்கு வாசனையூட்டவும் மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது.

ஓடு நீக்கிய சாதிக்காயை குழந்தைகளுக்கு பயன்படுத்த முன்பு அதை வேகும் சாதத்துடன் சேர்த்து வைத்து வேகவைத்து சாதத்தை வடித்தபின் சாதிக்காயை எடுத்து உலர வைத்த பின்புதான் அதை உபயோகப்படுத்த வேண்டும். சாதிக்காய்க்கு நல்ல நறுமணமுண்டு. சீதளத்தை (குளிர்ச்சியை) போக்கி உஷ்ணத்தை உண்டு பண்ணும்.

சாதிக்காய் 130 மி.கிராம், சுக்குத்தூள் 130 மி.கி. சீரகம் 325 மி.கி இவற்றை நன்றாக பொடிசெய்து 1-2 கிராம் அளவு உணவுக்கு முன் சாப்பிட்டுவர வயிற்றிலுண்டாகும் வாயுவைப்போக்கி செரிப்பை உண்டு பண்ணும்.

இதில் 2 கிராம் தூளைப் பாலில் கலக்கி கழிச்சலுக்கும் கொடுக்கலாம்.

சாதிக்காய்த்தூளை நீரில் போட்டு வாணலியிலிட்டு (Steam distillate apperatus) வடிக்கின்ற எண்ணெய் பல்வலிக்கு பூசலாம். வாசனையுமுண்டு. (1-5 துளி பயன்படுத்தலாம்)

சாதிக்காய், சணல், ஏலக்காய், கராம்பு ஒவ்வொன்றும் 4 கிராம் எடுத்து நன்றாக பொடித்து 2-4 கிராம் எடுக்க இருமல், வயிற்றுவலி, பெரும்பாடு (மாதவிடாய்க்காலத்து கூடிய இரத்தப்போக்கு) வாதவலி குணமாகும்.

சாதிக்காயை குளிர்ந்த நீரில் போட்டு தயாரித்த குளிர்ந்தநீர் ஊறல் குடிநீர் 30-60 மில்லி எடுக்க வாந்தி பேதியாலுண்டாகும் நீர்வேட்கையை நீக்கும்.

சாதிக்காயை அரைத்து கண்ணைச் சுற்றிப் பற்றிட கண் ஒளி உண்டாகும்.

சாதிக்காய், சுக்கு, துளசிவிதை, கடுக்காய் இவைகளை ஒரேயளவாக எடுத்து உரலில் போட்டு தூளாக இடித்து, அரித்து ஒரு சீசாவில் பத்திரப்படுத்தவேண்டும். காலை, மாலை 1-2 கிராம் தூளை 200 மில்லி காய்ச்சிய பசும்பாலில் போட்டுக் கலக்கி 48 நாட்கள் சாப்பிட்டுவர ஆண் மலடு நீங்கும்.

சாதிக்காய், இலவங்கம், ஏலக்காய் ஒரேயளவு எடுத்து பொடித்து அரித்து அதில் ஒரு கிராம் காலை, மாலை 100 மில்லி வற்றக் காய்ச்சிய பசும்பாலில் கலக்கி எடுக்க வாத நோய் சம்பந்தமான கோளாறுகள் நீங்கும். இதில் 2 கிராம் பெரும்பாட்டிற்கும் உபயோகிக்கலாம்.

வயிற்றுப்போக்கிற்கு சாதிக்காய், சீரகம், சுக்கு இவைகளைப் பட்டுப்போல அரைத்து 3 சம உருண்டையாக்கி காலை, மதியம், இரவு ஒரு உருண்டை வெந்நீரில் அருந்த வயிற்றுப்போக்கு குணமாகும்.

பல்வலி ஏற்பட்டால் சாதிக்காய் பொடி 500 மி.கி. அளவு எடுத்து வலியுள்ள இடத்தில் வைத்து அழுத்திப்பிடித்து 15 நிமிடம் வைத்திருந்தால் பல்வலி நீங்கும்.

கழிச்சல் ஏற்பட்டால் 2 சாதிக்காயை உடைத்து ஒரு புதுச்சட்டியில் போட்டு 300 மில்லி நீர் விட்டு அடுப்பில் வைத்து ஒன்றாக கொதிக்க வைத்து இறக்கி, அதிலுள்ள சாதிக்காயை எடுக்காமல் தண்ணீரை மட்டும் இறுத்து 60 மில்லி வீதம் 2 மணித்தியாலத்திற்கு ஒரு முறை எடுத்துவர கழிச்சல் கட்டுப்படும்.

சாதிக்காய்க்கு பசித்தீ தூண்டி செரிப்புண்டாக்கிவாய்வகற்றி ஆகிய மருத்துவக்குணங்கள் உண்டு. ஓங்காளம், வாந்தி, வயிற்றுப் பொருமலுள்ளவர்களும் சாதிக்காய், குடிநீர் அல்லது சாதிக்காயத் தூளை பயன்படுத்தலாம்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிகளைப் பெற்றுக்கொண்டவர்களே எனக்கு எதிராக செயற்பட்டுவருகின்றனர்

## மகிந்த ராஜபக்ஷ கவலை



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சேறு பூசும் அரசியலில் ஈடுபடுபவர் அல்லர் எனவும் என்னிடம் அதிகளவு உதவிகளைப பெற்றுக் கொண்டவர்களே எனக்கு எதிராக செயற்படு கின்றனர் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கவலையுடன் தெரிவித்துள்ளார்.

சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு தொலைபேசி ஊடாக அவர் இதனைக் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க சேறு பூசும் அரசியலில் ஈடுபடக் கூடியவரல்லர்.

என்னிடம் பல்வேறு வழிகளில் உதவிகளைப் பெற்றுக கொண்டவர்கள் கூட இன்று எனக்கு எதிராக சேறு பூசுகின்றனர், எனினும் ரணில் அவ்வாறு செய்யவில்லை.

சேறு பூசுவதிலும் ஓர் எல்லையிருக்க வேண்டும். ஒட்டு மொத்த குடும்பத்திற்கு எதிராகவும் சேறு பூசப்படுகி ன்றது.

நான் இன்று மாத்தறைக்கு செல்ல வேண்டுமென்றாலும் ஒரு சிலரிடம் கேட்க வேண்டியுள்ளது.

மாத்தறைக்கு செல்ல எவரின் அனுமதியும் தேவையில்லை, இதற்கு முன்னரும் நான் மாத்தறை சென்றிருக்கின்றேன்.

இன்று ஊடகங்கள் கேலிச்சித்திரங்களுக்கு என்னைப் பயன்படுத்துகின்றன. அவற்றை பார்த்து நான் சந்தோசமடைகின்றேன்.

ஊடகங்கள் என்னுடன் எப்போது சுமுகமான உறவினைப் பேணி வருகின்றன, சமநிலையாக செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

எனக்கு ஆச்சரியம், என்னிடம் அதிகளவு உதவி பெற்றுக் கொண்டவர்களே இன்று எனக்கு எதிராக செயற்படுகின்றனர்.

அவர்களின் கோவைகள் இன்னமும் என்னிடம் இருக்கின்றன.

எனது வீட்டில் இளநீர் பறித்தவர்களும் எனக்கு துரோகம் செய்கின்றார்கள்.

அவற்றுக்கு நான் கோபப்படப் போவதில்லை.

அண்மையில் வாசுதேவ நாணயக்கார நாடாளுமன்றில் கெட்டவார்த்தை பிரயோகித்தமை திடீர் ஆத்திரம் காரணமாகவாகும்.

ரணில் அவரை எழும்பச் சொல்லியும் அமரச் சொல்லியும் உத்தரவு பிறப்பித்தார் எனவும் தனது குடும்பத்துக்கு எதிராக செயற்பட்டு வருபவர்களுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 160 | 120 | 140 |
| தக்காளி | 80 | 80 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 50 |
| கோவா | 110 | 120 | 100 | 120 |
| கரட் | 300 | 240 | 200-280 | 200 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 100 | 80 | 70 | 60 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 130 | 160 | 100-140 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 160 | 120 | 140 | 180 |
| வெண்டிக்காய் | 150 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 160 | 100 | 100 |
| பயற்றங்காய் | 180 | 100 | 160 | 120 |
| லீக்ஸ் | 160 | 200 | 160 | 180 |
| பீற்றூட் | 100 | 160 | — | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 140 | 140 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 300 | 500 |
| போஞ்சி | 240 | 280 | 240 | 140 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | — | 50 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 40 | 15 |
| தேசிக்காய் | 140 | 160 | 160 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40-50 | 60 | 50 |
| இராசவள்ளி | 140 | 150 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 300 | 360 | — | 200 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 404


டொறின் மன்மதநாயகம்

நேற்றைய தோல்விகளைப் போலவே இன்றைய வெற்றியும் எமக்கு சொந்தமில்லை.

சிவம் சக்தி




துஷா துஷா



எனக்கு என்னமோ அந்த முள்ளு இரண்டு மூணு தடவை சுத்தி வந்தாப் போல இருக்குதப்பா...


இந்துஜன் ரமணன்




கிரு கிருஜிகா




சானுகா பத்மநாதன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. செயலாளர் நாயகம் கிழக்கு ஐரோப்பிய பெண்ணா?

1945 ஆம் ஆண்டு ஓக்டோபர் மாதம் 24 ஆம் திகதி உதயமாகிய ஐக்கிய நாடுகள் சபையில் தற்போதைய நிலையில் இரு பார்வையாளர் நாடுகள் உட்பட எல்லாமாக 195 நாடுகளை கொண்டுள்ளது. ஆனால் சுதந்திரமான சில நாடுகள் சில அரசியல் காரணங்களினால் ஐ. நா. அங்கத்துவம் அற்ற நிலையில் காணப்படுகின்றன.

ஐ.நா.வில் பார்வையாளர் அந்தஸ்தைக் கொண்டுள்ள வத்திகானிற்கும், பாலஸ்தீனியத்திற்கும் இச் சபையில் வாக்குரிமை கிடையாது. இவ் அமைப்பின் செயலாளர் நாயகம் பதவி முதல், சகல முக்கிய பதவிகளும் பிராந்திய அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுகின்றது. இவ் அடிப்படையில் ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் நாடுகளை, ஐந்து பிராந்திய குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன ஆபிரிக்கா, ஆசியா பசுபிக், லத்தின் அமெரிக்கா கரிபியன் (தென் அமெரிக்கா நாடுகளும் தீவுகளும்), மேற்கு ஐரோப்பாவும் மற்றையதும், கிழக்கு ஐரோப்பா என்பனவாகும்.

இவற்றில் மேற்கு ஐரோப்பாவும் மற்றையதும் தவிர்ந்த ஏனைய நான்கு பிராந்திய குழுக்களும், அவர்களது பிராந்தியங்களுக்கு உள்ள நாடுகளை உள்ளடக்கியுள்ளது. மேற்கு ஐரோப்பாவும் மற்றையதற்குள் - அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, துருக்கி, இஸ்ரேல் போன்ற நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்து.

இதில் வியப்பிற்குரிய பல விடயங்கள் காணப்படுகிறது. ஒன்று, அவுஸ்திரேலியா, நியூசிலாந்திற்கு அண்மையில், பசுபிக் சமுத்திரத்தில் உள்ள நாடான கிரிபாஸ்டி ஆசியா பசுபிக் குழுக்களிற்குள் காணப்படும் அதே வேளை, ஆசியா அல்லது ஆபிரிக்காவிற்குள் காணப்பட வேண்டிய இஸ்ரேல் மேற்கு ஐரோப்பாவும் மற்றையதற்குள் சேர்க்கப்பட்டுள்ளது. இவையாவும் ஐக்கிய நாடுகள் சபையின் கபடமான அரசியலை மிக எளிதாக காண்பிக்கின்றன.

1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஐ.நா. ஆரம்பிக்கப்பட்டவுடன், பிரித்தானியாவை சார்ந்த கிளட்வின் ஜேப் என்பவர் தற்காலிக செயலாளர் நாயமாக, நான்கு மாதங்கள் கடமையாற்றினார். 1946 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், நோர்வே நாட்டை சார்ந்த றைஜிவி லை என்பவர், ஐ.நா.வின் முதலாவது செயலாளர் நாயமாக தெரிவு செய்யப்பட்டார். ஆனால் இவரது இராண்டாவது தவணையை நீடிப்பதற்கு, அன்றைய சோவியத் யூனியன் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக இவரது பதவி 1952 ஆம் ஆண்டு முடிவிற்கு வந்ததைத் தொடர்ந்து, சுவீடன் நாட்டை சார்ந்த டக் காயமார் அக்னீ என்பவர், 1953 ஆம் ஆண்டு பதவி ஏற்றார். துரதிஷடவசமாக இவர் 1961 ஆம் ஆண்டு ஓர் விமான விபத்தில் இறந்தார்.

இவரைத் தொடர்ந்து ஆசிய பிராந்தியத்தில் அன்றைய பர்மா, இன்றைய மியான மார்க் நாட்டை சார்ந்த யு. தான், செயலாளர் நாயகத்தின் பதவிக்கு நியமிக்கப்பட்டார். இவர் தொடர்ந்து பத்து ஆண்டுகள் 1971 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை கடமையாற்றினார். இதனை அடுத்து மீண்டும் மேற்கு பிராந்தியத்தின் ஆஸ்திரியா நாட்டை சார்ந்த் குர்ட் வால்ட்கைம் என்பவர் நியமிக்கப்பட்டார். வால்ட்கைம் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை கடமையாற்றினார்.

ஆனால் வால்ட்கைம் ஐ.நா செயலாளர் நாயகம் பதவியிலிருந்து விலகிய பின்னர், தனது நாட்டின் ஜனாதிபதிக்கு பதவிக்கு இரண்டாவது தடவையாக போட்டியிட்ட வேளையில், இவர் பற்றிய பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

வால்ட்கைம் கிடலரின் ஜேர்மானிய இராணுவத்தில் சேவையாற்றிய வேளையில், யூதர்கள் மீதான பல கொடூரமான சம்பவங்களை அறிந்தவராகவும், அவற்றில் சம்பந்தப்பட்டவராகவும் குற்றம் சாட்டப்பட்டார். ஆனால், குர்ட் வால்ட்கைம் இவை யாவற்றையும் மறுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வால்ட்கைமின் பதவிக் காலம் முடிவுற்றதும், லத்தின் அமெரிக்கா கரிபியன் பிராந்தியத்தின் பேரு நாட்டை சார்ந்த ஜவீர் பேரஸ் டி குலியார் என்பவர் ஐ.நா. செயலாளர் நாயகம் பதவிக்கு தெரிவாகி, தொடர்ந்து பத்து வருட காலம், 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை கடமையாற்றினார்.

இதனை தொடர்ந்து ஆபிரிக்கா பிரந்தியத்தின் எகிப்து நாட்டை சார்ந்த பூட்டஸ் பூட்டஸ் காலீ என்பவர் இப்பதவிக்கு தெரிவானார். ஆனால் இவரது இரண்டாவது தவணையை நீட்டிப்பதற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினால், பூட்டஸ் காலீயின் பதவி, 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவிற்கு வந்துள்ளது.

இவ்வேளையில் கானா நாட்டை சோர்ந்த கோபி அணான் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டு, மிக வெற்றிகரமாக தொடர்ந்து பத்து வருடங்கள், 2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை கடமையாற்றினார். இதனைத் தொடர்ந்து மீண்டும் சுழற்சி முறையில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் தென் கொரியாவை சார்ந்த பங்-கீ மூன் அவர்கள் 2007 ஆம் ஆண்டு ஜனவரி முதல் இன்று வரை பதவி வகித்து வருகிறார்.

இவரது பதவிக்காலம், 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவிற்கு வரவுள்ள காரணத்தினால், ஏற்கனவே அடுத்த செயலாளர் நாயகத்தின் பதவிக்கான நபர்கள், ஏற்பாடுகள், கதைகள, பேச்சு வார்த்தைகள், கிசு கிசுக்க ஆரம்பமாகிவிட்டது.

இவ் அடிப்படையில், ஐ.நா. ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை செயலாளர் நாயகமாக பதவி வகித்தவர்களை ஆராயுமிடத்து, இரண்டு முக்கிய விடயங்கள் தெளிவாகின்றன. முதலாவதாக ஐ.நா.செயலாளர் பதவியில் இன்றுவரை எந்தவொரு பெண்ணும் கடமையாற்றியது கிடையாது, அடுத்து பூகோள ரீதியான சுழற்சி முறையில், இன்றுவரை எவரும், புதிய பிராந்தியமான, கிழக்கு ஐரோப்பிய பிராந்தியத்திலிருந்து இப்பதவியை வகித்தது கிடையாது. இவ்விரு விடயங்களும் உலகளவிய ரீதியில் தற்பொழுது மிகவும் முக்கியமான விடயங்களாக பார்க்கப்படுகிறது. ஏற்கனவே கிழ்க்கு ஐரோப்பியர் சிலர் இவ்விடயமாக கொந்தளிக்க தொடங்கிவிட்டனார்.

ஆகையால் இவ்விரு விடயங்களின் அடிப்படையில், அடுத்த ஐ.நா. செயலாளர் நாயகம், கிழக்கு ஐரோப்பியராக இருப்பது மட்டு மல்லாது, நிச்சயம் ஒரு பெண்ணாக இருக்க வேண்டும் என்பதே உலக நியாயவாதிகளின் அக்கறையும் கருத்தும். ஆண் ஆதிக்கம் கொண்ட இவ் உலகில், ஒரு பெண் இப்பதவியை அடைவதற்கு, இப்பதவியில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டு வரும் ஆண்கள் வழிவிடுவார்களா?

ஐ.நா. பாதுகாப்பு சபையின் ஐந்து நிரந்தர அங்கத்தவர்களிடையே உள்ள புரிந்துணர்வு என்னவெனில், தமது நாடுகளிலிருந்து எவரையும் செயலாளர் நாயகம் பதவிக்கான போட்டிக்கும் தெரிவிற்கும் நியமிப்பதில்லை என்பது.

தற்போதைய செயலாளர்நாயகம் பன்-கீ மூன் அவர்கள் தனது இரண்டாவது தவணையை 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பித்துள்ள காரணத்தினால், அடுத்த செயலாளர் பதவிக்கான வேலைதிட்டங்கள், அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படலாம்.



கடந்த செயலாளர்நாயகம் கோபி அணானை பொறுத்தவரையில், இச் செயலாளர் பதவி என்பது அளவிற்கு மிஞ்சிய பொறுப்புக்கள், கடமைகள், பாரங்கள், குற்றச் சாட்டுகள், குறைகள் நிறைந்தவை. இதனால் செயலாளர் நாயகம் என்பவர் ஓர் பலிக்கடவே என விபரித்துள்ளார்.

## செயலாளர் நாயகத்திற்கான போட்டியாளார்கள்

இன்றுவரை, கிழக்கு ஐரோப்பிய பிராந்தியத்தைச் சார்ந்த நான்கு பெண்களும், ஆறு ஆண்களும் இப்பதவிக்கான போட்டியில் கலந்து கொள்வதற்கான தமது விருப்பங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

பல்கேரிய நாட்டினுடைய முன்னாள் வெளிநாட்டு அமைச்சரும், யூனெஸ்கோ நிறுவனத்தின் இயக்குனர் நாயகமுமாகிய **ஈரினா போக்கோவர்**, லித்துவெனியாவின் ஜனாதிபதி **டலியா கிறிபாயகுசேற்**, குரோசிய நாட்டின் உதவி ஜனாதிபதி **வானிசா பியுசிக்**, பல்கேரியா நாட்டில் பொருளியலாளரும், வரவு செலவிற்கான ஐரோப்பிய ஆணையாளருமான **கிறிஸ்ரலினா ஜவானோவா** ஆகியோர் இப்பதவிக்கு போட்டியிடத் தயாராகும் கிழக்கு ஐரோப்பிய பெண்களாகும்.

இதேவேளை இப்பதவிக்கு போட்டியிடத் தயாராகும் ஆண்கள் வரிசையில் - சுலோவேனியா நாட்டின் முன்னாள் ஜனதிபதி **டனிலோ ருறோ**, இப் பதவிக்கான போட்டிக்கு தம்மை தாயார்ப்படுத்துகின்றார். டனிலோ ருறோ ஐக்கிய நாடுகள் சபையில் உதவி செயலாளர் நாயகம் உட்பட பல முக்கிய பதவிகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சேபியா நாட்டின் முன்னாள் வெளிநாட்டு அமைச்சரும் ஐ.நா. பொதுச் சபையின் தலைவராக 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை கடமையாற்றிய **வியூக் ஜெறிமிக** கங்கேரி நாட்டின் இன்றைய ஜனாதிபதி **ஜனோஸ் ஆடார்**, சுலோவாக்கிய நாட்டின் தற்போதைய உதவி பிரதமரும், வெளிநாட்டு அமைச்சருமான **மிறோசிலவா லாஜ்கேக**, சுலோவாக்கியவின் மற்றுமொரு பிரதிநிதியான முன்னாள் வெளிநாட்டு அமைச்சரான **ஜான் குபி** ஆகியோர் செயலாளர் நாயகத்தின் பதவிக்கு போட்டியிடுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு ஐரோப்பியா பிராந்தியத்தில் உள்ள இவர்கள் தவிர்ந்த, மேற்கு ஐரோப்பாவும் மற்றைய குழுவிலிருந்து, ஐ.நா. அகதி ஆணையாளரும், முன்னாள் போத்துக்கலின் பிரதமருமான **அன்ரோனியோ குயாற்ராஸ்ற்**, டென்மார்க்கின் தற்போதை பிரதமர் **கேலீ தோனிங் சிமிற** அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியவற்றின் முன்னாள் பிரதமர்களான **கேவின் ருட், கேலன் கிளாக்** ஆகியோரும் இப் பதவிக்கான போட்டியில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர்.

உண்மையில், பூலோக சுழற்சி முறையில், ஒவ்வொரு பிராந்தியமும், குறைந்தது ஒவ்வொரு நாற்பது, ஐம்பது வருடங்களிற்கு ஒருமுறையே ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கான பதவியை அடைய முடியும். ஆனால் மேற்கு ஐரோப்பிய நாடுகள் இப்பதவிக்கு மூன்று தடவைகள் தெரிவாகி கடமையாற்றியுள்ளதை நாம் காண முடிகின்றது.

ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கான பதவிக்கான தெரிவை பொறுத்தவரையில், இன்று வரை, முன்னைய சோவியத் யூனியனும், அமெரிக்காவும் இரு தடவைகள் தமது வீற்றோ உரிமையை பாவித்துள்ளனர். 1950 ஆம் ஆண்டு சோவியத் யூனியன், நோர்வே நாட்டை சார்ந்த **றைஜிவி லை** என்பரது இரண்டாவது தவணை நீடிப்பதற்கு எதிராகவும், 1996 ஆம் ஆண்டு, அமெரிக்கா எகிப்து நாட்டை சார்ந்த பூட்டஸ் பூட்டஸ் காலீயின் தவணை நீடிப்பிற்கு எதிராகவும், தமது வீற்ரோ அதிகாரங்களை பாவித்துள்ளனர். ஆகையால் பாதுகாப்பு சபையின் ஐந்து நிரந்தர அங்கத்தவர்களை திருப்திப்படுத்தும் வகையில் ஒருவரை ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பதவிக்கு தெரிவு செய்வது என்பது இலகுவான காரியம் அல்ல.

ஆகையால், உலகின் மிக முக்கியமான இவ் நிறுவனத்தில், பெண்களுக்கான சம அந்தஸ்த்தும், பூகோள ரீதியான சம உரிமையும் கடைப்பிடிக்கப்படுமா என்பதை, அடுத்த செயலாளர் நாயகத்தின் தெரிவு உறுதி செய்யும்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்விவகாரத்தில் சொல்ஹெய்மின் பின்புலம் இல்லை

## அரசு அறிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் உள்விவகாரத்தில் நோர்வேயின், முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல் ஹெய்முக்கு எவ்வித பங்கும் இல்லை என்றும் அண்மையில் லண்டனில் இடம் பெற்ற புலம்பெயர் தமிழர்களுடனான சந்திப்பின் போது அவர் தமது கருத்துக்களை மாத்திரம் பகிர்ந்து கொண்டதாகவும் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

இலங்கை விடயத்தில் எரிக் சொல்ஹெய்மின் பின்புலம் என்ற தலைப்பில் ஊடகங்களில் வெளியான செய்தி வெளியிட்டமை தொடர்பிலேயே அமைச்சரின் இக்கருத்து வெளியாகியுள்ளது.

லண்டன் நிகழ்வின்போது எரிக் சொல்ஹெய்ம் மிகக்குறுகிய நேரமே கலந்துரையாடலில் பங்கேற்றார் எனவும் அவை பயனுள்ளவையாக இருந்ததாகவும் அவர் தெரிவித்தார். இதன் போது அவர் தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பிரதமராகவே மகிந்த சூழ்ச்சி



அரசாங்கத்தால் கொண்டு வரப்படும் 20 ஆவது திருத்த சட்டத்திற்கு இடையூறு வரும் பட்சத்தில் எதிர் வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அமோக வெற்றியை பெற்றுக்கொடுத்து 20 ஆவது சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்பிரதமர்ஆவதற்காகவே மகிந்த சூழ்ச்சிகளை மேற் கொண்டு வருவதாகவும் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தலவாக்கலை நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள அஞ்சல் அலுவலக கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இங்கு தெரிவிகையில்,

நாட்டில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் படுதோல் வியடைந்த முன்னாள் ஜனாதிபதி தற்போது உள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு உதவிக் கரம் நீட்டாமல் மீண்டும் பிரதமர் ஆகுவதற்காக சூழ்ச்சிகளை மேற் கொண்டு வருகின்றார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# உலகத்தமிழர் பேரவையானது இலங்கையுடன் 4 கட்டங்களின் அடிப்படையில் செயற்படுகிறது

(கொழும்பு)

உலகத் தமிழர் பேரவை, இலங்கை அரசாங்கத்துடன் நான்கு கட்டங்களின் அடிப்படையிலேயே செயற்படுகிறது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் இலங்கையின் ஆங்கில செய்தித்தாள் ஒன்றுக்கு இதனை தெரிவித்துள்ளார்.

முதலாவது- இலங்கை தமிழர் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் இணக்கத்துடன் பொது உடன்பாடு.

இரண்டாவது- குடியியல் குழுக்களுடன் இணைந்து செயற்படுவது இதில், தென்பகுதியில் உள்ள அரசியல் மற்றும் அரசியல் அற்ற குழுக்களுடன் இணைந்து செயற்பட்டு தமிழர்களின் பிரச்சினைக்கான அடிப்படையை விளக்குவது.

மூன்றாவது- சர்வதேச சமூகத்தின் மத்தியில் தெளிவாக்கலை உண்டாக்குவது. இதன்மூலம் போர்க்குற்றம் தொடர்பான சர்வதேச விசாரணையை உறுதிப்படுத்தி உண்மையை வெளிக்கொணர்வது.

நான்காவது- போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச உதவியை பெற்றுக்கொடுப்பது என்று சுரேந்திரன் பட்டியலிட்டுள்ளார்.

தமது அமைப்பு, 2011ஆம் ஆண்டு முதல் இந்த நான்கு கட்ட செயற்பாட்டின் மூலமே இயங்கி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

போரின் போது தமது அமைப்பு, விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்தது என்ற குற்றச்சாட்டை மறுத்த அவர், போரின் பின்னர் 2010 ஆம் ஆண்டே உலக தமிழர் பேரவை, பிரித்தானிய நாடாளுமன்றத்தில் அந்த நாட்டின் வெளியுறவு செயலரினால் ஆரம்பிக்கப்பட்டது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை தமது அமைப்பு இலங்கையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நெருங்கிய தொடர்பை கொண்டிருப்பதாகவும் சுரேந்திரன் மேலும் தெரிவித்துள்ளார. (இ-5)

# பொதுத்தேர்தலுக்கு முன் பொலிஸ், தேர்தல் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும்

## கபே கோரிக்கை

(கொழும்பு)

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் பொதுத் தேர்தலுக்கு முன்னர் சுயாதீன தேர்தல் மற்றும் பொலிஸ் ஆணைக்குழுக்களை நியமிக்க வேண்டும் என நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) கோரியுள்ளது.

சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை அமைக்காமல் தேர்தலுக்கு செலவதனால் நீதியான தேர்தலை எதிர்பார்க்க முடியாது என்றும் அந்த இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் கபே அமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தினால் உத்தேசிக்கப்பட்டுளள சுயாதீன அரச சேவை, பொலிஸ் மற்றும் தேர்தல் ஆணைக்குழுக்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை.

ஊழல் மோசடிகளில் தொடர்புடையோர் சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்காது தேர்தலுக்கு செல்வதற்கு சில குழுவினர் செயற்பட்டு வருகின்றனர்.

இந்த செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது. புதிதாக பாராளுமன்றத்திற்கு தெரிவாக முயற்சிப்போர் போஸ்டர், பனர்களினூடாக தேர்தல் சட்டவிதிமுறைகளை தற்போதே மீறி வரும் நிலையில், தேர்தலுக்கு முன்பே சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிப்பது மிகவும் அவசியமாக உள்ளது.

முன்னைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சியின் போது தேர்தல் சட்ட விதிமுறை பலவாறு மீறப்பட்டு வந்துள்ளது. ஆகவே அடுத்த தேர்தல் நாட்டில் நீதியான முறையில் நடத்தப்பட வேண்டும்.

இதன்பிரகாரமே அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவதில் சிவில் அமைப்பு பெருமளவில் முயற்சி எடுத்தது. இந்நிலையில் 19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்காமல் இருப்பதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆகவே தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் சுயாதீன அரச சேவை, பொலிஸ் மற்றும் தேர்தல் ஆணைக் குழுக்களை உடனடியாக நியமிக்க வேண்டும் என கபே அமைப்பு மேலும் கோரியுள்ளது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## பக்திப் பண்ணையில் வீர விவசாயம்

தன்னம்பிக்கை ஊட்டும் புத்தகங்கள் தமிழில் அவ்வளவாக இல்லையே என்று சிலர் அலுத்துக் கொள்கிறார்கள். ஆங்கிலத்தில் உள்ள "how to lead a successful life" போன்ற புத்தகங்களைப் படிப்பதைப் பெருமையாகக் கூட நினைக்கிறார்கள்.என்னைப் பொருத்தவரை தன்னம்பிக்கை இறக்குமதி செய்யப்படுவது மகா கேவலம். அது இந்த மண்ணில் விளைய வேண்டும். நமது மனதில் பயிராக வேண்டும். இந்த வீர வேளாண்மைக்கான வித்து சமயப்பண்ணையில் கிடைக்கிறது.

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கருத்தில், வாழ முடியும் என்ற நம்பிக்கை தொனிக்க "நல்லவண்ணம் வாழலாம்" - என்று முழங்கிய திருஞான சம்பந்தர் ஆங்கிலேயரா? சூரியன் அடிக்கடி தன்னைப் புதுபித்துக் கொள்வது போல், சூரியோதயம்தோறும் வாழ்வைப் புதுப்பித்துக் கொள்ளச் சொன்னாரே பாரதி, இன்று புதிதாய் பிறந்தோம் என்றாரே ... அவர் என்ன மேலை நாட்டுச் சிந்தனையாளரா?

இந்த மண்ணில் இலக்கியங்களில் , இதிகாசங்களில் பக்தி வடிவான பாட்டுப் பண்ணைகளில் நம்பிக்கை நாற்று நிறையவே இருக்கிறது. கடவுளுக்கு நம்பர் என்று ஒரு பெயர் . என்ன பொருள்? நம்மவர், நம்பிக்கைக்குரியவர் என்று பொருள்.

கடவுள் நம்பிக்கை என்பது தன்னம்பிக்கையின் எதிரி என்பது பகுத்தறிவு வாதிகளின் கணிப்பு. சுயமுன்னேற்றத்தின் தடையே கடவுள் நம்பிக்கை என்பது நாத்திகர்கள் தீர்மானம். இதை நான் நிராகரிக்கிறேன்.

தன்னம்பிக்கை தண்ணீர் என்றால், கடவுள் நம்பிக்கை பனிக்கட்டி. தன்னம்பிக்கை தடம் புரண்டால் ஆணவமாகி அழிவு தரும். ஆணவமற்ற தன்னம்பிக்கையே கடவுள் நம்பிக்கை என்பது சமய ஞானிகளின் அனுபவம். என்னால் முடியாது என்று சோர்ந்து விழுந்த பார்த்தனை பகவான் எழுப்புகிறார். இது பகவத் கீதை. பரந்தாமன் மீது வைத்த நம்பிக்கை பார்த்தனுக்குத் தன்னம்பிக்கை ஆனது. பாரதப் போரில் வெற்றி தந்தது.

"என்னால் எதுவும் முடியாது" - இது கோழைத்தனம். "என்னால் எல்லாமே முடியும்" - இது அகங்காரமான முட்டாள் தனம். "எது என்னால் முடிய வேண்டுமோ, அதனை முடிக்க என்னால் முடியும், கடவுள் கருணை இருந்தால்" - என்பதே சரியான வாழ்க்கைப் பாதை. அது ஒரு கதலிவனம். வாழைக்காடு. உரோமங்கள் அடர்ந்த முதிய குரங்கு ஒன்று முனுமுனுத்தபடி அடக்க ஒடுக்கமாய் எதிலோ நிலைத்திருக்கிறது. சலனமே வடிவாய் இருப்பது குரங்கின் இயற்கை. அதனாலேயே அலைபாயும் மனத்தை குரங்கு மனம் என்றனர். ஆனால் இந்தக் குரங்கு அதிசயக் குரங்கு. சலனமற்ற தியானத்தில் நிலைத்திருக்கிறது.

மனைவிக்குப் பூப்பறிக்க அந்த வனத்தின் வழியே வருகிறான் ஒரு முரட்டு மனிதன். அவன் வலிமையின் வார்ப்பு, மாமிச இரும்பு. உயரமான உருவம். மனத்தில் மட்டும் மென்மை. அவன் ஒரு மானுடப் பலா. இந்த உள்ளம் மென்மை இல்லை என்றால் பெண்டாட்டிக்குப் பூப்பறிக்க இத்தனை சிரமங்கள் எடுத்துக்கொள்வானா?

அவனது வழியில் ஏதோ கிடக்கிறது. மிதிக்காமல் போகச் சொன்னது அவனது மிருதுவான இதயம். தாண்ட முடியாதபடி பண்பாடு தடுக்கிறது. என்ன அது? ஓ அந்தக் கிழக் குரங்கின் நீள்வால்! இவர்கள் வேறு யாரும் இல்லை. அனுமனும், பீமனும். அனுமனுக்குப் பீமனைத்தெரியும். பீமனுக்கோ இவர்தான் அனுமார் என்று தெரியாது. குரலை உயர்த்தி பீமன் கர்ஜித்தான். "ஏ கிழக் குரங்கே, வாலைச் சுருட்டு! இப்படியா வழியில் வாலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பார்கள்?" குரங்கு நகரவில்லை. மீண்டும் உறுமினான்:

"கிழட்டுக் குரங்கே .... வாலைச் சுருட்டவில்லை என்றால் ஒரே அடி ...ஆமாம் ... சொர்க்கம் போய் விடுவாய்!" அனுமன் தன் சுருங்கிய விழிகளை மெல்லத் திறந்து பார்த்தார். "தம்பி நானே சொர்க்கம் போக மாட்டாமல் அலுத்துக் கொண்டுதான் இங்கு இருக்கிறேன். ஏதோ உன் புண்ணியத்தில் அனுப்பி வையேன் போகிறேன்" என்றார்.

"வாயைப்பார் வாயை. அனுமார் கடல்தாண்டியதில் இருந்து எல்லாக் குரங்குக்கும் தானே அனுமார் என்று நினைப்பு. வழியை விடு. வாலை எடு. கிழக் குரங்கே!" "தம்பி, என்னைக் கிழம் கிழம் என்கிறாயே.... நாளைக்கு உனக்கு முதுமை வராதா? கொஞ்சம் மரியாதையாகப் பேசு"

"ஆனாலும் இந்தத் திமிர் உனக்கு ஆகாது. கிழக் குரங்கே வாலை நகர்த்து!"

"அப்பா, கிழம் என்பதால் தான் என் வாலை என்னால் நகர்த்த முடியவில்லை. முதுமை வந்தால் உறுப்புகள் செயல் இழந்து போகும். இந்த வாலை நீயே கொஞ்சம் நகர்த்தி விட்டுப் போயேன்"

தன்னால் எல்லாம் முடியும் என்றிருந்த பீமன் அலட்சியமாக விரல்களால் வாலை அசைத்தான். முடியவில்லை! இடது கையால் நகர்த்தினான், நடக்கவில்லை! இரண்டு கைகளாலும் நகர்த்தினான், இம்மிகூட வால் அசையவில்லை! அனுமனோ "ராம" "ராம" என்று ஜபித்தபடி அசையாது இருந்தார்.

பீமனுக்கு வியர்த்துக் கொட்டியது. தோல்வியின் தாக்கம் மனத்தை வாட்டியது. பலம் கொண்ட மட்டும் முயற்சி செய்தும் பலன் மட்டும் பூஜ்யம். தன்னால் முடியாது என்று ஆனதும், "கண்ணா, என்னைக் கை விடலாமா?" என்று மனத்தாலேயே வேண்டினான்.

கண்ணன் கருணையில், எதிரில் இருந்த குரங்கின் சுய வடிவம் பீமனுக்குத் தெரிந்தது. நித்ய பிரம்மச்சாரியாய், நவவியாகரணப் பண்டிதனாய் ஸ்ரீராம பக்தனாய் விளங்கிய அனுமனைக் கண்டதும் "அண்ணா" எனக் கதறிக் கொண்டு அவர் காலில் விழுந்தான் பீமன். ஆனந்தக் கண்ணீருடன் அவனை வாரி அணைத்தார் அனுமன். "தம்பி, நாம் இருவரும் சமமான பலசாலிகள். ஆனால் நீ உன்னை மட்டும் நம்பினாய். நான் ராமனை நம்பினேன். எல்லையற்ற அவன் துணையிருந்தால் எதையுமே ஜெயிக்க முடியுமப்பா!" அழுது தொழுதான் பீமன். "அண்ணா, என் ஆணவம் அகன்றது. பாரதப் போரில் அர்ச்சுனன் தேரில் கொடியாய் இருந்து தாங்கள் கூத்தாட வேண்டும். எங்கள் பலத்தோடு உங்கள் ஆசியும் இருந்தால் வெற்றி நிச்சயம்".

"அப்படியே" என்றார் அனுமார்.

இராமாயணக் கதையில் அபரிமிதமான பலசாலி அனுமன். மகாபாரதக் கதையில் அபரிமிதமான பலசாலி பீமன். இருவருமே வாயு பகவான் பிள்ளைகள். அதனால்தான் அண்ணன், தம்பி உறவு வந்தது. அது ஏன் இந்த இருவர் மட்டும் இத்தனை பலசாலிகள்? காரணம் உண்டு. ஐம்பூதங்களில் காற்று பலமானது. காற்றைக் கட்டியவர்கள் பலசாலிகள். அனுமனும் பீமனும் காற்றின் மைந்தர்கள். அதாவது காற்றைக் கட்டியவர்கள்.

பிராணாயாமம் அல்லது ஏதேனும் ஒரு ஒழுங்கான மூச்சுப் பயிற்சி செய்கிறவர்கள் திடசாலிகள். யோகிகள் காற்றைக் கட்டினால் மனத்தைக் கட்டலாம் என்பது யோகாசாரம். கோபம், தாபம், பசி இவை வரும்போது மூச்சுக் காற்றைக் கவனியுங்கள். அது தாறுமாறாகப் போய்க் கொண்டிருக்கும்! உணர்ச்சி வசப்பட்டால் காற்று அலைபாயும். மாறாகக் காற்றை நேராக்கினால் உணர்ச்சி நேராகி, மனம் நேராகி வலிமை பெறும். இது மன வலிமைக்கான வழி.

காற்றின் வலிமை பற்றி சந்தேகம் வேண்டாம். மூட்டை தூக்கும் தோழரைப் பாருங்கள், மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு 100 கிலோ அரிசியை அப்படியே தூக்குவார். கீழே போட்டதும் பெரிய மூச்சு விடுவார். அவரா மூட்டையைத் தூக்கினார்? அவரது அடக்கி வைத்த காற்றுக்கு அவ்வளவு பலம்!

லொறியில் இரும்பு டொன் டொன்னாகப் போகிறது. எது தாங்குகிறது? லொறியா? டயரா? டியூப்பா? டியூப்பில் இருக்கும் காற்றுத்தான் இத்தனை எடையையும் தாங்குகிறது! காற்றை அடக்கினால் உடல் வலிமை, மன வலிமை. ஏதேனும் பிராணப் பயிற்சி அவசியம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல் கிரிக்கெட் "கிங்" சர்ச்சையில் சுஸ்மா?

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜுக்கு எதிராக புதிய புயல் ஒன்று இந்திய அரசியலில் மையம் கொண்டிருக்கிறது.

ஐ.பி.எல். முன்னால் தலைவர் லலித் மோடி உதவியதாக எழுந்துள்ள இந்தக் குற்றச்சாட்டு எதிர்கட்சிகளுக்கு தீனி போடும் சமாச்சாரமாகிவிட்டது.

அது மட்டுமின்றி நீண்ட காலமாக பா.ஜ.கவுக்குள் நடைபெறும் பனிப்போருக்கும் உரம் போட்டது போல் அமைந்திருக்கிறது.

லலித் மோடி விவகாரம் பா.ஜ.கவுக்குள் பெரும் பிரளயத்தை ஏற்படுத்தும் சக்தி மிக்கது என்பதுதான் அரசியல் வட்டாரத்தில் அடிபடும் பேச்சு.

ஏனென்றால், வெளிவிவகார அமைச்சராக இருக்கும் சுஸ்மா சுவராஜ், பா.ஜ.க.வின் அசைக்க முடியாத தூண்களில் ஒருவராகவே திகழ்கிறார்.

'சோனியா வெளிநாட்டவர்' என்ற பிரசாரத்தை கையிலெடுத்து சோனியாவுக்கு எதிராக மொட்டை போட்டவர் சுஸ்மா சுவராஜ்.

அதே போல் நாடாளுமன்ற ஜனநாயகத்தில் பழுத்த அனுபவம் பெற்றவர். அது மட்டுமின்றி பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். இயக்கம் இரண்டின் ஆதரவையும் ஒருங்கே பெற்றவர்.

அதனால்தான் சுஸ்மா சுவராஜ் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு இன்றைக்கு பிரதமராகியிருக்கும் நரேந்திரமோடிக்கு போட்டியாளராக பா.ஜ.கவுக்குள் முன்னிறுத்தப்பட்டவர்.

அத்வானியின் தீவிர ஆதரவாளர். ஆனாலும் தேர்தல் நெருங்க, நெருங்க நரேந்திரமோடியை ஏற்றுக் கொண்ட சுஸ்மா சுவராஜ், அவரது அமைச்சரவையில் வெளியுறவுத்துறை அமைச்சராகவே பதவியேற்றார். அவர் அமைச்சரானதில் இருந்தே அவருக்கும், பிரதமருக்கும் பனிப்போர் என்பது போன்ற செய்திகள் அடிபடத் தொடங்கின.

பிரதமர் அலுவலகமே வெளியுறவுத் துறை விவகாரங்களை நேரடியாகக் கவனிக்கிறது என்றும், வெளியுறவுச் செயலாளராக ஜெய்சங்கரை நியமித்ததில் சுஸ்மா சுவராஜுக்கு முக்கிய பங்கு எதுவும் இல்லை என்றெல்லாம்கூட பத்திரிகை செய்திகள் ரக்கை கட்டி பறந்தன.

அவற்றையெல்லாம் ஓரங்கட்டி வைத்துவிட்டு பிரதமர் நரேந்திர மோடியை ஏற்றுக் கொண்டு சுஸ்மா சுவராஜ் வெளியுறவுத் துறை அமைச்சராக செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

ஒரேயொரு முறை பிரதமருக்கு நெருக்கடி கொடுக்கும் விதத்தில் பேசினார் சுஸ்மா.

பிரதமர் ஒருபுறம் 'வளர்ச்சியே என் இலக்கு' என்று பிரசாரம் மேற்கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்க, இன்னொரு புறம் 'கீதையை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும்' என்றும் 'அந்த நூலை என்றைக்கு அமெரிக்க அதிபர் ஒபாமாவிடம் பிரதமர் நரேந்திரமோடி அளித்தாரோ, அன்றைக்கே அதற்கு தேசிய நூல் அந்தஸ்து வந்துவிட்டது' என்றும் 20 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் பரபரப்பாகப் பேசினார் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ்.

அதற்கு அனைத்து எதிர்கட்சிகளும் விமர்சனங்களை முன்வைத்தன. பா.ஜ.க. அரசின் இந்துத்துவா அரசியலை இது எடுத்துக் காட்டுகிறது என்றெல்லாம் காரசாரமாகப் பேசின.

ஆனாலும் பிரதமரின் வெளிநாட்டுப் பயணங்களின் வெற்றிக்கு சுஸ்மா சுவராஜ் முக்கியப் பங்கு வகித்தார். அதனால் தேசிய ஜனநாயக கூட்டணி அரசில் சுஸ்மாவின் பயணம் 'மலர்ப்பாதையிலேயே' சென்று கொண்டிருந்தது.

இதுபோன்றதொரு காலகட்டத்தில்தான் இப்போது மீண்டும் வெளியுறவுத்துறை அமைச்சருக்கு 'முள்பாதை' வந்திருக்கிறது. அது லலித் மோடியின் உருவில் வந்திருக்கிறது.

போர்த்துக்கலில் சிகிச்சை பெற்று வரும் புற்று நோயால் பாதிக்கப்பட்ட தனது மனைவியைப் பார்க்கச் செல்லுவதற்கு பயண ஆவணங்களை பெற இங்கிலாந்து அரசுக்கு பரிந்துரை செய்யும்படி லலித் மோடியின் சார்பில் கோரிக்கை வைக்க, அந்த பரிந்துரையைச் செய்த வெளியுறவுத்துத் துறை அமைச்சர் சுஸ்மா இன்றைக்கு வம்பில் மாட்டிக் கொண்டிருக்கிறார்.

பா.ஜ.க.வின் தலைவர் அமித்ஷா, 'இது மனிதாபிமான நோக்கத்தில் செய்யப்பட்ட உதவி' என்று கூறியிருக்கிறார்.

ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் தலைவர் இந்த்ரேஷ் குமாரோ, 'தேசியப்பற்றுடன் கூடிய மனிதநேய உதவி' என்று கூறியிருக்கிறார்.

சமீபகாலங்களில்பா.ஜ.க.வும், ஆர்.எஸ்.எஸ. இயக்கமும் சேர்ந்து ஒரு மத்திய அமைச்சரை ஆதரித்துள்ளது என்றால் அது சுஸ்மா சுவராஜைத்தான்.

இந்த ஆதரவுதான் அவருக்கு உட்கட்சிக்குள் பெரும் பகையை உருவாக்கி வைத்திருக்கிறது என்றால் மிகையாகாது.

வெளியுறவுத்துறை அமைச்சருக்கு இவ்வளவு தீவிரமாக ஆதரவு கொடுத்தாலும், பா.ஜ.க. இதுவரை பேசி வந்த, பிரசாரம் செய்து வந்த விடயங்களுக்கு சுஸ்மாவின் நடவடிக்கை விரோதமாக இருக்கிறது என்பதுதான் எதிர்கட்சிகளின் குற்றச்சாட்டு.

லலித் மோடியைப் பொறுத்தமட்டில் பல்வேறு விவகாரங்களில் விசாரணை வளையத்திற்குள் சிக்கியிருப்பவர். குறிப்பாக 'ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள் தொடர்பான' அமலாக்கத்துறையின் விசாரணையில் இருக்கிறார்.

காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் ஒருவரோ, '700 கோடி ரூபாய் கறுப்புப்பண விசாரணை வேறு லலித் மோடி மீது இருக்கிறது' என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்.

'முறைகேட்டுப் புகார், ஊழல் விசாரணை போன்றவற்றில் சிக்கியிருப்பவர்களுக்கு அமைச்சர்கள் உதவக் கூடாது' என்பதும், 'வெளிநாட்டில் உள்ள கறுப்புப் பணத்தை மீட்டு இந்தியாவில் ஒவ்வொருவருக்கும் 15 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும்' என்பதும் பா.ஜ.க.வின் முக்கிய தேர்தல் பிரசாரம்.

அதனால்தான் இன்றைக்கு பா.ஜ.க. முன்பு எதிர்கட்சி வரிசையில் இருந்த போது அறிவித்ததைக் காற்றில் பறக்க விட்டுவிட்டது என்று குற்றம் சாட்டுகின்றன.

லலித் மோடிக்கு உதவி செய்த வெளியுறவுத்துறை அமைச்சர் பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறது காங்கிரஸ் கட்சி. முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாடிக் கட்சி தவிர மற்ற கட்சிகள் எல்லாமே இந்தக் கோரிக்கையை முன் வைத்து இந்திய அரசியலில் சூடு ஏற்படுத்தி வருகின்றன.

இப்படி வம்பில் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாட்டிக்கொள்வது புதிதல்ல. மன்மோகன்சிங் பிரதமராக இருந்தபோது நான்கு வெளியுறவுத்துறை அமைச்சர்கள் தர்மசங்கடத்துக்கு ஆளானார்கள்.

முதலில் பால் வோல்க்கர் அறிக்கையின் விளைவாக (ஈராக் நாட்டின் உணவுக்குப் பதில் ஆயில் ஊழல் புகார்) அப்போது வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த நட்வர் சிங் ராஜினாமா செய்தார்.

பின்னர், வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த எஸ்.எம்.கிருஷ்ணா, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தில் பங்கேற்றார்.

அங்கு பேச எழுந்தபோது தன் உரைக்குப் பதில் போர்த் துக்கல் நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் உரையை எடுத் துப் பேசியதன் விளைவாக வம்பில் சிக்கிக் கொண்டார்.



தனது, வெளியுறவுத்துறை அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். பிறகு அவருக்குப் பதில் வெளியுறவுத்துறை அமைச்சராக சல்மான் குர்ஷித் நியமிக்கப்பட்டார்.

அவர் சட்ட அமைச்சராக இருந்த போது அவர் நிர்வகிக்கும் டிரஸ்ட் மீதும் அப்போது ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் பகிரங்கக் குற்றச்சாட்டுகளை சுமத்தினார். அதன் விளைவாக அடுத்து நடை பெற்ற அமைச் சரவை மாற்றத்தில் சல்மான் குர்ஷித் சட்ட அமைச்சர் பதவியிலிருந்து வெளியுற வுத்துறை அமைச்சர் பதவிக்கு அமர்த்தப்பட்டார்.

கொச்சி ஐ.பி.எல். கிரிக்கெட் டீமுடன வெளியுறத்துறை இணை அமைச்சராக இருந்த சசி தரூருக்கு தொடர்பு இருக்கிறது என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

இன்றைய பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பா.ஜ.க.வின் முன்னணித் தலைவர்கள் அனைவருமே இதைப பெரும் பிரச்சினையாக மாற்றியதன் விளைவாக, வெளி யுறவுத்துறை இணை அமைச்சர் பதவியிலிருந்து அவர் ராஜினாமா செய்தார்.

இதுபோன்ற சூழலில்தான் இப்போது வெளியுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் மீதான புகார் வெளிவந்திருக்கிறது. பா.ஜ.க. தலைமையிலான அரசு முழுவீச்சில் வெளியுறவுத்துறை அமைச்சரின் பின்னால் நின்றாலும், இந்தப் பிரச்சினையை இத்தோடு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள் விட்டுவிடுமா என்பது கேள்விக்குறியே. பா.ஜ.க. அரசு பதவியேற்ற பின்னர் மூன்று முக்கிய அமைச்சர்கள்மீது இது போன்ற சர்ச்சைகள் கிளம்பியுள்ளன.

முதலில் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கையும் அவரது மகனையும் சம்பந்தப்படுத்தி ஒரு புகார் கிளப்பப்பட்டு, அதற்கு பிரதமர் அலுவலகத்திலிருந்தே மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்து மஹாராஷ்டிராவில் விவசாயத் துறை சார்பாக இந்திய கணக்காயம் சில முறைகேடுகள் பற்றி அறிக்கை சமர்ப்பித்து, அதனைத் தொடர்ந்து கப்பல்துறை அமைச்சராக இருக்கும் நிதின்கட்கரி ராஜினாமா செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. 'முதலில் என் பெயர் அறிக்கையில் இல்லை. பிறகு சேர்க்கப்பட்டது எனக்கு எதிரான சதி' என்று வெளிப்படையாகவே நிதின் கட்கரி குற்றம் சாட்டி பேட்டியளித்தார்.

இப்போது 'லலித் மோடி' விவகாரத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் மீது குற்றம் சாட்டப்பட்டு, 'அவர் இராஜினாமா செய்ய வேண்டும்' என்று குரல் எழுப்பப்படுகிறது. இந்த மூவருமே பா.ஜ.க.வின் உள்கட்சி அரசியலில் மிகவும் முக்கியமானவர்கள். அக்கட்சிக்குள் எந்த ஒரு குழப்பம் ஏற்பட்டாலும், அதை சமாளிக்கக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள் என்ற பெயர் இருக்கிறது.

கட்சியில் செல்வாக்கு உள்ளவர்கள் மீது அடுத்தடுத்து ஏன் இப்படி புகார்கள் பவனி வருகின்றன என்பதுதான் பா.ஜ.க.வுக்குள் உள்ள தலைவர்கள் பலர் மனதில் தோன்றியுள்ள சந்தேகம். அது பா.ஜ.க.வை வழி நடத்தும் ஆர்.எஸ்.எஸ. போன்ற இயக்கத்துக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பது அந்த இயக்கத்தின் மூத்த தலைவர் ஒருவர் சுஸ்மா சுவராஜை தீவிரமாக ஆதரிப்பதிலிருந்து எதிரொலிக்கிறது.

ஆனால், தேர்தல் பிரசாரத்தில் சொன்னதற்கு இன்று மக்கள் மத்தியில் பொறுப்பாகி நிற்பவர் பாரதப் பிரதமர்தான். இந்த சூழ்நிலையில், 'கிரிக்கெட் கிங்' லலித் மோடிக்கு உதவி கையைச் சுட்டுக் கொண் டிருக்கும் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஸ்மாக சுவராஜ் காப்பாற்றப்படுவாரா என்பது பா.ஜ.க.வின் உள்கட்சி அரசியிலிலும், ஆர்.எஸ்.எஸ். இயக்கத்திலும் பிரதமர் நரேந்திரமோடிக்கு இருக்கும் செல்வா க்கைப் பொறுத்தே இருக்கிறது. ஆனால், 'லலித் மோடிக்கு சுஸ்மா அளித்த ஆதரவு' அரசியலில் நேர்மை என்ற பா.ஜ.க.வின் பிரசாரப் பயணத்தில் அமைந்த 'சோதனைச் சாவடி' போலவே மாறி யிருக்கிறது என்பதுதான் பா.ஜ.க.வில் உள்ள மூத்த தலைவர்களின் எண்ண வோட்டமாக இருக்கிறது.

எம்.காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மாணவி கொலை நடந்தது என்ன?



மாணவி வித்தியா


மாணவி வித்தியாவின் தாய் மற்றும் சகோதரன் ஆகியோருடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துரையாடியதுடன் மாணவியை இழந்த குடும்பத்திற்கு தேவையான உதவிகளை அரசு வழங்கும் என்ற உத்தரவாதத்தையும் ஜனாதிபதி வழங்கினார்.

வித்தியாவின் குடும்பத்திற்கான உதவித் திட்டங்களில் ஒன்றாக வவுனியாவில் வீடொன்றை வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரி உத்தரவிட்டார்.

மாணவி வித்தியாவின் மூத்த சகோதரி வவுனியா வளாகத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்வதன் காரணமாகவும் புங்குடுதீவில் தொடர்ந்தும் வித்தியாவின் குடும்பம் வசிப்பது அவ்வளவு பாதுகாப்பானதல்ல என்ற அடிப்படையிலும் வவுனியாவில் வீடு வழங்குவது பொருத்துடையதாகும்.

யுத்தம் நடந்த காலங்களில் படையினரின் துப்பாக்கிச்சூட்டில்; விமானப் படையின் தாக்குதலில்; ஆட்லறி ஷெல் வீச்சில் உயிரிழந்த தமிழ் மக்களுக்கான இழப் பீட்டுத் தொகைகள் எதுவும் கிடைக்காத நிலையில், விடுதலைப்புலிகளின் தாக்குதலில் உயிரிழந்த சிங்கள குடும்பங்களுக்கு இழப்பீட்டுத்தொகைகள் வழங்கப்பட்டதுடன், உடன் செலவையும் அன்றைய அரசுகள் பொறுப்பேற்றுக் கொண்டன.

ஆனால் ஈழத்துத் தமிழ் மாணவி ஒருவர் படுகொலை செய்யப்பட்ட போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரில் வந்து ஆறுதல் தெரிவித்ததுடன் வித்தியாவின் குடும்பத்திற்கு வீடு வழங்குவதற்கும் உத்தரவிட்டார் எனில் ஜனாதிபதி மைத்திரியின் உத்தம குணம் இங்கு போற்றுதற்குரியது.




மாணவி வித்தியாவின் தாய் மற்றும் சகோதரனைச் சந்தித்து ஆறுதல் தெரிவித்த ஜனாதிபதி அடுத்த கட்டமாக யாழ்.மாவட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட பாடசாலை மாணவிகளு டனான சந்திப்பொன்றை யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடத்தினார்.

வித்தியாவின் படுகொலை மாணவிகளிடையே அதிர்ச்சியை ஏற்ப டுத்தியிருக்கும். இதனால் அவர்களிடம் இனம்புரியாத அச்சநிலை உருவாக வாய்ப்பு உண்டு.

எனவே வித்தியாவின் குடும்பத்திற்கு அடுத்தபடியாக புங்குடுதீவு மகா வித்தியாலயம் உள்ளிட்ட யாழ்ப்பாணத்துப் பாடசாலைகளில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவிகளைச் சந்தித்து அவர்களை ஆற்றுப்படுத்துவது அவசியம் என்ற ஜனாதிபதி மைத்திரியின் சிந்தனை மிகவும் உயர்வானது.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் சந்திப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவிகள் பஸ் மூலம் யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

ஏனைய பாடசாலை மாணவியரும் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு வந்தாயிற்று.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகவும் எளிமையாக யாழ்ப்பாணம் வேம்படிப் பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு வருகிறார்.

மிகச் சாதாரணமாக- மேடை அலங்காரங்கள், சிம்மாசன ஏற்பாடுகள் எதுவுமின்றி ஒரு ஆசிரியர் எங்களம் வகுப்பறையில் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுவாரோ அதுபோல இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, யாழ். மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவிகளைச் சந்தித்து மாணவி வித்தியாவின் படுகொலையால் தாம் அடைந்துள்ள வேதனையைப் பகிர்ந்து கொண்டார்.

இனிமேல் இதுபோன்ற வன்கொடுமைகள் இடம் பெறாமல் பாதுகாக்கப்படும் என்ற உத்தரவாதத்தையும் வழங்கினார்.

ஒரு தந்தை தன் பிள்ளைகளுக்கு எப்படி ஆலோசனை கூறுவாரோ அதுபோல ஜனாதிபதி மைத்திரி நடந்து கொண்டமை அவர் மீதான நம்பிக்கையை மேலும் அதிகரித்துக்கொண்டது.

மாணவிகள் மத்தியில் ஜனாதிபதி உரையாற்றிய அமைப்பைப் பார்க்கும் போது எங்கள் காலத்து ஆசிரியர்களின் நினைப்பே மனத்திடை எழுந்தது.

ஆம் அந்தக்காலத்து உபாத்தியார் பரமாஸ் வேட்டியும் நஷனலும் உத்தரிய மடிப்புச் சால்வையும் அறிந்த அந்தத் தோற்றம் ஆசிரியத்துவத்தின் அடையாளம். அதை நாம் இழந்து பலகாலம் ஆயிற்று. அந்த ஆசிரியத்துவத்திற்குரிய தோற்றத்தில் கற்பித்தல் இடம்பெற்ற காலத்தில் ஆசிரியர்கள் மீது மாணவர்கள் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர்.

மாணவர்கள் மட்டுமல்ல அந்த ஊர் சமூகம் என எல்லோருமே ஆசிரியர்களுக்கு முதல் மரியாதை கொடுத்தனர்.

என்ன செய்வது இன்று ஆசிரியத்துவத்திற்குரிய அடையாளம் தொலைந்து போயிற்று.

என்றைக்கு ஆசிரியர்களுக்குரிய பண்பாட்டுக்கோலவுடையத் தொலைத்தோமோ அன்று முதல் ஆசிரியத்துவத்திற்குரிய பெருமதிப்பையும் தொலை த்துவிட்டோம் என்ற உண்மையையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்துடையதாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய உடையோடு நின்று மாணவிகளுக்கு ஆறுதலும் அறிவுரையும் கூறியது கண்டு மனம் நெகிழ்ந்து கொண்டது. முந்தி இருந்தவர் எங்களைக் கொன்று இறுமாப்போடு இங்கு வந்தார்.

அவர் வரும்போது- பாடசாலைகளுக்கு விஜயம் செய்யும் போது எத்தனை சோடனைகள், எத்தனை அலங்காரங்கள், எத்தனை ஆலாவர்ணங்கள், நடனங்கள், புராண படனங்கள்... அப்பாடா எங்களை வதைத்து எங்களைக்கொண்டே தனக்குத் திருவிழாவைச் செய்தவர் அவர்.

இவரோ எங்கள் துன்பத்தில் எங்களைத் தேடி வந்து எங்களுக்கும் எங்கள் பிள்ளைகளுக்கும் ஆறுதல் கூறுகிறார். எந்தப் பகட்டும் இல்லை. படோபகாரமும் இல்லை. மிகவும் எளிமை. இதுவே எங்கள் மாணவர்களுக்கான முன்னுதாரணம் .

மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரி யாழ்ப்பாணம் வந்து வித்தியாவின் குடும்பத்திற்கு, பாடசாலை மாணவிகளுக்கு ஆறுதல் கூறியமை ஒட்டு மொத்த தமிழர்களுக்கும் ஆறுதல் கூறியதாக அமைந்தது என்றால் அதில் மிகைப்படுத்தல் ஏதுமில்லை எனலாம். (தொடரும்)



புருசோத்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் இடத்தில் இருந்துகொண்டே ஐ.தே.கட்சி தேர்தலைக் கோருகின்றது

## மனுஷ நாணயக்கார கூறுகிறார்

விடுதலைப் புலிகளின் இடத்தில் இருந்துகொண்டே ஐக்கிய தேசியக் கட்சி, முன்கூட்டிய நாடாளுமன்ற தேர்தலை கோருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

உடனடியாக நாடாளுமன்றத்தை கலைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி விடுத்த கோரிக்கை தொடர்பிலேயே அவர் இந்தக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான உலக தமிழர் பேரவையுடன் சந்திப்பை நடத்தியுள்ளார்.

இது இறந்துபோன விடுதலைப்புலிகளுக்கு வெளிநாடுகளில் உள்ள அனுதாபிகளின் நிதிகளை பெற்றுக்கொடுத்து உயிர்ப்பிக்கும் நடவடிக்கையாகும் என்று நாணயக்கார சுட்டிட்காட்டியுள்ளார்.

புதிய அரசாங்கத்தின் காலத்தில் நாட்டில் பொருட்களின் . விலையுயர்வு, மற்றும் ஊழல்கள் என்பன வெளிப்படும் முன்னரே நாடாளுமன்ற தேர்தலை நடத்தி விட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் எண்ணமாகும் என்றும் மனுஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)




# 20 ஐ சிறுபான்மைக் கட்சிகள் சீர்குலைப்பதாக பொய்ப்பிரசாரம்

## மனோ சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**தேர்தல் மறுசீரமைப்பை உள்ளடக்கிய 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை சீர்குலைப்பதற்கு சிறுபான்மைக் கட்சிகள் முயற்சிப்பதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அபத்தமானவை என்பதுடன் மக்களை தவறாக வழிநடத்தும் செயற்பாடு என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

இரட்டைவாக்குச்சீட்டு முறையை தொடர்ந்தும் வலியுறுத்துவதற்கு சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும், இது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை மேலும் பலப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறுபான்மைக் கட்சிகள் 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை சீர்குலைப்பதற்கு முயற்சிக்கின்றன என்ற குற்றச்சாட்டுக்களை மறுத்திருக்கும் மனோ கணேசன், சகல தொகுதிகளுக்கும் எம்.பி.க்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் மறுசீரமைப்புக்கு சிறுபான்மைக் கட்சிகள் முழு ஆதரவு வழங்கும் என்றும் கூறினார். இரட்டை வாக்குச்சீட்டு முறை அறிமுகப்படுத் தப்படவேண்டும் என்ற யோசனைக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றே நாம் கேட்கின்றோம்.

இதன்மூலம் ஒரு வாக்காளர் தனக்கு விருப்பமான வேட்பாளரையும், விருப்பமான கட்சியையும் தெரிவுசெய்ய முடியும். வேட்பாளருக்கு அளிக்கப்படும் வாக்கு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கும், கட்சிக்கு அளிக்கப்படும் வாக்கு தேசிய ரீதியில் கட்சி சார்பில் ஒருவரைத் தெரிவுசெய்வதற்கும் பயன்படுத்த முடியும்.

இதன்மூலம் வாக்காளர்கள் நிம்மதியாகத் தமக்கு விரும்பிய ஒரு வேட்பாளரைத் தெரிவுசெய்ய முடியும். இந்த நடைமுறையானது தேர்தல் முறைக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில் அமையும். அது மாத்திரமன்றி ஜனாதிபதியின் தேர்தல் மறுசீரமைப்புக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையிலும் இது அமையும் என மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் ஜனநாயகத்துக்கு சிறிய கட்சிகள் மிகவும் அவசியமானவை. எனவேதான் உத்தேச 20ஆவது அரசியல்மைப்புத் திருத்தத்தில் இரட்டை வாக்குச்சீட்டு முறையை உள்ளடக்குமாறு கோருகின்றோம். இரட்டை வாக்குச்சீட்டு முறை இல்லாத 20ஆவது திருத்தச் சட்ட மூலத்துக்கு ஆதரவளிக்காதிருக்க நாம் தீர்மானித்துள்ளோம்.

இரட்டை வாக்குச்சீட்டு முறைமையைக் கோருவது சிறுபான்மைக் கட்சிகள் என்ற கருத்து பிழையானது.

தேசிய அரசியலில் உள்ள மாற்றுக்கட்சிகள் பலவும் இந்த யோசனையுடன் இணங்கியுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

# 5000ரூபா நாணயத்தாள் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும்

## பந்துல தெரிவிப்பு

5000 ரூபா நாணயத்தாள் தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் என முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச உத்தியோகத்தர் என்ற ரீதியில் மத்திய வங்கியின் ஆநனர் அர்ஜூன் மகேந்திரன் ஐயாயிரம் ரூபா நாணயத் தாளில் கையொப்பமிடவில்லை.

எனவே இந்த நாணயத்தாள்கள் செல்லுபடியானவையா? என்பது குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளது. நாட்டின் அரசியல் அமைப்பிற்கு அமைவாக 165ம் சரத்தின் அடிப்படையில அரசாங்க உத்தியோகத்தர்களாக அரச உத்தியோகத்தர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டும்.

தற்போதைய மத்திய வங்கியின் ஆளுநர் ஓர் சிங்கப்பூர் பிரஜை யாவார், அவர் இலங்கைப் பிரஜையாக பதவிப் பிரமாணம் செய்யவில்லை.

சிங்கப்பூரைத் தவிர்ந்த வேறு நாடுகளுக்கு பக்கச்சார்பாக செயற்படப் போவதில்லை என்றே அர்ஜூன் மகேந்திரன் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

அரச உத்தியோகத்தராக இலங்கை சட்டத்தின் அடிப்படையில் பதவிப் பிரமாணம் செய்யாத ஒருவர் எவ்வாறு இலங்கையின் நாணயத் தாளில் கையொப்பமிட முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் நீதிமன்றின் உதவியை நாடமுடியும், இந்த நாணயத் தாளைப் பயன்படுத்துவது குறித்து மக்களுக்கு மிகுந்த கவனம் தேவை என பந்து குணவர்தன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு


### சின்னப்பு நடராசா



வரணியைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டை 2ஆம் கட்டையைப் வசிப்பிடமாகவும் தற்போது வரணி இயற்றாலையில் வசித்தவருமான கொண்ட சின்னப்ப நடராசா கடந்த 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று புதன் கிழமை மு.ப10 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று குடமியன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி தவமணிதேவி அருளம்பலம்



சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தவமணி தேவி அருளம்பலம் 15ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை பி.ப 1 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

### வைத்திலிங்கம் செல்லையா

(ஓய்வுபெற்ற ஆயுள்வேத வைத்தியர்)



டச் வீதி உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலி ங்கம் செல்லையா கடந்த 12ஆம் திகதி வெள்ளி க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று புதன்கிழமை மு.ப10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### ஜோசப் நவரட்ணம் பீட்டர்



மாதகலைப் பிறப்பிடமாகவும், நோர்வேயைப் வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் நவரட்ணம் பீட்டர் 11ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் Johsnnes Church Bredtvetveien 12,0950 Oslo,Norway என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்ப்படும்.

### திருமதி மாலினி நகுலேஸ்வரன்

(முன்னாள் ஆசிரியை)



தெல்லிப்பழை கிளானை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தி கிளுவானை ஒழுங்கையை வசிப் பிடமாகவும் கொண்ட மாலினி நகுலேஸ்வரன் கட ந்த 1நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலமா னார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை வியாழக் கிழமை மு.ப10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கோப்பாய் கைதடி வீதியிலுள்ள [illegible] இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### தம்பையா ஆசைப்பிள்ளை



கொக்குவில் ரயில் வீதியைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா ஆசைப்பிள்ளை கடந்த 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறதிக்கிரியைகள் நாளை வியா ழக்கிமை நீர்கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நீர்கொழும்பு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினையில் வீற்றிருந்து அகிலமெல்லாம் அருளாட்சி செய்கின்ற அன்னை நாகபூஷணி

வரலாற்றுச் சிறப்பும் ஆன்மீகச் சிறப்பும் அழகுச் சிறப்பும் திருவருட்பொலிவும் பெற்று விளங்குவது நயினாதீவு. நீர்வளம் நிலவளம், அருள்வளம், பொருள்வளம், கல்வி வளம், அன்னதான வளம் என்பன ஒருங்கே அமையப் பெற்றதும் நயினாதீவு என்னும் இனிய திருப்பதியேயாகும். ஈழநாட்டின் வரலாற்றுப் புகழ்மிக்க வழிபாட்டுத் தலங்களுள் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயமும் ஒன்றாகும். அலைகடல் நடுவே வீற்றிருந்து அகிலமெல்லாம் அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பதியும் நயினையம் பதியாகும்.

அழகுத்திருக்கோலத்துடன் அருளாட்சி புரிகின்ற அம்பாள், அழகுக்கொரு வரும் ஒவ்வாத ஆனந்த வல்லியாக அன்பர் என்பவர்க்கு நல்லன எல்லாம் தருபவளாக அருளாட்சி நடத்துகின்றாள். மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகத் தொழுவார்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே என்ற தாயுமானவர் கூற்றிற்கமைவாக மாகவும் உருவெடுத்துத் தன்னை அடியார்களுக்கு வெளிக்காட்டிக் கனவிலும் நனவிலும் ஆடி அசைந்து அரசாட்சி செய்கின்ற பேரற்புதத்தை விபரிக்க முடியாது.


குழந்தைப் பேற்றையும் குழந்தைகளைக் காப்பாற்றும் பெருமையினையும் உடையவள் அன்னை பராசக்தி.சாந்தியும் சாந்நித்தியமும் அருளும் அனுக்கிரகமும் நிறைந்த அற்புதநாயகியாக நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் விளங்குகின்றாள்.

அடியார்கள் அம்பிகையை நெக்குருக நின்று நினைந்து வருகின்ற பக்தியே வியக்கத்தக்கதாகும். விபரிக்க முடியாது. அனலைதீவு நாகதம்பிரான் ஆலயத்தின் பக்கமாக ஆகாயத்திலே வட்டமிடும் கருடப்பறவையைக் காணும் அடியார்களது மெய்ப்பாடு உணர்வுபூர்வமானது.

மேற்படி நாகதம்பிரான் ஆலயத்திலிருந்து அம்பிகையை வழிபடுவதற்காக கடல்மார்க்கமாக வாயில் பூவுடன் வந்த நாகபாம்பொன்றினைக் கொல்ல முயன்ற கருடனை அவ்வழியே கப்பலில் வந்த வணிகன் கண்டு கொல்லவேண்டாமெ உள்வீதியில் வரலாற்று ரீதியான ஓவியங்களையும் பக்தி மயமான திருமுறைப்பாடல்களையும் அறுபத்து மூவரின் திருவுருவங் களையும் கொண்ட ஒரு தெய்வீகமான கலைக் கோயிலாக மிளிர்கின்றது நயினை நாகபூஷணி அம்பாளின் ஆலயம்.

இத்திருத்தலத்தில் இன்று (17.06.2015) புதன்கிழமை வருடாந்த உயர் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அடியார்கள் அம்பிகை மீது கொண்ட அளவற்ற கருணையினால் பெருந்திரளாக உற்சவகாலங்களில் மட்டுமல்லாது அனுதினமும் அம்பாளைத் தரிசிப்பதற்காக நயினைம்பதியில் கூடுவார்கள். (30.06.2015) செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் (01.07.2015) புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

நயினைத்தீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் பேரில் அன்பர்கள் பலர் பாமாலை பாடியுள்ளார்கள். அவ்வாறு பாடிப்பரவியுள்ள அன்பர்களில் குறிப்பிடத்தக்கவர் நயினை வரகவி நாகமணிப் புலவர் ஆவார். அவர் பாடிய தனிப்பாடல் ஒன்றை மட்டும் இங்கு தருவதால் அடியார்க



இங்குள்ள தீர்த்தம் பாவங்கள் பலவற்றையும் தீர்க்க வல்லது என்பது சைவ நன்மக்களின் அசையாத நம்பிக்கையாகும். தன்னை விரும்பித் தொழும் அடியார்களது வேண்டுதல்களை வேண்டியவாறு ஏற்று அவர்களுக்கு வேண்டியவாறு வழங்கும் அருள் உடையவள் அன்னை. அன்னையின் மணியோசை அகிலமெல்லாம் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

அம்பிகையின் மீது அளவற்ற கருணையினால் பக்தி கொண்டு அடியார்கள் பெருமளவில் நயினையம்பதியில் கூடுகின்றார்கள். அடியார்களின் கண்ணீரைக் காணிக்கையாக ஏற்று கருணை பாலிப்பவள் அன்னை. நாகபூஷணியாக நாகராணியாக எழுந்தருளியிருந்து, நாகதோஷத்தை நிவர்த்தி செய்து புத்திரபாக்கியத்தையும் கொடுத்து அருள்பாலித்துக் கொண்டு இருக்கின்றாள்.

அடியார்களின் துன்ப துயரங்களெல்லாம் சூரியனைக் கண் பனி போல மறைந்திட அருள் பாலிக்கின்றாள் அன்னை. காலாதி காலமாக முழு நம்பிக்கையோடு அம்பாளை வழிபட்டு நற்பேறு பெற்றோர் பலர். நயினை ஸ்ரீ நாகபூஷணியை வந்து தரிசியுங்கள். அம்பிகையின் அற்புதங்களை நயினையில் பாருங்கள். நயினை நாகபூஷணியே பாம்பாகவும் நாக னக் கூறியதாகவும் அதன்பின்பு வணிகன் நயினாதீவில் தன் கப்பலுடன் வந்திறங்கி அம்பாளுக்கு ஆலயம் அமைத்ததாகவும் நயினா பட்டர் என்னும் பிராமணரைப் பூசை செய்வதற்கு நியமித்தார் என்றும் சரித்திர வாயிலாக அறிய முடிகின்றது. அவரின் பெயரால் நயினார்தீவு என இத்தீவு அழைக்கப்படுவதாகவும் நாகத்தால் பூஜிக்கப் பெற்ற அம்மை என்பதால் நாகபூஷணி எனப் பெயர் பெற்றாள் என்றும் வரலாறுகள் தெரிவிக்கின்றன.

பக்தியோடு சுவடியபண்பாட்டு அம்சங்களை வலியுறுத்தும் பெருமை கொண்ட வேதாகம விதிமுறைகளை அனுஷ்டான முறைகளை கைக்கொள்ளும் நடைமுறைத்தலமாக இலங்குவதுநயினைஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயம். பூர்வீகமான பழைமை மிகு மகிமைச் சிறப்பைக் கொண்டது நாகபூஷணி அம்பாளின் மூலவிக்கிரகம்.சாந்தியும் சாந்நித்தியமும் அருளும் அனுக்கிரகமும் நிறைந்த அற்புத நாயகிநயினை நாகபூஷணி. இம் மூலமூர்த்தியின் அமைப்பும் அதிசயமும் அற்புதமும் உலகிலே வேறெந்தத் திருத்தலத்திற்கும் இல்லை என்பது பேருண்மை. 108 அடி உயர வானுயர்கோபுரம் கிழக்கு முகப்பு வாசலில் கிழக்கு, தெற்கு,வடக்கு வீதிகளில் மூன்று கோபுரங்களையும் உள்வீதி, வெளி வீதிகளில் அழகிய சிற்பங்களையும் ளுக்குப்பயனுள்ளதாக அமையும்.

“பெற்ற தாலன்னை பெறு
முயிரனைத்தும்
பேணலால்அன்னைபெற்றிடுவோர்
உற்றதாலன்னை விரும்பிய
அனைத்தும்
உதவலால் அன்னை எக்கலையும்
சொற்றதாலன்னை
உலகொடுவானும்
தொழுதலாலன்னையென்றென்றும்
பற்றதாங் கருணை
பொழிதலாலன்னை
பராபரை நாகபூஷணியாள்”

அடியார்கள் நலன் கருதி அமுதசுரபி அன்னதான சபையினரும் அமுது வழங்குவதற்கான சகல ஒழுங்குகளையும் செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தாகசாந்தி நிலையத்தினர் போக் குவரத்துச் சேவையினர், மோட்டார் படகுச் சேவையினர், சுகாதார சேவையினர், தொண்டர் சபையினர், சாரணர்கள், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையினர், செஞ் சிலுவைச் சங்கத்தினர்,மக்கள் நலன் புரிச் சங்கத்தினர் அனைவரும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்துள்ளார்கள்- எல்லோருக்கும் அம்பிகையின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**நயினை**
**நா.க.குமாரசூரியர்(J.P)**

## இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு கொடியேற்றம்



## நாகபூஷணிக்கு கொடியேற்றம்

பூக்கள் கொண்டு நாகம் பூசிக்கும்
நாயகிக்கு உற்சவமாம்...
மணி பல்லவத்தீவின்
நாயகி நாகபூஷணிக்கு உற்சவமாம்...
புவனேஸ்வரி பீடமெனும்
புண்ணிய பதியினில்
வீற்றிருக்கும் அன்னைக்கு
உற்சவமாம்...
கருவறை நாகம் வளரும் பதியாளும்
நாயகிக்கு உற்சவமாம்...
அம்மையுமாய் அகிலமுமாய்
சான்றோரும் போற்றிப் பணிந்த
நயினை நாகபூஷணி தாயவளுக்கு
உற்சவமாம்...



பண்ணாகம் பாபு

## ஆறுதலைத் தந்திடம்மா

நயினையின் குடி கொண்ட நாகபூஷணித் தாயே
புதுமைகளை என்றும் புரிந்திடும்
உன்னைப் போல ஒரு தெய்வமில்லை
சிவனின் உடலில் பாதியாய் அமர்ந்த நாயகியே
உன்புகழைப் பாடாத உள்ளங்கள்
உலகில் எங்குமில்லை
இருகரம் கூப்பியே நாம் மனமுருகி வேண்டுகின்றோம்
இன்றே விரைந்தோடி வந்திடம்மா
போரின் வடுக்களை சுமந்து நிற்கும் எமக்கு
ஆறுதலைத் தந்திடம்மா

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை

## நாகமணி தீவினிலே கொடியேறம்மா...

நாக மணித்தீவினிலே கொடியேறம்மா–உன்னை
நாடிவரும் பக்தர் குறை நீ தீரம்மா
ஆடிவரும் அரவமதில் அமர்ந்தாயம்மா
அடியவரை காக்கதினம் எழுந்தாயம்மா
கடல் கடந்து உன் பாதம் காணவந்தோம்–உன்
காலடியில் வீழ்ந்தெம்பாவம் போக்க வந்தோம்
அலைகடலின் தாயவளே நாகம்மா–எம்மேல்
அருள் மழையை பொழிவாயே நீயம்மா

கு.அயிலவன்
யா/இந்துக் கல்லூரி


## கொடியேற்றி விடிவொன்று தா தாயே

அலைகடல் நடுவினிலே வீற்றிருந்து அருள்பாலிக்கும் தாயே
அடியவர்கள் குறைகள் அனைத்தும் போக்கும் தாயே
வன்புணர்வுக் கலாசாரம், வாள்வெட்டுக் கலாசாரம் –புரியும்
வஞ்சகர்களையும் தாண்டி உன் வாசலிலே
கொடியேற்றம் காண அலைகடல் தாண்டி வந்தோம் தாயே
கொடியேற்றி விடிவொன்று தா தாயே

நயினை விசு–இராசநாயகம்

## நல்லனவாக நடக்க

தடை தாமதங்களில்லாது
தன்னம்பிக்கை முயற்சிகள் யாவும்
இடைவிடாது வாட்டும் வினைகளும்
போட்டி பொறாமைகளும் நீங்கி
நடைபெறுவனவெல்லாம்
நல்லனவாக நடக்க நாக பூஷணியே
கடைக்கண் பார்வையால் அருள்
புரிய வேண்டும் தாயே அம்மா!



இராம ஜெயபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாஸுக்கு பிணை



முன்னாள்பிரதிபொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன உள்ளிட்ட குழுவினருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

கோடீஸ்வர வர்த்தகரான சியாம் மொஹமட் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செயப்பட்ட முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன உள்ளிட்ட குழுவினருக்கே பிணை வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதிகளான லலித் ஜயசூரிய, குசலா சரோஜின் மற்றும் அமேந்திர சேனாரத்ன ஆகியோர் அடங்கிய மூன்று நீதிபதிகள் குழுவே நேற்று பிணை வழங்கியுள்ளது.

ஐந்து இலட்சம் ரூபாய் ரொக்கப்பிணை மற்றும் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் விடுவிக்கப்பட்டதுடன் பிணை நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் ஒவ்வொரு வாரமும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் இரகசிய பொலிஸ்க்கு சமுகமளிக்க வேண் டும்.

முன்னாள்பிரதிபொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தனவுடன் கைதுசெய்யப்பட்ட ஏனைய ஐவரும் மேற்குறிப்பட்ட பிணை நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கோடீஸ்வர வர்த்தகரானசியாம்மொஹமட்கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன உள்ளிட்ட குழுவினர், இரண்டு வருடகாலமாக சிறைவைக்கப்பட்டுள்ளமையினால அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் அந்த குழுவினருக்கு பிணை வழங்குமாறு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கோரி நின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (இ-5)

## சென்னையிலுள்ள சிறப்பு முகாமில் இலங்கைத் தமிழர் மீது தாக்குதல்

(சென்னை)

சென்னையில் உள்ள சிறப்பு முகாமொன்றில் தங்கவைக்கப்பட்டிருந்த 39 வயதான வை.ஸ்ரீஜெயன் எனும் இலங்கைத்தமிழர், தாக்குதலுக்குள்ளாகி தலையில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறப்பு முகாமில் உள்ள இருவர், இலங்கைத் தமிழர் கடந்த மீது ஞாயிற்றுக்கிழமை இரவு தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

குறித்த இலங்கையர், சிகிச்சைக்காக மகாத்மா காந்தி அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அவர் மீது தாக்குதல் நடத்திய இ.ஈஸ்வரன், பி.சிவசங்கரன் ஆகியோர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சில காலங்களாக மேற்படி இருவருக்கும் ஸ்ரீஜயனுக்கும் பணப்பரிமாற்றம் இருந்து வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மத்திய சிறைச்சாலையில் உள்ள சிறப்பு முகாமில் தற்போது 19 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளதுடன், இவர்கள் அனைவரும் இலங்கைத் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மகிந்தவின் முன்னாள் சோதிடரிடம் 8 மணித்தியாலங்கள் விசாரணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முன்னாள் சோதிடர் சுமணதாச அபயகுணவர்தனவிடம் எட்டு மணித்தியாலங்கள் பொலிஸார் நேற்று முன்தினம் விசாரணை நடத்தியுள்ளனர்.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினர் இந்த விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் வீடுகள், காணிகள், தோட்டங்கள், சொத்துக்கள் மற்றும் மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினருடன் நெருக்கமானவர்களினால் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் காணிகள் கொள்வனவு, வீடு அல்லது கட்டட நிர்மாணம் என்பனவற்றுக்கு சுமணதாசவின் சோதிட ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

காணிகள், வீடுகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பில் சுமணதாசவிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. இந்த விசாரணைகளின் போது சுமணதாச பல்வேறு முக்கிய தகவல்களை வெளியிட்டுள்ளதாக நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் காலை 9 மணி முதல் சுமணதாசவிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. இதேவேளை பிறிதொரு நாளிலும் சுமணதாசவிடம் விசாரணை நடத்தப்படவுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். (இ-5)

## அந்தியேட்டி அழைப்பிதழ்

20.05.2015 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் இராசேந்திரம் ஜெயச்சந்திரன்



அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 18.06.2015 நாளை வியாழக்கிழமை காலை 6 மணியளவில் தெனியம்மன் ஆலய மடத்தில் (சுப்பர் மடம்) நடைபெறும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓடை ஒழுங்கை, சவணாய்,
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

## செல்ஃபி



வலுத்துநேரன்



ந.யதுர்சன்



கஜி, சுழிபுரம்.



நிறோஜன், கிளிநொச்சி.





சன்யூ, பருத்தித்துறை



நிசான்,சிறி

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாயோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.
- திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சமூக சீர்திருத்தம் என்பது சகல துறைகளிலும் செய்யப்பட வேண்டும்

மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணைகள்; நீதிபதியின் உத்தரவு; ஜனாதிபதியின் அறிவுறுத்தல்; சட்டத்தரணிகளின் கொள்கை என்பன மன ஆறுதலையும் திருப்தியையும் தருகிறது.

மாணவி வித்தியாவை படுகொலை செய்தவர்களுக்கு விரைவில் தண்டனை கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. மாணவி வித்தியாவின் படுகொலையோடு சம்பந்தப்பட்டவர்களுக்கு அதி உச்ச தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்பதோடு எதிர்காலத்தில் இது போன்ற குற்றச்செயல்களோ அதி உயர்ந்த தண்டனைகளோ இருக்கக்கூடாது என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

எனவே, இத்தகைய குற்றச்செயல்களை தடுக்க வேண்டுமாயின் எமது சமூகத்தின் சகல மட்டங்களிலும் சீர்திருத்தம் என்ற விடயம் முன்னெடுக்கப்படுவது அவசியம்.

அதிலும் குறிப்பாக பாடசாலை மாணவர்களிடையே ஒழுக்கக் கல்வியின் முக்கியத்துவம்– மகிமை பற்றி எடுத்துரைப்பது அவசியமாகும். பொதுவில் சமகாலத்துப் பாடசாலைக் கல்வி என்பது பாடவிதானத்தை– பரீட்சைப் பெறுபேற்றை மையமாகக் கொண்டதாக இருக்கிறது.

அதிபர், ஆசிரியர்கள், கல்வித் திணைக்களம், பெற்றோர் என்ற தரப்பினர் பரீட்சைப் பெறுபேற்றை மையமாக வைத்தே தமது செயற்பாடுகளை நகர்த்துகின்றனர்.

இதனால் பரீட்சையில் எத்தனை மாணவர்கள் சித்தியடைந்தனர் என்ற கேள்வியும் அதற்கான பகுப்பாய்வும் ஒப்பிடுகைகளுமே நடந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் மாணவர்களில் எத்தனை பேர் மனித நேயத்தை, சமூக விழுமியத்தை, பண்பாட்டை, ஆன்மீகத்தை கற்றுத் தேர்ந்தனர் என்று எவரும் கணக்கெடுப்பதில்லை. இங்குதான் கல்வியின் அடைவு தோல்வி அடைகிறது. சமயபாடத்தில் அதிவிசேட சித்தி பெற்றிருக்கக் கூடிய ஒரு மாணவன் சமூக விழுமியத்தை கடைப்பிடிப்பதில் தோற்று விடுகிறான்.

இங்குதான் சமயம் வாழ்க்கைக்கான கல்வியாக அல்லாமல், உயர் பெறுபேற்றை எடுக்கக்கூடிய பாடமாக மாற்றம் பெறுகிறது.

எனவே, பாடசாலைகளில் மாணவர்களின் ஒழுக்க விழுமியம் தொடர்பில் அனைவரும் கூடிய கவனம் செலுத்துவதுடன் அதற்கான முக்கியத்துவத்தையும் கொடுத்தாக வேண்டும்.

இதேபோன்று எமது சமூகத்தில் உள்ள இளைஞர்களை வழிப்படுத்துவதற்கான திட்டமிடல்களும் அவசியமாகின்றன. இளைஞர் கூட்டத்திற்கான வழிகாட்டிகளாக பெரியவர்கள் இருந்தாக வேண்டும். எனினும் சமகாலத்து இளைஞர்கள் சமவயதுடனான நட்பைத் தவிர, பெரியவர்களின் அறிவுரைகளை–அனுபவங்களை பகிர்ந்து கொள்வதாகத் தெரியவில்லை.

எனவே, சமகாலத்து இளைஞர்களை வழிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் ஒழுங்குபடுத்தலும் அவசியமாகும். ஒவ்வொரு ஊரிலும் உள்ள சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்ற சங்கங்கள் என கிராம அமைப்புகள் முன்வந்து இளைஞர்களுக்கான கருத்தரங்குகள், தொழில் வழிகாட்டல்கள், உயர் கல்விக்கான வாய்ப்புகள் என்பவற்றை வழங்கும் போது இளைஞர்களுக்கு நல்ல சந்தர்ப்பங்கள் கிடைக்கும்.

எனவே, எமது மண்ணில் சமூக சீர்திருத்தத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் சகல துறைகளிலும் சீர்திருத்த முறைகள் அமுல்படுத்தப்படுவது கட்டாயம்.

# தேர்தல் தோல்வியை அறிந்துள்ள எதிர்க்கட்சிகள் அச்சத்தில்!

## அமைச்சர் ரஞ்சித் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தலொன்றுக்கு சென்றால் தோல்வியடைந்து விடுவோம் என அறிந்து கொண்ட எதிர்க்கட்சி தேர்தலுக்கு செல்ல அஞ்சி நம்பிக்கையில்லா பிரேரணை மற்றும் 20ஆவது குறித்து கதைத்து காலம் கடத்தி வருகின்றது என போக்குவரத்து அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

சிறிகொத்த கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

19ஆவது அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட குழுவை செயற்பட இடமளிக்காத எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் 20வது அரசியலமைப்பு திருத்தத்திற்கு எவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவார்கள் எனும் கேள்வி தற்போது எழுந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அதிகாரம் இருந்த போது அரசாங்கத்தின் சொத்துக்களை பயன்படுத்தி பெற்றுக்கொண்ட 58 இலட்ச மக்களின் ஆதரவிற்கு கிடைக்கும் பலன் என்ன என்பது குறித்து இன்று தேர்தலொன்றிற்கு சென்றால் அறிந்து கொள்ள முடியும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகிய அடுத்த கணம் நாடாளுமன்றத்தை கலைத்திருப்பின் எதிர்க்கட்சிக்கு எத்தனை ஆசனங்களை பெற்றுக் கொள்ள முடிந்திருக்கும் என்பதை சிந்திக்க முடிவதாகவும் அவர் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் அமர்த்தியது ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமையவே எனவும், அவருக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டமை தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைப்போர் அதை அறியாமல் இல்லை எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

கடந்த அரசாங்கம் ஜனாதிபதி தேர்தலின் போது இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான ஆயிரம் பஸ்களை தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தியது.

இதனால் இலங்கை போக்குவரத்து சபைக்கு ஆயிரத்து 425 இலட்சம் வழங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த அரசாங்கம் இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களின் நிலுவை சம்பளம், ஊழியர் சேமலாப நிதி ஆகியவற்றுக்காக 9 ஆயிரத்து 300 மில்லியன் ரூபா பற்றாக்குறையை வழங்கவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மக்களின் வரிச்சுமையை குறைப்பதற்கு தற்போதைய அரசாங்கம் கடன் பெற்றுக்கொண்டதே ஒழிய கடந்த அரசு போல் கடன் பெற்றுக்கொண்டு மக்களை சிரமத்திற்குள்ளாக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் மோசடி தொடர்பில் 40 ஆவணங்களின் பணிகள் நிறைவு பெற்றுள்ளதாகவும், ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கிடையிலுள்ள தொடர்பை உடைத்தெறிவதற்கு மேற்கொள்ளப்படும் சூழ்ச்சிகளை கருத்திற்கொண்டு தற்போதைய அரசாங்கம் தெளிவான பயணமொன்றை மேற்கொள்கின்றது எனவும் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## பட்டமளிப்புக்கு பதிவு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் 2014ஆம் கல்வியாண்டில் கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா விரைவில் நடைபெறவுள்ளது.

எனவே கற்கைநெறியை பூர்த்தி செய்த மாணவர்கள் எதிர்வரும் யூலை மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் பதிவாளருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு இயக்குநர் அறிவித்துள்ளார்.(ஏ)

## வடமாகாண முதலமைச்சர் விருது-2015

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக் களமானது கலாசார துறைக்கு பணியாற்றிய கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக மேற் படி விருதுக்கான ஆளுமை மிக்க கலைஞர்களைத் தேர்ந்தெடுக்கவுள்ளது.

எமது பிரதேசத்திற்குட்ட 60 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்கள் மேற்படி விருதுக்கு விண்ணப்பிக்கலாம். இவ் விருதுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தரிடம் விண்ணப்பங்களைப்பெற்று அதனைப் பூரணப்படுத்தி 20.06.2015 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என பண்பாட்டுத்துறை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ஏ)

## கிழக்கு மாகாண சபைக்கு புதிய எதிர்க்கட்சித் தலைவர்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபையின் புதிய எதிர்கட்சித் தலைவராக மாகாணத்தின் முன்னாள் கல்வி அமைச்சர் விமலவீர திஸநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண சபை இம்மாத அமர்வுக்காக நேற்று கூடிய போது அவைத் தலைவரான கலப்பதிகே சந்திரதாஸ இதை அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

அவைத் தலைவரின் இந்த அறிவிப்பையடுத்து கிழக்கு மாகாண சபையில் கடந்த 3 மாதங்களாக நீடித்த எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பான இழுபறிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே எதிர்க்கட்சி தலைவராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த சி.தண்டாயுதபாணி பதவி வகித்திருந்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபையின் ஆட்சியில் தற்போது இணைந்து கல்வி அமைச்சராக பதவியை பொறுப்பேற்ற சூழலில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி காலியானது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் கிழக்கு மாகாண சபையில் இணைந்துள்ள போதிலும் அதன் 13 உறுப்பினர்களில் 4 பேர் மட்டுமே தொடர்ந்தும் ஆளும்தரப்பு உறுப்பினர்களாக உள்ளனர்.

முன்னாள் அமைச்சர் விமலவீர திஸநாயக்க உட்பட 9 பேர் எதிர்க்கட்சியில் தனித்து சுயமாக செயல்படப் போவதாக ஏற்கெனவே அறிவித்திருந்தனர்.

எதிர்க்கட்சியில் தமது கூடுதல் உறுப்பினர் இருப்பது உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலே அவைத் தலைவர் விமலவீர திஸநாயக்கவை எதிர்க்கட்சி தலைவராக நியமிக்கும் அறிவித்தலை நேற்று சபையில் அதிகார பூர்வமாக விடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### இளமையிலேயே ஆன்மீகம்



✦ மனிதனின் மனம் கடுகுப்பொட்டலம் போன்றது. அந்தப் பொட்டலம் கிழிந்து கடுகு நாலாபுறங்களிலும் ஓடிவிட்டால் அதை ஒன்றுசேர்ப்பது சிரமம். அதுபோல, மனம் உலகவிடயங்களில் சிதறத் தொடங்கினால் அதைக் குவித்து ஒருமுகப்படுத்துவது சுலபமானதல்ல.

✦ சூரிய உதயத்திற்கு முன்னரே பணிகளைத் தொடங்கினால், அன்றைய பணிகள் யாவும் நன்றாக நடைபெறும். அதுபோல, சிறுவயதிலேயே ஆன்மிக விடயங்களைத் தெரிந்து கொண்டால் அது முதுமை வரை துணைநிற்கும்.

✦ கடவுளைத் தேடுபவன் கடவுளை அடைகிறான். செல்வத்தையும், செல்வந்தர்களையும் நாடுபவன் அவற்றையே அடைகிறான். வாழ்வில் எதை விரும்பி நாடுகிறார்களோ அதையே அடைவார்கள்.

✦ ஒளியை உணர்பவன் இருளையும் உணர்கிறான். பாவத்தைப் பற்றித் தெரிந்தவனுக்குப் புண்ணியமும் இன்னதென்று தெரிந்திருக்கும். குணத்தைப் பற்றி அறிந்தவன், குற்றத்தைப் பற்றியும் அறிந்திருப்பான்.

✦ பழங்கள் நிறைந்த மரம் எப்போதும் கனத்தினால் தாழ்ந்து வளையும். அதுபோல நீங்கள் பெருமை மிக்கவராக வாழவேண்டுமானால் அடக்கமும் பொறுமையும் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பர் மலை யங்கம்பன்ஸ் வி.கழக

# உதைபந்தாட்ட சுற்றுத்தொடர் சென்.மேரிஸ் அணி சம்பியன்



கம்பர்மலையங்கம்பன்ஸ்விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தி வந்த 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட தொடரில் சம்பியனாகியது நாவாந்துறை சென்.மேரிஸ் அணி.

கம்பர்மலையங்கம்பன்ஸ்விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்ட இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது.

இதில் முன்னணி கழகங்களான நாவாந்துறை சென்.மேரிஸ்– வதிரி டயமன்ஸ் அணிகள் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது நாவாந்துறை சென்.மேரிஸ்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக தங்கன் (சென்.மேரிஸ்) ,தொடர் நாயகனாக யூட் (சென்.மேரிஸ்), பிறேம்குமார்(டயமன்ஸ்), சிறந்த கோல்காப்பாளராக அலெக்ஸ் (சென்.மேரிஸ்), சிறந்த பின்கள வீரர் உஷாந்த் (டயமன்ஸ்), நன்னடத்தை வீரராக தவரூபன் (ஞானமுருகன்), வளர்ந்து வரும் வீரராக தனேஷ் (யங்கென்றீஸ்) தெரிவானார்.

முன்னர் நடைபெற்ற மூன்றாமிடத்துக்கான போட்டியில் இளவாலை யங்கென்றீஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை தோற்கடித்து மூன்றாமிடத்தை பெற்றுக் கொண்டது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மகளிர் விவகார பிரதி அமைச்சருமான திருமதி.விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

# பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கி வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி சம்பியன்




வடமாகாண பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற பெண்களுக்கான ஹொக்கிப்போட்டியில் சம்பியனாகியது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

வடமாகாணபாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கிப்போட்டி கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணி மோதிக்கொண்டது.ஆட்டத்தின் முதல் பாதி அனல் பறந்தது. பந்து அங்கும் இங்குமாக அல்லோல கல்லோல பட்டதுதான் மிச்சம். எந்த அணியாலும் கோல் கணக்கு ஆரம்பிக்கப்படவில்லை.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியிலும் முதல் பாதியின் போராட்ட குணம் இரண்டு அணிகளிலும் காணப்பட்டது என்று சொல்லிக் கொள்ளும் அளவுக்கு இருந்தாலும் முதல் கோலை பதிவுசெய்ய சற்று தீவிர முனைப்புக்காட்டியது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி. இதன் பயனாக ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் முன்கள வீராங்கனை வான்சலின் தனது அணிக்கான முதலாவது கோலினை அடிக்க ஆட்டநேர முடிவில் யாழ்ப்பாணக்கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் மல்லாகம் குளமங்கால் தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து ஸ்ரான்லி கல்லூரி அணி மோதிக் கொண்டது.இதில் மல்லாகம் குளமங்கால் தமிழ் கலவன் பாடசாலை அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றது. (கு)

# மாவட்டங்களுக்கிடையிலான கரப்பந்து; யாழ். மாவட்ட அணி சம்பியன்



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண மாவட்டங்களுக்கிடையில் நடத்தப்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்ட அணி சம்பியனாகியது.

கிளிநொச்சி கனகபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில் யாழ். மாவட்ட அணியும் மன்னார் மாவட்ட அணியும் மோதின.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்த இறுதிப்போட்டியில் முதற் சுற்றை மன்னார் மாவட்ட அணி 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாது சுற்றில் மீண்டெழுந்த யாழ். மாவட்ட அணி அந்தச் சுற்றை 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் மூன்றாவது சுற்றை 26:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது.

மீண்டும் தமது ஆதிக்கத்தை வெளிப்படுத்திய மன்னார் அணி நான்காவது சுற்றை 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது.

இதனால் விறுவிறுப்படைந்த ஐந்தாவதும் இறுதிச் சுற்றில் ஆக்ரோஷமாக ஆடிய யாழ். மாவட்ட அணி 15:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் தனதாக்கியதுடன் 5 சுற்றுக்களில் 3 சுற்றுக்களை தனதாக்கி யாழ். மாவட்ட அணி சம்பியனாகியது. (கு-23)


# புத்தூர் சிறிகுமரன் வி.கழக மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி

புத்தூர் ஸ்ரீ குமரகுருபரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுப்போட்டியில் நீர்வேலி ஐக்கியம் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலாவது அரை இறுதிப் போட்டியில் நீர்வேலி ஐக்கியம் எதிர் கோப்பாய் ஐக்கியம் ஆகிய அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நீர்வேலி ஐக்கியம் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன் அடிப்படையில் 12 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் அதிகபட்சமாக கபிலன் 35 பந்துகளில் 42 ஓட்டங்களையும் ஜெகன் 15 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் றொபின், சயந்தன் மற்றும் சியாம் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர். தொடர்ந்து 99 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய கோப்பாய் ஐக்கியம் 12 பந்துபரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்று 4 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

அணி சார்பில் அதிகபட்சமாக சியாம் 22 பந்துகளில் 37 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில்விஷோயன் 3 இலக்குகளையும் மற்றும் ஐங்கரன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். முதலாவது அணியாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது நீர்வேலி ஐக்கியம். 2 ஆவது அரை இறுதியில் கண் ணகி எதிர் றொக்கெட் ஆகிய அணிகள் எதிர்வரும் 20 ஆம்திகதிமோதவுள்ளன. (கு)

# தேசிய இளைஞர் விளையாட்டு கே.ரசிகரன் தங்கப் பதக்கம்




தேசிய இளைஞர் விளையாட்டு சம்பியன்ஷிப் போட்டியில் கே.ரசிகரன் தங்க பதக்கத்தினை பெற்றுள்ளார்.

தேசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றது.

இதில் 20 வயதுப் பிரிவு 10 ஆயிரம் மீற்றர் நடைப்பயிற்சியில் வவுனியா மாவட்டத்தினை சேர்ந்த கே.ரசிகரன் முதலாமிடத்தினை பெற்று தங்கப் பதக்கத்தினை பெற்றார்.

இவர் தனது நடைப்பயிற்சியினை 57 நிமிடம் 17 செக்கனில் முடித்தமை குறிப்பிடத்தக்கது. (கு)




வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் சம்பியன் பட்டம் பெற்ற சென்ஜோன்ஸ் கல்லூரி அணியினரை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்றத் தாக்குதல்...

புப் பிரிவில் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இதில் வீடியோ ஆதாரத்தில் காணப்பட்ட பிறவுண் வீதியைச் சேர்ந்த ஒருவரை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் யாழ்.நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். (எ-11)

## 15 பேர்...

பருத்தித்துறை ஓராங்கட்டை சந்திக்கு அருகாமையில் இடம்பெற்றது.

குறித்த பிரதேசத்திலிருந்து பதினைந்து பேரைக் கைது செய்த பொலிஸார் அவர்களில் பத்து பேர் மீது பொது இடத்தில் மது அருந்திய குற்றத்துக்காக வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் இன்று நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர். (எ-60)

## வாக்குறுதிகளை...

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைமைகளுக்கு இடையில் யாழ்.மார்ட்டீன் வீதியில் உள்ள தமிழரசு கட்சி அலுவலகத்தில் நேற்றுக் காலை சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

அந்த சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்கு பிறகு தமிழ் மக்கள் இந்த ஆட்சியை மாற்ற வாக்கு அளித்த பின்னர் உடனடியாக அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் கோரிக்கை விடுத்து இருந்தோம்.

இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட நிலங்களை விடுவித்து அவற்றை அதன் உரிமையாளருக்கு வழங்க வேண்டும்.

அவர்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும் என நாங்கள் பேசி தேர்தல் அறிக்கையில் நூறு நாள் திட்டத்தில் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டு வாக்குறுதி தரப்பட்டது போல அந்த நிலங்கள் விடுவிக்கப்படவில்லை.

ஆயிரம் ஏக்கர் நிலத்தை வலி. வடக்கில் விடுவித்து மீள்குடியேற்றம் செய்வோம் என ஜனாதிபதி, பிரதமர், முன்னாள் ஜனாதிபதி என எல்லோரும் வந்து விடுவிக்கப்பட்ட நிலங்களின் உரிமையாளர்களுக்கு அந்த காணி சான்றிதழ்கள் வழங்கும் போதும், எந்த மக்களிடம் இருந்து காணிகள் அபகரிக்கப்பட்டதோ அந்த காணிகளை அந்த மக்களிடமே மீள கையளிக்கப்படும் என வாக்குறுதி வழங்கி இருந்தார்கள்.

வாக்குறுதி அளித்தபடி ஆரம்பத்தில் ஆயிரம் ஏக்கர் நிலம் விடுவிக்கப்படும் என அறிவித்து இருந்தார்கள் வளலாயில் மற்றும் வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்ததில் ஒரு பகுதி நிலம் விடுவிக்கப் பட்டது.

வலி. வடக்கில் 564 ஏக்கர் காணி தான் விடுவிக்கப்பட்டுள்ளது. வளலாயில் ஒரு பகுதி 437 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டுள்ளது.

வளலாயில் விடுவிக்கப்படும் என முன்னைய அரசு விடுவிப்பதாக கூறிய நிலத்தையே தற்போதைய அரசு விடுவித்தது.

இன்னமும் 403 ஏக்கர் காணி விடுவிக்கப்படவில்லை வலி.வடக்கில் 6 ஆயிரத்து 371 ஏக்கர் நிலத்தில் 564 ஏக்கர் நிலம் மட்டுமே ஆட்சி மாற்றம் ஏற்பட்ட ஆறு மாத காலப் பகுதியில் விடுவிக்கப்பட்டுள்ளது விடுவிக்க பட்ட பகுதிகளில் மீள்குடியேறிய மக்கள் அந்தக் காணிகளை துப்புரவு செய்யவோ வேறு உதவிகளை செய்யவோ நிதி இல்லை என மீள்குடியேற்ற அரசு சொல்லி இருக்கின்றது.

அதே போன்று சம்பூர் பிரதேசத்தில் 876 ஏக்கர் நிலம் விடுவிக்கப்படும் என ஜனாதிபதியே வர்த்தமானியில் கையெழுத்து வைத்த பின்னரும் அங்கு மீள் குடியேற்றத்தை தாமதப்படுத்தப்படுகின்றது. மீள்குடியேறிய மக்களையும் பொலிஸார் அங்கிருந்து அப்புறப்படுத்தி உள்ளனர்.

தேர்தலுக்கு முன்னர் தந்த வாக்குறுதிகளை தேர்தலில் வென்ற பின்னர் அவற்றை நிறைவேற்றவில்லை.

அதேவேளை சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுவிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் கோரிக்கை விடுத்து இருந்தோம். பல இளைஞர்கள் 20 வருட காலத்திற்கு மேலாக எந்தவிதமான விசாரணைகளும் இன்றி சிறைகளில் வாடுகின்றார்கள். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட அந்த மாதத்திலேயே விடுவிக்கப்படுவார்கள் என ஜனாதிபதியும் பிரதமரும் எமக்கு வாக்குறுதி தந்து இருந்தார்கள் தற்போது ஆறுமாத காலமாகியும் இன்னமும் அந்த இளைஞர்கள் விடுவிக்கப்படவில்லை.

பட்டதாரி மாணவர்கள் வடக்கிலும் சரி கிழக்கிலும் சரி அவர்களுக்கான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை. அவர்கள் பல போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்கள்.

அவர்கள் பலர் வடக்கு கிழக்கில் உழைப்பற்றவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கும் வேலை வழங்க வேண்டும் என கோரி இருந்தோம்.

ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்தித்து இவை தொடர்பில் பேசி ஒரு முடிவை எட்ட வேண்டும் என இக் கூட்டத்தில் தீர்மானித்து உள்ளோம். 23 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் வேளையில் தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதியின்படி நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும், மீள்குடியேறியவர்களுக்கு உதவிகள் வழங்க வேண்டும் சிறையில் உள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் இத்தகைய அனைத்து விடயங்களையும் இந்த அரசுடன் பேச்சுக்கள் நடத்தி ஒரு முடிவை எட்ட உள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-9)

# புங்குடுதீவின் அபிவிருத்தி குறித்து அரச அதிபர் தலைமையில் மாநாடு நேற்று நடைபெற்றது



(புங்குடுதீவு)

புங்குடுதீவு பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக நேற்று யாழ்.அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் விசேட மாநாடு ஒன்று நடைபெற்றுள்ளது.

புங்குடுதீவு சர்வோதய மண்டபத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் வட மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவனும் கலந்து கொண்டார். புங்குடுதீவு கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலதரப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் பிரசன்னத்துடன் இக்கூட்டம் நடைபெற்றது.

இதில் பொது மக்கள் சார்பாக பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

* புங்குடுதீவு பிரதேசத்திலுள்ள மதுபான சாலையை மூடுதல்
* கேரதீவு-சங்குமாவீடி வீதியை விரைவில் புனரமைத்தல்
* வீதிகளுக்கு மின்விளக்கு பொருத்துதல்
* மாணவர்களின் நலன்கருதி விசேட பஸ் சேவை ஒன்றை 12 வட்டாரங்களுக்கும் இடையே மேற்கொள்ளல்.
* புங்குடுதீவு வைத்தியசாலையூடான விசேட போக்குவரத்து ஒன்றை மேற்கொள்ளல்.
* கிராம உத்தியோகத்தர்கள் தங்களின் பிரிவுகளில் தங்கி நின்று கடமை புரிதல்.
* புங்குடுதீவில் பொலிஸ் நிலையம் ஒ ஒன்றை அமைத்தல்.
* இரும்பு கொள்வனவில் ஈடுபடும் வாகனத்தை புங்குடுதீவுக்கு வர அனுமதி மறுத்தல்.
* விவசாயத்தை ஊக்குவித்தல்.
* இறைச்சிக்காக மாடுகள் வெட்டப் படுவதை தடுத்தல்.
* களவுகள், கொள்ளைகளை கட்டுப் படுத்தல்

போன்றவை தொடர்பாக பொது மக்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டு நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டது.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த அரச அதிபர் சகல விடயங்களும் உரிய தரப்புடன் தொடர்பு கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் என உறுதிப்படுத்தினார்.

இம்மாநாட்டில் வேலணை பிரதேச செயலர், ஆளுநரின் செயலாளர், பொலிஸ், கடற்படை உயர் அதிகாரிகள், கல்விப் பணிப்பாளர், பிரதேச சபையின் செயலாளர் என பலரும் கலந்து கொண்டனர். (எ)

## சந்திரிகாவை...

கட்சிக்கு மக்கள் ஆதரவை பெற்றுக்கொடுப்பார்.

மேலும் இவ் யோசனைக்கு சந்திரிகா குமாரதுங்க ஒரு போதும் மறுப்பு தெரிவிக்க மாட்டார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

## ஆதனப் பெயர் மாற்ற அறிவித்தல்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-21, கலீபா அப்துல் காதர் வீதியில் ஆதன இலக்கம் 153/06ன் என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் "மொகிதீன் பக்கீர் பெண் கச்சு உம்மா" என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை கொழும்பு மாவட்டம், 73/18, பன்சல்கென வீதி, மீதொட்டமுல்ல, வெல்லம்பிட்டிய முகவரியாகக் கொண்ட சாகுல் கமீட் மொகமட் முஸ்தபா, பிரசித்த நொத்தாரிஸ் எம்.எம்.சுல்தான் அவர்களால் 1954இல் எழுதப்பட்ட உறுதியில் குறிப்பிடப்படும் ஆதனம் முழுவதும் தனக்கே உரியதும், எவ்வித தங்குதடையின்றி நீண்டகால ஆட்சியுமென வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியும் எம்.எம்.எம்.ரமீஸ் முகதாவில் 29.06.2004ஆந் திகதி 572ஆம் இலக்க நன்கொடை உறுதியால் மொகமட் முஸ்தபா அகமட்டிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். மேலும் இவ்வாதனத்தை 153/6, கலீபா அப்துல் காதர் வீதியைச் சேர்ந்த தற்போது 73/18 பன்சல்கென வீதி, மீதொட்டமுல்ல, வெல்லம்பிட்டியாவில் வசிப்பவருமான மொகமட் முஸ்தபா அகமட் என்பவர் மொகமட் முஸ்தபா மொகமட்டிற்கு பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியும் எம்.எம்.மன்சிர் முகதாவில் 13ம் இலக்க 15/08/2010ம் திகதிய அறுதிஉறுதியால் வழங்கப்பட்டுள்ளது.

ஆதன விபரம்:- வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபை அவர்களின் வரைபட இலக்கம் 1616/04 - 22.05.2004ல் துண்டு-1 எனக் காட்டப்பட்ட நில.பர 00 குளி 16.76 இதற்கு எல்லை.

வடக்கு :-எம்.எஸ்.சுபைர், கிழக்கு:- ஒழுங்கை, தெற்கு:-எம்.எஸ்.மொகைடீன், மேற்கு:- அப்துல்காதர்

தற்போது இவ்வாதனத்தை மொகமட் முஸ்தபா மொகமட் தனது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது மொகமட் முஸ்தபா மொகமட் என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(சி-1301)

ஷைலோ Sylo ஐஸ் கிறீம் Ice Cream

Sylo Natural Ice Cream

சுவையுடன் ஆரோக்கியம் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உங்கள் உடல் ஆரோக்கியத்துக்கு தகுந்த ஐஸ்கிறீம் வகைகளை தயாரித்து வழங்கும் எமது நிறுவனம் நயினாதீவில் அன்னை நாகபூசணியின் திருவிழா காலத்தில் தற்காலிக விற்பனை நிலையத்தை அமைத்துள்ளோம்.

வனிலா, சொக்லேட், ஸ்ராபெரி, அப்பிள், பிளாக்கரண்ட, பட்டர்ஸ் கொச், கேசர், பிஸ்தா, சப்ரோன், புளூவெரி, ராஸ்பெரி, பெப்பிரிமெண்ட், பாதாம், புருட் அன்ட் நட்ஸ் மற்றும் Low sugar ஐஸ்கிறீம் மற்றும் மில்க் சொக் வகைகளை சுவைத்து மகிழ வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

Sylo Ice Cream

No.442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C-1299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்புக்கள்

புதியதோர் எதிர்காலத்தை நோக்கி...

எமது நிறுவனத்தின் புதிய கிளைகள் – கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் ஆரம்பிக்க இருப்பதால் O/L படித்துவிட்டு இருப்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்...

- ✓ வயதெல்லை 18 – 31
- ✓ சம்பளம் 15,000/= – 18,000/=
- ✓ தங்குமிடம் & உணவு வசதிகள் இலவசம்

(C-1280)

இன்றே தொடர்புகளுக்கு:- 077 336 6453 / 077 556 6226

(உங்கள் அனுமதிக்கு முந்துங்கள்)


## மரண அறிவித்தல்



### திருமதி சித்திரா துசாகரன்

கொக்குவில் மேற்கு நாகலிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சித்திரா துசாகரன் அவர்கள் 16.06.2015 நேற்றுச் செவ்வாய்க்கிழமை கொக்குவிலில் காலமானார்.

இவர் தேவசுந்தரலிங்கம் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் துசாகரன் (லண்டன்) அவர்களின் அன்பு மனைவியும் வினுஷனின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (771)

தகவல் : சி.தேவசுந்தரலிங்கம் (தந்தை)

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

021 20 52 024 / 077 61 28 424 / 077 92 28 739


## கருத்தரங்கு

பங்குச்சந்தையின் சமகாலப் போக்கு மற்றும் நிகழ்கால முதலீட்டு வாய்ப்புக்கள்

கருத்துக்கள் பின்வரும் தலைப்புகளில் பகிரப்படும். நாணயக் கொள்கை மீளாய்வு மற்றும் வட்டி வீத விளைவுகளும் தொகுதிக்கடன் பத்திரங்களின் முதலீட்டு வாய்ப்புக்கள் நம்பிக்கை அலகு முதலீட்டு மீளாய்வு பங்குச்சந்தை சமகாலப் போக்கும் மற்றும் பங்குத் தெரிவுகளும்.

வளவாளர் :- திரு. P.அசோகன்
தலைவர் - இலங்கை நம்பிக்கை அலகுகள் சம்மேளனம்.

எதிர்வரும் 20.06.2015 திகதி (சனிக்கிழமை) காலை 9.30 முதல் மதியம் 12 மணிவரை,

147-2/3, கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள (சத்திரச்சந்தி) கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ் கிளையில் நடைபெறும்.

0777 822 014 என்ற இலக்கத்திற்கு STOCK என SMS செய்து முற்பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

CSE COLOMBO STOCK EXCHANGE

(C-1300)



யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக...

Photo Quality



- ✱ பந்தல் பிறிண்டிங்
- ✱ பனர் பிறிண்டிங்
- ✱ பெயர் பதாகைகள்
- ✱ ஸ்ரிக்கர்கள்
- ✱ லைட் பதாகைகள்

அதிரடி விலைக்கழிவில்

ஜனா டிஜிற்றல் பிறிண்டிங்

Jana Digital Printing

(C-1298)

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.
T.P. 021 221 3233, 07707316…


## மகிந்த - மைத்திரியை...

போது இரண்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

மகிந்தவையும் மைத்திரியையும் இணைக்கும் முயற்சியில் ஈடுபடுவதற்காக ஆறுபேர்கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியினால் 100 நாள் திட்டத்தை அமுலபடுத்த முடியாவிட்டால், அமைச்சர்கள் பதவி விலகி சுதந்திரக் கட்சி அரசாங்கமொன்றை அமைக்க தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பிரதம வேட்பாளராக யாரை நியமிப்பது என்பது தொடர்பில் இழுபறி நிலை காணப்படும் நிலையில் மகிந்தவையும் மைத்திரியையும் இணைத்தால் இழுபறி நிலைக்கு தீர்வுகாண முடியும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் எண்ணுவதாக கூறப்பட்டது. (எ-11)

## பெண்ணின் சடலம்...

சேர்ந்த மரியதாஸ் உசாராணி (வயது 36) என்பவராவார். குறித்த பெண் மனநலம் குன்றியவராவார்.

தனது சகோதரியுடனேயே வசித்து வந்தார். நேற்று சகோதரி கடைக்குச் சென்றிருந்த சமயம் வீட்டிலிருந்த கயிற்றின் உதவியுடன் கிணற்றிற்குள் இறங்கியுள்ளார். மீண்டும் வெளியில் வர முடியாது தவித்துள்ளார்.

அந்த நிலையில் வீட்டிற்கு வந்த சகோதரி கிணற்றில் இருப்பதனை கண்டு வெளியில் எடுப்பதற்கு பெரும் முயற்சி எடுத்துள்ளார்.

முயற்சி பயனளிக்க வில்லை. நீரில் மூழ்கி குறித்த பெண் சடலமாக மீட்கப்பட்டார். மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## வருட இறுதியில்...

அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல இதனை நேற்று தெரிவித்துள்ளார்.

ஸ்ரீகொத்தாவில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர இந்த தகவலை வெளியிட்டுள்ளார். எனினும் மேலதிக தகவல் எதனையும் அவர் வெளியிடவில்லை.

அரசாங்கம் உலக நாடுகளுடன் மிகச் சிறந்த உறவைப் பேணி வருகின்றது.

எதிர்க்கட்சிகள் கூறுவதனைப் போன்று அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் இடையில் முரண்பாடுகள் கிடையாது.

புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதன் பின்னர் சில உலகத் தலைவர்கள் இலஙகைக்கு விஜயம் செய்துள்ளனர்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி போன்றவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

இந்த ஆண்டின் இறுதியில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களை அரசாங்கம் பழிவாங்கி வருவதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது.

எதனையும் மறைக்க இல்லையென்றால் ஏன் அவர்கள் அஞ்ச வேண்டுமென அவர் எதிர்க்கட்சியினரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

விசாரணைகளை நிறுத்துமாறு கோரி அவர்கள் நீதிமன்றினை நாடுவதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்த போதியளவு வளங்கள் கிடையாது. தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார். (எ-11)

## நயினைத் தாய்க்கு...

பூசையும் வாயு பட்சணி நாகம் வீதியுலாவும் இடம்பெறும்.

29 ஆம் திகதி இரவு சப்பறத் திருவிழாவும், 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை யாத்திரியர்களின் நலன்கருதி வழமை போன்று இம்முறையும் அமுதசுரபி அன்னதான சபை மற்றும் தாகசாந்தி நிலைய சேவை என்பனவும், போக்குவரத்துச் சேவை, மோட்டார் படகுச்சேவை, சுகாதார சேவை, சாரணர் சேவை, சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை, செஞ்சிலுவைச் சங்கத்தினரின் சேவை, மக்கள் நலன் புரிச் சங்கத்தினரின் சேவை என்பனவற்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-3,60)


## உடனடி வேலைவாய்ப்பு

Optimo International Pvt (Ltd) எமது நிறுவனத்தில் 10 உயர் பதவி வெற்றிடங்களுக்கு நிரந்தர ஊழியர்கள் இணைக்கப்பட உள்ளனர். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொண்டு உங்களுடைய தகவல்களை அளித்து நேர்முகத் தேர்வு நேரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.



- ■ பயிற்சியுடன் வேலைவாய்ப்பு என்பதால் முன் அனுபவம் அவசியமில்லை
- ■ பயிற்சிக் காலத்திலும் 15,000-25,000 வரை ஊக்குவிப்பு தொகையும் உண்டு.
- ■ O/L தகுதி உடையவர்களுக்கு விசேட வாய்ப்புகள் உண்டு.
- ■ வெளிமாவட்டத்தினருக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும்.

… 0779660885

(621)



15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...

எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...

STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA
WORK VISA - SKILLED MIGRATION – VISIT VISA

கனடா Express Entry Visa – தொழில்வாய்ப்புடன் குடியுரிமை(PR) Degree/Diplomaவுடன் குறைந்தது ஒரு வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்

Student VISA – UK, Australia, Spain New Zealand, Switzerland, Canada & Malaysia

FREE Assessment

SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions

ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள

www.sikaram.lk

Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004 / 021 222 00 11

(C-1303)


## விமானப்படை...

காலத்தில் விடுதலைப் புலிகளின் ஆர்.பி.ஜி தாக்குதலில் மயிரிழையில் உயிர்தப்பியவர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானப்படையின் புதிய தளபதியாக கடந்த திங்கட்கிழமை நியமிக்கப்பட்ட இவர், 1980 ஆம் ஆண்டுகளில் இருந்து போர் இடம்பெற்ற பகுதிகளில் உலங்கு வானூர்தி விமானியாகப் பணியாற்றியிருந்தார்.

1986 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி இவர் செலுத்திய பெல் 412 உலங்கு வானூர்தி விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

தள்ளாடியில் இருந்து வவுனியாவு[illegible] திரும்பிக் கொண்டிருந்த உலங்குவானூர்தியில் இருந்த இவர், பூவரசன்குளம் பகுதியில் விடுதலைப் புலிகளின் சிறிய குழு வொன்று வாகனத்தில் செல்வதை அவதானித்து அதன் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டார்.

விமானப்படை உலங்குவானூர்தியில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்ட போது, விடுதலைப் புலிகளும் பதிலுக்குத் தாக்குதல் நடத்தினர். இதன்போது விடுதலைப் புலிகளின வாகனத்தில் இருந்த ஒருவர் ஆர்.பி.ஜியினால் உலங்குவானூர்தி மீது தாக்குதல் நடத்தினார்.

இதனால் உலங்குவானூர்தியின் ஒரு இயந்திரம் சேதமடைந்து செயலிழந்ததால், இந்த உலங்கு வானூர்தி உடனடியாக வவுனியாவில் தரையிறக்கப்பட்டது. (எ-11)


## காணி குத்தகைக்கு தேவை

யாழ்.நகரை அண்டிய பிரதான வீதிகளில் முகப்பை கொண்டமைந்த காணி நீண்ட கால குத்தகை / வாடகைக்கு தேவை.

தொடர்பு கொள்ளவும் - 0776623824

(C-1294)



## French வகுப்புக்கள்

துரித பேச்சுப்பயிற்சி மொழிப்பெயர்ப்பு சேவை ஆவணங்கள், கடிதங்கள், French, English, Tamil Embassy Forms நிரப்பி கொடுக்கப்படும். (776)

Students Success Centre
320, Main st. Jaffna.

T.P : 077 99 36 140



வில்லுக்கு – அர்ஜுனன்
கவிதைக்கு – ஒரு பாரதி
நடிப்புக்கு – ஒரு சிவாஜி
ஸ்ரைலுக்கு – ஒரு ரஜனி
அளவையியலுக்கு ஒரு ...

(C-1302)

2016 - 2017

அளவையியல்

R.P.சர்மா

ஆரம்பம் :
இன்று மாலை 3.30 மணிக்கு
D.C.M. சுன்னாகம்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org